கொங்கு நாட்டுத் தனிப்பாடல்கள்



செ.இராசு

கொங்கு நாட்டுத் தனிப்பாடல்கள்

தொகுப்பாசிரியர்
புலவர் செ. இராசு எம்.ஏ., பிஎச்.டி.,
முன்னாள் தலைவர்
கல்வெட்டு தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு
கொங்கு பண்பாட்டு மையம்
59, பூண்டி வட்டச் சாலை,
பூலுவபட்டி,
திருப்பூர் - 641 602.

நூற் குறிப்பு

நூல் பெயர்		கொங்கு நாட்டுத் தனிப்பாடல்கள்
ஆசிரியர்		புலவர் செ. இராசு, எம்.ஏ., பிஎச்.டி., ஈரோடு
நூல் பொருள்		இலக்கியம்
பதிப்பு ஆண்டு		2019
மொழி		தமிழ்
நூலின் அளவு		11 செ.மீ. X 18 செ.மீ.
பக்கங்கள்		180
அச்சு எழுத்து		11 புள்ளி
பதிப்புரிமை		ஆசிரியருக்கு
விலை		ரூ.150/-
நூல் கிடைக்குமிடம்	:	1. கொங்கு பண்பாட்டு மையம், 59, பூண்டி வட்டச் சாலை, பூலுவபட்டி, திருப்பூர் - 641 602. 9003558855, 9789463780, 9865251555 2. கொங்கு ஆய்வு மையம், 'புலவர் பூங்குடில்' 58/2, பாலக்காட்டுத் தோட்டம், புதிய ஆசிரியர் குடியிருப்புப் பாதை, ஈரோடு - 638 011. 9790038380, 9500938384.
நூல் & அட்டை வடிவமைப்பு		வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் 29 நாச்சியப்பா வீதி II ஈரோடு - 638 001 போன் : 0424 - 2258511, 2258522

பதிப்புரை

வேழம் படைத்த சேர நாட்டின் நடுவணாக இருக்கும் வள்ளல் படைத்த கொங்கு நாட்டின் வரலாற்றுக் காவலர் பொன்மேழி சாத்தன் புலவர் செ. இராசு அவர்களின் கடின உழைப்பில் முதுமையின் மாணிக்கமாக இந்நூல் ''கொங்கு நாட்டுத் தனிப்பாடல்கள்'' பல்வகை இலக்கியங்களில் பரவி இருக்கும் இவ்வேளையில், தனித் தனியாக பல காலங்களில் இயற்றப்பட்ட பாடல்களை சேகரித்து அழிவிலிருந்து காப்பாற்றி அரிய நூலாக படைத்துள்ளார்.

புலமையால் மட்டுமின்றி ஆய்வாலும், சீரிய கடின உழைப்பாலும் ஆசிரியர் பல கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், பட்டயங்கள் மற்றும் ஆவணங்களைக் காத்ததுபோல் இந்நூல் வாயிலாக தனிப் பாடல்களையும் பாதுகாத்து விட்டார். பெரும் வரலாற்று சேவையில் ''கொங்கு பண்பாட்டு மையத்திற்கு'' இந்நூல் பதிப்புச் செய்ய வாய்ப்பு வழங்கியதற்கு என்றும் நன்றியுடன் நினைவில் கொள்வோம்.

கொங்கு பண்பாட்டு மையத்தின் வளர்ச்சியில் முக்கிய மற்றும் முதல் பங்கு புலவர் செ. இராசு அய்யாவையே சேரும். நான் யார் என்றே தெரியாத போதும், நான் தொலைபேசியில் அழைத்து ஒவ்வொரு சலங்கையாட்ட நிகழ்விடம் பற்றியும், குறிப்பு கேட்டபோதெல்லாம் தனது உடல்நிலையும் பொருட்படுத்தாது, பல வரலாற்றுத் தகவல்கள் கொடுத்துதவி வந்தார். அதை வைத்து உள்ளி விழவு என்கிற சலங்கையாட்டத்தை சங்க காலத்தில் உள்ளது போல் ஒரு முத்தமிழ் கலையாக மாற்றி பெரும் வெற்றி கண்டோம்.

அந்த வெற்றி எங்களை இன்று உலகம் முழுவதும் 450 நிகழ்வு களுக்கு மேல் கொங்கு நாட்டின் அரும் கலையை அரங்கேற்றியுள் ளோம். உலகின் தொன்மையான கொங்கு நாட்டு இசையையும்,

நடனத்தையும் உலகறியச் செய்வோம் என்பதே நாங்கள் உங்களுக்குப் படைக்கவுள்ள காணிக்கை.

பின்னாளில் அவரைச் சந்தித்துப் பேசியபோது அவர் தீரன் சின்னமலை பிறந்தநாள், இறந்த நாள் கண்டுபிடித்தது, அறச்சலூர் இசைக் கல்வெட்டு கண்டுபிடித்தது, அவரின் கேரளா மற்றும் யாழ்ப்பாண பயணங்களைப் பற்றியெல்லாம் கேட்ட பொழுது மெய்சிலிர்த்துப் போவேன்.

மேலும் இவரது உதவி ஆய்வாளர்கள் தூரன் வேலுச்சாமி மற்றும் தீரன் பொன்னுச்சாமி ஆகியோரும் பெரும் உதவியாக பண்பாட்டு மையத்தைப் பட்டை தீட்டிக் கொண்டுள்ளார்கள்.

இந்த நூலில் கொங்கு நாட்டுக் குடிமக்களின் வீரம், புலமை, பக்தி, ஈகை, கற்பு என பல செய்திகள் பதிவு பெற்றுள்ளது பெரும் சிறப்பு. கொங்கு பண்பாட்டு மையம் தன் சலங்கை வீரர்கள் மூலம் புலவர் இராசு அய்யா அவர்களின் வரலாற்று ஆய்வை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்வோம் என உறுதி கூறுகிறேன்.

மேலும் பண்பாட்டு மையத்தின் முன்னோடிகளான தவத்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு. குமரகுருபர சுவாமிகள், திரு.ஈ.ஆர். ஈஸ்வரன், திரு.K.K.C. பாலு, திரு.மாடிக்கோவில் செல் வக்குமார் மற்றும் அனைத்து சலங்கை வீரர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னும் புலவர் இராசு அய்யாவின் பல புதிய நூல்களை கொங்கு பண்பாட்டு மையம் வெளியிட மதுக்கரை செல்லாண்டியம்மன் அருள்புரிய வேண்டும் என வேண்டி

ஆதன் பொன் செந்தில்குமார்
கொங்கு பண்பாட்டு மையம்,
59, பூண்டி வட்டச் சாலை,
பெருமாநல்லூர் சாலை,
பூலுவபட்டி,
திருப்பூர் - 641 602.
9003558855

என்றும்
புலவர் செ. இராசு அய்யாவின்
மாணவனாய்
ஆதன் பொன் செந்தில்குமார்

முன்னுரை

100 பாடல்கள் கொண்ட தமிழ் இலக்கியம் சதகம். 10 பாடல்கள் கொண்டது பதிகம். ஒன்பது பாடல்கள் கொண்டது நவகம். எட்டுப் பாடல்களை உடையது அட்டமங்கலம். ஐந்து பாடல்களை உடையது பஞ்சகம். அதுபோல ஒரு பாடல் உடைய தனிப்பாடலுக்கு ஒரு பெயர் இல்லாவிடினும் ''தனி'' என்ற அடைமொழியே அதன் சிறப்பை விளக்கும்.

தனித் தன்மை வாய்ந்தது, தனக்கு நிகர் இல்லாதது என்பதை 'தனி' என்ற அடைமொழி விளக்குகிறது. எனவே தனி என்பது ஒற்றை எண் என்பதைக் குறிக்காமல் அப்பாடலின் சிறப்பை விளக்குவது எனலாம்.

இந்நூலில் 257 தனிப்பாடல்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு வரலாறு உண்டு. எப்பொழுது யார் எதற்காகப் பாடினார்கள் என்பது ஒரு வரலாறுதான். மிக நீண்ட பாடலோ, ஒன்றுக்கு மேற்பட்ட தொடர்நிலைப் பாடல்களோ இந்தச் சூழ்நிலையில் போடப்பட்டிருக்கலாம். அவை இங்கு சேர்க்கப்பட வில்லை. ஒரு கல்வெட்டுப் பாடல் தவிர அனைத்துப் பாடல்களும் 4 வரிப் பாடல்களே.

12,14,16 சீர் கழிநெடில் ஆசிரிய விருத்தப் பாடல்கள் இடம் காரணமாக பிரித்து 16 வரிகளில் இங்கு பதிப்பிக்கப்பட்டிருந்தாலும் அவை 4 வரிப் பாடல்களேயாகும். பாடல்கட்கு பாடப்பட்ட காரணம் கூறப்பட்டுள்ளது.

இந்நூலில் உள்ளவை மூன்றில் இரண்டு பகுதி ஆசிரிய விருத்தப் பாடல்கள். ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதி வெண்பா. பெரும்பாலும் நேரிசை வெண்பா. ஒரு சில கட்டளைக் கலித்துறை. ஒரு பாடல் மட்டும் ஆசிரியப்பா.

இலக்கியம்

தனிப்பாடல் ஆயினும் சிலவற்றில் கொங்கு இலக்கியம் பற்றிய செய்திகள் இருப்பது சிறப்புக்குரியது. அவற்றுள் சில புதிய செய்திகள்.

இலக்கியம்	ஆசிரியர்
அப்பிரமேயர் தலபுராணம்	இளையான் கவிராயர்
அவினாசி மான்மியம்	இளையான் கவிராயர்
கதித்தமலைப் பதிகம்	நாகப்ப கவுண்டர்
கதித்தமலை தங்கச்சிந்து	நாகப்ப கவுண்டர்
கருணாகர மாலை	தி.அ. முத்துசாமிக்கோனார் (பதிப்பாசிரியர்)
செங்கோடன் அட்டமங்கலம்	நசியனூர்ப் புலவர்
தக்கை இராமாயணம்	எம்பெருமான் கவிராயர்
திருச்செங்கோட்டுக் கலம்பகம்	சுந்தரமுதலியார்
திருநீற்றுப் பதிகம்	எம்பெருமான் சாமந்தன்
நல்லதம்பிச் சர்க்கரை காதல்	வீரபத்திரக் கவிஞர்
நல்லதம்பி நான்மணிமாலை	அப்துல் சுக்கூர் சாயபு
பூந்துறைப் புராணம்	காளியண்ணப் புலவர்
மோரூர் வருக்கக்கோவை	படிக்காசுப் புலவர்

பட்டக்காரர்கள்

கொங்கு நாட்டுப் பட்டக்காரர்கள் நால்வர். அவர்கள் காடையூர் காங்கேய மன்றாடியார், பழையகோட்டை சர்க்கரை மன்றாடியார், காங்கேயம் பல்லவராயர், சங்கரண்டாம்பாளையம் வேணாடுடையார் ஆகியோர். இவர்கள் தொடர்பான பல பாடல்கள் உள்ளன. அவற்றுள் பழையகோட்டைப் பாடல்கள் மிக அதிகம். அவை தனியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. 60 பாடல்களில் பழையகோட்டை பற்றிய பல செய்திகள் இடம் பெறுகின்றன. அவர்களின் கொடை, பக்தி, வீரம் விளக்கப் பெற்றுள்ளது.

பிற தலைவர்கள்

பட்டக்காரர்கள் அல்லாமல் சில உள்ளூர்த் தலைவர்கள் ஈங்கூர், எழுமாத்தூர், கம்புளியம்பட்டி, கவுண்டம்பாளையம், கீரனூர், குமரமங்கலம், கொடுமணல், சித்தளந்தூர், தலையநல்லூர், நசியனூர், பரமத்தி, பூந்துறை, மொளசி, மோரூர் முதலிய பல ஊர்களில் வாழ்ந்து ஊர் நிர்வாகம் செய்துள்ளனர். அவர்களைப் பல புலவர்கள் பாடியுள்ளனர். அவர்கள் பல புலவர்களை ஆதரித்துப் போற்றியுள்ளனர்.

இவர்களைப் பற்றிய பல பாடல்களில்

''மூவேந்தர் சூட்டும் முடி''

''மவுலிமுடி சூட்டினாரே''

போன்ற பல தொடர்கள் வரும். அரசர்கட்குச் செய்த உதவிகட்காக மிகவும் சிறப்பித்துப் பாராட்டப்பட்டது இவ்வாறு கூறப்பட்டுள்ளதே யன்றி முடி சூட்டப்படவில்லை என்பதை அறியலாம்.

மகளிர்

கொங்கு மகளிர் பலர் புலவரை ஆதரித்துப் போற்றிய புரவலர் களாகவும், பாடல் இயற்றும் வல்லமையுடைய புலவர்களாகவும் விளங்கியது பாடல்கள் மூலம் தெரிய வருகிறது.

பழையகோட்டை முத்தாத்தாள், தலையநல்லூர்ச் சின்னம்மையார், கவுண்டம்பாளையம் பாம்பண்ணன் தாயார் போன்றோர் புலவர்களை ஆதரித்துள்ளனர்.

திருச்செங்கோடு அழகுநாச்சி, பழையகோட்டை வள்ளியாத் தாள் போன்றவர்கள் புலவர்களாக விளங்கியுள்ளதை அவர்கள் பாடல் மூலம் அறியலாம்.

வள்ளியாத்தாள் தன் பெயரை வள்ளி என்று கூற அஞ்சி ''கொம்பொடிந்த வெள்ளியாத்தாள்'' என்பாராம்.

குதிரைச்செய்திகள்

கொங்கு நாட்டுச் செப்பேடு பட்டயங்களில் கொங்குத் தலைவர்கள் ''பரிக்கு நகுலன்'' ''பரிமேல் நகுலன்'' என்று பாராட்டிக் கூறப்பட்டுள்ளனர்.

பாண்டவர் ஐவரில் நகுலன் குதிரை ஏற்றத்தில் சிறந்து விளங்கினான் என்பதே இதற்குக் காரணம்.

ஒருவர் தயிர் அன்னத்தைத் தாளியில் பிசைந்து வைத்துக் குதிரையை உண்ணச் செய்வாராம். ஒரு பட்டக்காரர் தன்னுடைய கரிய குண்டுக் குதிரையில் (ஆண் குதிரை) ஏறி ஒரே நாளில் கொங்குச் சிவாலயம் ஏழையும் வழிபட்டாராம். மற்றொருவர் குதிரையில் பயணம் செய்து 9 நாழிகையில் (3 மணி 36 நிமிடம்) பழனி சென்றடைந்தாராம். ஒரு பாடல் குதிரையை எப்படிப் பயணத்திற்குத் தயார் செய்வது என்பதை விளக்கமாகக் கூறுகிறது.

ஒருவர் தோட்டத்தில் கருது தின்னும் குருவிகளை விரட்ட கவண் வீசிக் கொண்டு குதிரையில் நின்று கொண்டே உத்தியில் பயணம் செய்தாராம்.

பழையகோட்டையில் பத்து நல்ல சுழியுடைய குதிரையை 200 பொன் கொடுத்து திப்பு சுல்தான் வந்து வாங்கியதையும், பழைய கோட்டையில் சைவச் சாப்பாடு சாப்பிட்டதையும் ஒரு பாடல் கூறுகிறது.

பழைய கோட்டைப் பெண்களும் குதிரைச் சவாரி செய்வர். ''நஞ்சையன் பத்தினி வஞ்சியாத்தாள் அவர் நல்ல குதிரைச் சவாரி செய்வார்'' என்பது ஒரு பாடல் பகுதி.

களவிலும் கவிதை வரும்

கவுண்டம்பாளையம் நஞ்சயப் புலவர் தன் புதிய வேட்டியைப் பறி கொடுத்தார். கொடுமணல் நாச்சிமுத்துப் புலவர் தேடிய பொருளை இழந்தார். மடவளாகம் லட்சுமண பாரதி நீலம்பூர் கோயிலில் செருப்பைப் பறி கொடுத்தார். மூவரும் அப்போது பாடிய பாடல் இடம் பெற்றுள்ளது.

சில அதிசய நிகழ்வுகள்

சமயச் சான்றோர், புலவர்கள் நிகழ்த்தியதாகச் சில அற்புத நிகழ்ச்சிகளைச் சில பாடல்கள் கூறுகின்றன.

கல் இடபம் (நந்தி) கடலை தின்றது

பட்ட மரம் தழைத்தது

மழைபெய் எனப் பெய்தது, நில் என நின்றது

கடிவாயில் பாம்பு நஞ்சு உறுஞ்சியது

பிரம்படியால் பயித்தியம் நீங்கியது

என்பன அவற்றுள் சில.

நிறைமொழி மாந்தர்

நிறைமொழி மாந்தர் கூறுவதே மந்திரம். அவர்கள் விரும்பிக் கூறினும் வெகுண்டு கூறினும் அது நடக்கும் என்பர்.

ஒரு புலவர் பாட உலோபியின் நெல்போர் வெந்தது

பூசைக்கு தேங்காய் தராத தென்னை காய்ப்பதை நிறுத்தியது

புலவரை இகழ்ந்து மற்றொருவர் ஆடும் மாடும் வீடும் இழந்து வறுமை ஆனார்.

வரலாற்றுச் செய்திகள்

☆ தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாட்டுடன் தொண்டை நாடு கொங்கு நாடு சேர்த்து ஐந்து பிரிவுகளை உடையது.

☆ சேரர்கள் சேலம், கரூர், தாராபுரம், மூலனூர் ஆகிய நான்கு ஊர்களுக்கு வஞ்சி என்று பெயரிட்டனர்.

☆ சூரிய காங்கேயன் ஆறகழூர் வாணனை கைது செய்து சுந்தர பாண்டியன் முன் நிறுத்தினார்.

☆ பூந்துறை வாரணவாசி தாரமங்கலம் கட்டி முதலியை வென்றார்.

☆ தளவாய் இராமப்பய்யன் கொங்கு பாளையக்காரர் பட்டக்காரர் களைச் சங்ககிரியில் சிறை வைத்தார்.

☆ காலிங்கராயன் அணை, சேடர்பாளையம் ராஜ வாய்க்கால் போன்ற செய்திகள்.

☆ தீரன் சின்னமலை பற்றிய செய்திகள்.

★ ஆதித்த சோழன் (871-907) கொங்கு 'சேர நாட்டுப் பாதையைச் செப்பனிட்டு இராசகேசரிப் பெருவழி' என்று பெயரிட்டது.

ஆடு, மாடு, குதிரை நோய் தீர்த்தல், திருச்செங்கோட்டில் பொன் வேய்ந்தது, இரு கையிலும் கத்திச் சண்டை செய்தல் போன்ற அரிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

கல்வெட்டு, செப்பேடுகளில் உள்ள தனிப் பாடல்களும் நூலில் இடம் பெற்றுள்ளன. சிலேடை, யமகம், எண்ணலங்காரப் பாடல்கள் உள்ளன. சந்தப் பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன.

பொதுவாக இந்நூல் பாடல்கள் கொங்கு நாட்டுப் புலவர்கள், வரலாறு, இலக்கியம், சமுதாயம், வாழ்வியல், வழிபாடு போன்ற பல செய்திகளின் களஞ்சியமாகத் திகழ்கிறது.

நூல் வெளியிடும் பொறுப்பை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட கொங்கு பண்பாட்டுக் காவலர் திருப்பூர் ஆதன் பொன் செந்தில்குமார் அவர்கட்கு நெஞ்சார்ந்த நன்றி.

குறித்த காலத்தில் சிறப்பாக நூலாக்கம் செய்த ''வாழ்க வளமுடன்'' அச்சகத்தாருக்கு நன்றி.

ஈரோடு,
01.08.2019

வரலாற்றுப் பணியில்
புலவர் **செ. இராசு**

பொருளடக்கம்

பக்கம்

தெய்வம்

1.	பாரதித்தாய் காப்பாள்	13
2.	பாரிசநாதன் பதம்	13
3.	ஆறுமுகன் நம்மை அளிப்பான்	14
4.	ஆத்தாள் அருள் பெற்றால்	14
5.	சிவன் தொண்டீசன் ஆகலாமா?	15
6.	வாகீசுவரரை வணங்கினால்...	15
7.	சென்னிமலை வேலவர்	16
8.	திருநீற்றுப் பதிகம்	16
9.	பசுவின் தெய்வீகம்	17
10.	புரக்க இது சமயம்	17

நாடு, ஊர்

11.	தமிழ்நாடு ஐந்து	18
12.	கொங்கு அரசன்	18
13.	கொங்கு நாட்டு எல்லை - 1	19
14.	கொங்கு நாட்டு எல்லை - 2	19
15.	கொங்கேழ் தலங்கள்	19
16.	வஞ்சி நகர்கள்	20
17.	பூந்துறை நன்னாடு	20
18.	வளம் மலி பூந்துறை	22
19.	தமிழ் வளர் பூந்துறை	22

20. தான தர்மம் மிகு பூந்துறை 22
21. கொங்கு நாட்டின் கண் 23
22. சென்னிகிரி அருள் பூந்துறை 23
23. பூந்துறை நாடு அதிகம் 23
24. தன் ஊரின் அபிமானம் 23
25. வெள்ளோட்டு விநாயகர் 24
26. அரசடி விநாயகர் 24
27. பள்ளிக் கூடத்து விநாயகர் 25
28. சருவலிங்கர் 25
29. பாடகவல்லி 25
30. சென்னிமலை வேலவர் 26
31. தண்டபாணி 27
32. ஆதிநாராயணப் பெருமாள் 27
33. அண்ணன்மார் 33
34. எங்கள் குல இராசாக்கள் 28
35. இராசாக்கள் சுவாமி 28
36. கருப்பண்ணன் 29
37. மாரியம்மன் 29
38. சருவீசர் வாழும் தலம் 30
39. வெள்ளோட்டு வளம் 30
40. வெண்மை ஓடை 30
41. வெள்ளோட்டு மக்கள் 30

பல்சுவை

42. அப்பிச்சிமார் மடம் 31
43. மாணிக்க வாசகர் மடத்து விருந்து 32
44. சோறு கண்ட மூளி யார்? 33

45. காவிரி கரை கடவாதே 34
46. கம்பருக்குக் கல்யாண வரி 34
47. காளியண்ணா நாவலன் புகழ் 35
48. காக்கும் காராளர் கை 36
49. என்றும் உழவே இனிது 36
50. பட்ட மரம் தழைத்தது 37
51. வேட்டி பறி போனது 37
52. பணம் போனது - பாட்டு வந்தது 38
53. புலி கொன்ற எருமைக் கன்று 38
54. சத்திரியன் - நாவிதன் சிலேடை 39
55. ஓலைச் சுவடிக்கும், ஓணானுக்கும் சிலேடை 40
56. வரடி கல்லுக்கும், தாசிக்கும் சிலேடை 40
57. பாலபாரதி பாடல் 41
58. நெற்போர் வெந்தது 41
59. கருணாகர மலை அச்சானது 42
60. கருணாகர மாலை நூற்பயன் 43
61. அவிநாசி மான்மியம் 43
62. அப்பிரமேயர் தல புராணம் 43
63. கல் நந்தி கடலை தின்றது 44
64. செருப்புத் திருடியவன் 44
65. புலவர் இட்ட சாபம் 45
66. ஏன் காய்த்தாய் தென்னை மரமே? 45
67. பெய் எனப் பெய்யும் - நில் என நிற்கும் 46
68. ஆதி கம்பன் எனச் சொல்லலாம் 47
69. சூல் அறியாத ஆண்கள் 47
70. ஈரோட்டு மகளிர் இயல்பு 48

71. கார்மேகக் கவிஞரைக் காண வந்தேன் 49
72. வீமணக்கவி மொழி அமுது 50
72.அ. வசை அல்ல வாழ்த்தே 50

கோயில் திருப்பணி, கொடை

73. நாட்டு வேலன் நற்கொடை 51
74. காராளர் வேலன் பணி 51
75. செட்டியாக் கவுண்டர் திருப்பணி 52
76. கருவூலம் காத்த சுப்பராயன் 53
77. அர்த்தநாரீசர்க்கு அருங்கொடை 53
78. இருப்புலி இளையான் திருப்பணி 53
79. பருத்தி நாட்டார் கொடை 55
80. காலிங்கராயன் கொடை 55
81. குப்பண்ணன் கொடைகள் 56
82. முளசைக் கண்ணர் பணி 56
83. குறைபணி முடித்த குமரபுரியார் 57
84. குமார சுவாமியின் விமானத் திருப்பணி 57
85. பொன் தகடு வேய்ந்த புரவலர் 58
86. இளையான் அருஞ்செயல் 58

பழையகோட்டை மரபு

87. ஏன் சர்க்கரை பட்டம் வந்தது 60
88. சர்க்கரையைப் பாடலாம் 61
89. ஓடினான் பொன்னிக்கோன் 61
90. பாண்டியன் சூட்டிய முடி 63
91. அழகன் சர்க்கரை பட்டாபிஷேகம் 63
92. முடி சூடிய கரியான் சர்க்கரை 64

93.	பட்டக்காரர் பட்டாபிஷேக நாள்	64
94.	கந்தன் சர்க்கரை கொடை	65
95.	சமையல்காரனை மதித்த சர்க்கரையார்	66
96.	நல்மனமுடைய நாயகர்	67
97.	கங்கா காசி யாத்திரை	68
98.	பிரம்படி பைத்தியம் போக்கும்	69
99.	கைப்பிரம்பின் மகிமை	69
100.	இரு கையாலும் கத்திச் சண்டை	70
101.	சவுக்கடி பொறுத்த சர்க்கரையார்	70
102.	சிவமலைப் பாதை	71
103.	பெரிய வேட்டை நின்றது	72
104.	சிவமலைக் கும்பாபிஷேகம்	72
105.	அதிசயக் குதிரைச் சவாரி	73
106.	சர்க்கரையும் காரும் சரி	74
107.	பேரையே சொல்லிப் பிழை	74
108.	காதல் இலக்கியம் பெற்றவர்	75
109.	முத்தாத்தாள் உபசரிப்பு	75
110.	கால்நடை நோய் தீர்ப்பவர்	76
111.	தேவி சக்கரம் பலம் சேர்த்தவர்	76
112.	நஞ்சு உறுஞ்சிய நாகம்	77
113.	பெயர் சொன்னால் போதும்	77
114.	பால்காரன் பெற்ற முத்தி	78
115.	வழக்குத் தீர்க்க வருக	79
116.	பூரித்து விருந்திட்ட புண்ணியவான்	79
117.	சர்க்கரை மரபின் அட்டாவதானி	80
118.	நான்மணி மாலை பெற்ற நல்லதம்பி	81

119.	ஒரு துரை ஆறு துரையானார்	82
120.	புலவர்க்கு அளித்தோரே புகழ் பெறுவர்	82
121.	இயல்பு திரியாதவர்	83
122.	சோமன் சர்க்கரை பக்தி	84
123.	வலிமை கொண்ட நல்ல சேனாபதி	85
124.	கறவைப் பசு கொடுத்தார்	85
125.	இன்னும் கறந்து குடிக்கின்றேன்	86
126.	இவற்றை எங்கு கற்றார்	86
127.	கருட கம்ப அபிஷேகம்	87
128.	சதுரங்கம் வல்ல சர்க்கரையார்	87
129.	கொற்றவேல் சர்க்கரையார் பட்டாபிஷேகம்	88
130.	பயிரன் சர்க்கரையார் அரிய பண்பு	89
131.	குடும்ப பாரம் தாங்கிய தனையன்	90
132.	குதிரையில் பழனிப் பயணம்	90
133.	திப்பு வாங்கிய குதிரை	91
134.	நல்லதம்பி பெற்ற பெரும்புகழ்	93
135.	குட்டம் தீர்த்த குமரன்	93
136.	எண்ணம் பலித்தது	93
137.	பைத்தியம் தீர்த்த சண்டிகாதேவி	93
138.	காரையூர் திருமதில் திருப்பணி	94
139.	குதிரைக்குப் பாத காணிக்கை	95
140.	முன்னவர் புகழ்	96
141.	வசை போல் வாழ்த்து	96
142.	வெற்றி தந்த தேவி	97
143.	வெற்றியால் வந்த தேவி	98
144.	காய்ச்சிய நெய்யில் கை விட்டார்	98

145. வித்துவான்கள் தொண்டன் 99
146. கைச் சிரங்கை நீக்கு 100
147. சம்பந்தச் சர்க்கரை யார்? 101
148. தாலி கொடை தந்தார் 101
149. காவல் விடுக காவலரே 102
150. தென்னிலையில் வென்ற தீரர் 103
151. பரதேசி மந்திரம் கற்றவர் 103
152. செம்மறியாடு விற்று சிவமலைத் திருப்பணி 104
153. அஞ்சு பட்டுச் சோமன் அளி 105
154. பொன் பெறாத புலவர் எவரும் இல்லை 106
155. சொன்னமலையால் அடித்து விட்டான் 106

பெருமைச் சுவடுகள்

156. மூவேந்தர் சூட்டும் முடி 107
157. எழில் சுப்பராயன் எவன்? 107
158. காதில் கடுக்கன் பூட்டியது ஏன்? 108
159. கம்பும் பொன்னும் அருள்க 109
160. கீரனூர் சென்னிமலை பூபன் 109
161. கருப்பண மகிபாலன் வாழ்க 110
162. மேழி விருதாளர் செங்கோடன் 111
163. பெத்தான் செல்லப்பன் பெரும்புகழ் 112
164. பனங்காட்டுச் சின்னய்யன் பண்பு 113
165. அன்னம் இட்ட சின்னம்மாள் 114
166. கோவுக்கு அழகு குப்பண்ணன் 114
167. பொன்னர் சங்கர் உறவு 115
168. படிக்காசுப் புலவர் பாடிய நூல் 115
169. தந்தச் சிவிகை தந்தார் 116

170. செந்தமிழ்க்கு வேளுக்குறிச்சி 116
171. நாகப்ப கவுண்டருக்கு வாழ்த்து 117
172. நல்ல தம்பியா? 118
173. படைத் தலைவர் பதினொருவர் 118
174. ஆறைவாணன் புகழ் 120
175. வணங்கா முடியும் வணங்கியது 120
176. செப்பேடு பெற்ற செம்மல் 121
177. கொடுமணல் பொன்னையன் 121
178. வாழிய சின்னய்யன் 122
179. கீரனூர் தேவண பூபதி 123
180. தரும வேளாளர் 124
181. சேர குலத்தார் சிறக்கும் கொடுமணல் 125
182. மூலனூர் சேரிலான் குலச் சிறப்பு 125
183. எழுமாதைப் பொன்னையன் 126
184. பயிர குலச் சுப்பராயன் 127
185. காவிரியைக் கொங்கில் ஏற்றியவர் 128
186. என்றும் சுகமாய் இரு 128
187. கண்ணர் குல மேரு 129
188. பொன் கவுண்டய்யன் பட்டாபிஷேகம் 130
189. இரகுநாதசிங்கன் வெற்றி 130
190. இரகுநாதசிங்கன் பெற்ற காணியூர்கள் 131
191. சர்க்கரை பெற்ற புகழ் 132
192. கொடுமணல் சிவமலை பெருமை 133
193. கவி எல்லாம் காளியண்ணனுக்கே 134
194. புரவலரை உயர்த்தும் புலவர்கள் 134
195. சூரிய காங்கேயன் சிறப்பு 135

196. மோது புகழ் மோரூர் 135
197. புதல்வனை வெட்டிய புகழ் 136
198. தரு எனத் தரும் வேணாடர் 137
199. வேணாடுடையார் முடிசூடல் 137
200. காலிங்கராயன் வியன்புகழ் 138
201. வனம் வயல் ஆகும் 139
202. கம்பர் தமிழ்க்கு அடிமை 139
203. சரவண மன்றாடி முடி சூடல் - 1 140
204. சரவண மன்றாடி முடி சூடல் - 2 141
205. இராமகதை பாடுவித்த காங்கேயர் 142
206. பாம்பணன் எனப் பெயரிட்ட தாயார் 143
207. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை - 1 144
208. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை - 2 144
209. புலவருக்குச் சோதனை 1144
210. தாயார் மெச்சிய தனையன் 145
211. பாவாணர் புகல வந்தேன் 146
212. புலிப்புதர் பாய்ந்த புரவலர் 146
213. பிடித்து வந்த கலியை வெல் 147
214 - 219. முத்துசாமிக் கோனார் இரங்கல் பாடல்கள் 148 - 150

கல்வெட்டுப் பாடல்கள்

220. கட்டி முதலி வார்த்தை 190
221. இராசகேசரிப் பெருவழி 191
222. பிடாரியூர்ப் பெயர்கள் 151
223. வெள்ளோடு மருதன் 152
224. கூவலூர் அகவல் 152
225. விடுகாதழகிய பெருமாள் 154

226. அனந்த பூபன் நிறுத்திய கம்பம் 155
227. சேஷாத்திரி செயல்கள் 156
228. பவானிக் கோயில் திருமதில் 157
229. சொக்கனின் கற்பொறிப்புப் புகழ் 157
230. குரங்கு கைப் பூமாலை 158

செப்பேட்டுப் பாடல்கள்

231. அல்லாள இளையான் செப்பேடு 160
232 - 241. பழனிச் செப்பேடுகள் 160 - 162
241 - 244. பஞ்ச கம்மாளர் செப்பேடு 162 - 163
245 - 249. பாண்டிய வேளாளர் செப்பேடு 163 - 164
250. கண்ண குலப் பட்டயம் 164
251. அனுமன்பள்ளி செங்குந்தர் பட்டயம் 165
252. கருமாபுரம் செப்பேடு 166
253. கணக்கன் கூட்டத்தார் பட்டயம் 166
254. பல்லடம் செப்பேடு 166
255. பனங்காடர் பட்டயம் 166
256. வயிற்று வலி நீக்க வா 167
257. ஆனூர்த் திருப்பணியும் அழகன் சர்க்கரை உபசரிப்பும் 167

தெய்வம்

1. பாரதித்தாய் காப்பாள்

பவானி பாலபாரதி கலைமகள் (பாரதி) தாயாக தன்னை உலகில் காப்பாற்றுவார் என்று கூறிய பாடல். கலைமகள் வெள்ளை ஆடை அணிந்து, பல அணிகலன் அணிந்து, சிற்றிடை உடைய பெண் வடிவில் உள்ளவராகக் கூறுகிறார்.

பானிறமும் வெண்தூசும் பல்கலையும் பூண்டுபுனிற்
றானருகே சிற்றிடைப்பெண் ணாகநின்று - ஞானஅருள்
பாமொழியச் செய்வால பாரதித்தாய் நாயேனைப்
பூமிசைகாப் பாளன்பு பூண்டு.

2. பாரிசநாதன் பதம்

கொங்கு மண்டல சதகம் பாடியவர் விசயமங்கலம் சமணர், ஜினேந்திரன் என்னும் இயற்பெயருடைய கார்மேகக் கவிஞர். கார்மேகக் கவிஞரின் உறவினர்கள் பூந்துறைச் சமணர். பூந்துறையில் உள்ள சமணக் கோயில் தீர்த்தங்கரர் பார்சுவநாதர்.

ஒருமுறை கார்மேகக் கவிஞர் பூந்துறை உறவினர் வீட்டுக்குச் சென்றார். அங்கு இருந்த சமணசமய உறவினர்கள் பூந்துறை பார்சுவநாதர் பற்றிப் பாடுமாறு கேட்கக் கார்மேகக் கவிஞர் கீழ்வரும் பாடலைப் பாடினார்.

பச்சை மணிவடிவாய்ப் பாரில்விசுவ சேனனக
மெச்சு மகவாய் வெளிவந்த - உச்சிதனாம்
பாரிச நாதன் பதம்நினைந்தோர் வாழ்வாரே
சீரிசைநூல் இன்பம் சிறந்து.

3. ஆறுமுகம் நம்மை அளிப்பான்

பூந்துறை கொங்கு வேளாளர் காடை குலப் பெருமக்கள் பலர் தங்கள் ஊருக்குப் புராணம் பாட வேண்டி திருச்செங்கோட்டு மண்டகப்பாளையம் சென்று காளியண்ணப் புலவரை அழைக்க விரும்பினர். வாரணவாசிக் கவுண்டர் தலைமையில் சிலர் மண்டகப் பாளையம் சென்றனர்.

காளியண்ணப் புலவரின் கவிபாடும் ஆற்றலைச் சோதிக்க விரும்பி சில பாடல்கள் இயற்றப் பணித்தனர். அவற்றுள் ஒன்று. 'ஆறுமுகம் நம்மையளிப்பான்' என்ற ஈற்றடியில் வெண்பாப் பாட வேண்டும். நான்கு வரிகளின் தொடக்கத்திலும் 'ஆறு' என்ற சொல் வர வேண்டும் என்பதும் ஒன்று.

அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க காளியண்ணப் புலவர் கீழ்க்கண்ட பாடலைப் பாடினார்.

ஆறு விழியிலுறும் ஆறுபொறி நீர்க்கரையில்
ஆறுமக வாயொன்றாய் அன்னைசத்தி - வீறுகொடு
ஆறுபடை வீடுற்று அசுரரறத் தேவர்தொழும்
ஆறுமுகம் நம்மையளிப் பான்.

4. ஆத்தாள் அருள் பெற்றால்

அம்மன் தெய்வத்தின் அருளை ஒரு கவிராயர் பெற்று உற்று நோக்கினால் நோக்கப்பட்டவர் நோய் நீங்கும்; பயித்தியம் பிடித்தவர் நலன் அடைவர்; சாராயம் நீராக மாறும்; தண்ணீர் சாராயம் ஆகும். இவை அனைத்தும் உலகோர் அறிய நடைபெறும்.

ஆத்தாள் அருளை யடைந்தகவி ராயர்உற்றுப்
பார்த்தால் பிணிபோம் பயித்தியம்போம் - சேர்த்தமிடாச்
சாராயம் நீராகும் தண்ணீர்சா ராயமுமாம்
பாரோர் அறியும் படி.

5. சிவன் தொண்டீசன் ஆகலாமா?

ஈரோடு கோட்டையில் உள்ள சிவாலயம் 'தொண்டீச்சுரம்'. அங்கு அருள்பாலிக்கும் சிவபெருமான் திருத் தொண்டீசுவரர். ஒரு புலவர் கேட்கிறார்.

சிவபெருமான்தான் உலகைப் படைக்கப் பிரம்மாவிற்கு வரம்
தந்தார்.
படைத்த உலகைக் காக்க விஷ்ணுவிற்குச் சிவபெருமான்தான்
வரம் தந்தார்.
இமவான் பருவதராசன் மகள் பார்வதி சிவபெருமானின்
இடப் பாகத்தில் உள்ளார்.
அதனால் பொன்மயமான மேருமலை சிவனுக்கு உரித்தானது.
உலகுபுகழ் ஈரோடு உரிமையுடைய ஊர் ஆனது.

இவ்வாறு தேவாதி தேவர்க்கெல்லாம் பேரரசர் போன்ற சிவ பெருமானை 'தொண்டீசன்' என்று எப்படி ஈரோட்டில் அழைக்கலாம்.

இதைக் குறிக்கும் பாடல்,

மறையவனைச் செகம்படைக்க வரம்கொ டுத்தீர்
மாவுலகை இரட்சிக்க மாலுக்கு ஈந்தீர்
பருவதரா சன்மகளை இடத்தில் வைத்தீர்
பைம்பொனுரு மேருதனைப் படைத்தீர் பின்னும்
தரணிபுகழ் உயர்மறந்தை புறந்தை என்னும்
தகவுடைய மயிலைஈ ரோடு பெற்றீர்
இறைஅரச னானஉமைத் தொண்டீசன் என்றே
இவ்வூரிலே பெயரை இட்டது யாரோ?

6. வரகீசுவரரை வணங்கினால்

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சிவன்கோயில் இறைவர் பெயர் வரகீசுவரர். பாண்டியன் முடத்திருமாறன் இங்கு வரகீசுவரரை

வணங்கிப் பேறு பெற்றார். அதனால் ஊர் மொடக்குறிச்சி ஆயிற்றாம். மொடக்குறிச்சி வரகீசுவரரை வணங்கினால் கவிஞர் ஆகலாம். செல்வம் சேர்க்கலாம். பகைவரை வெற்றி கொள்ளலாம் என்கிறார் புலவர்.

மதுரைகண்ட மாறன் வழுத்து வரகீசன்
பதுமபதம் நாடிப் பணிந்தால் - மதுரகவி
சொல்லலாம் செல்வம் தொகுக்கலாம் மாற்றலரை
வெல்லலாம் வன்மை மிகுத்து.

7. சென்னிமலை வேலவர்

சென்னிமலை பற்றிய தனிப் பாடல். சென்னிமலை, வேலவர் என்ற இரு சொற்களிலும் கொம்பு உண்டு. (ெ.ே). வள்ளி என்ற சொல்லில் கொம்பு இல்லை. ஆடு என்ற சொல்லில் கால் இல்லை. யானை என்ற சொல்லில் கொம்பு இல்லை. இதற்கு வேறு பொருள் கூறுவாரும் உண்டு. அவர்கள் சென்னிமலை வேலவர் இரு கொம்பு வள்ளி, தெய்வயானை என்பர்.

சென்னிமலை வேலவர்க்குச் சேர்கொம் பிரண்டுண்டு
கன்னிகுற வள்ளிக்குக் காலில்லை - இன்னிலையே
ஆட்டுக்குக் காலில்லை யானைக்குக் கொம்பில்லை
பாட்டுக்குள் ஆராய்ந்து பார்.

8. திருநீற்றுப் பதிகம்

எம்பெருமான் சாமந்தன் என்பவர் காளமங்கலம் குல விளக்கம்மன் மீது திருநீற்றுப் பதிகம் பாடினார். அவர் நல்ல குணங்கள் உடையவர். பதிகப் பாடல் பாடி குலவிளக்கம்மன் பெயரை நெஞ்சில் ஏற்றுத் திருநீறு அணிந்து பல கொடிய வினைகள் எல்லாம் பயந்து நம்மை விட்டு விரைந்து ஓடும்.

எம்பெருமான் நற்குண சாமந்தன் பாடிய
அம்மை திருநீற்றுச் சீர்பதிகம் - எம்பேரும்

நெஞ்சேற்று நீறு தரித்தால் பல்பிணியும்
அஞ்சிப் பறந்தோடு மாம்.

9. பசுவின் தெய்வீகம்

பசுவின் நான்கு கால்களும் முறையே ரிக், யஜுர், சாம, அதர்வன வேதங்கள் போன்றவை.

பசுவின் இரண்டு கண்களும் சூரியன், சந்திரன் போன்றவை.

பசுவின் உடல் முழுவதும் முப்பத்து முக்கோடி தேவர்கள் போன்றவை.

பசுவின் வால் நமசிவாய மந்திரம் போன்றது.

பசுவின் கொம்பு சூலம் போன்றது.

பஞ்சகாவியத்துள் உள்ள சாணமும் சிறுநீரும் கங்கையைப் போன்றது.

பசுவின் இரு காதுகளும் திருமால், பிரம்மா போன்றது.

பசுவின் திமிள் சிவலிங்கம் போன்றது.

ஆதலால் புலவர் ஒருவர் சொல்கிறார். பசுவை வணங்குக.

''கோயிலுக்குப் போகவே வேண்டாம். கோரிய தெய்வம் எல்லாம் பசுவில் இருப்பதால்''என்பது புலவர் புகழ் மொழி.

நாலுகால் நாலுவேதம் நயனமோ இரவி திங்கள்
மேலெலாம் தேவராகும் வீசுவால் நமசி வாயம்
ஆலமாம் கொம்பு சூலம் ஐங்கரின் மலம்நீர் கங்கை
சீலமால் அயனும் காது திமிள்சிவ லிங்கம் ஆகும்.

10. புரக்க இது சமயம்

சிவமலைப் புராணம், மயில்விடு தூது முதலிய பல நூல்களை இயற்றிய இலட்சுமண பாரதி தன் அந்திம காலத்தில் பாடிய பாடல். பிழை பொறுத்து ஆட்கொள்ள வேண்டும் என்று பணிந்து இறைஞ்சி சிவபெருமானை வேண்டுகிறார். (உமேச சிவன் - அர்த்தநாரீசுபரர்).

என்னஎன்ன தீமை எளியேன் இயற்றிடினும்
அன்னபிழை எல்லாம்நீ றாக்கியே - உன்னுடைய
பொன்மலர்த்தாள் ஈந்து புரக்க இதுசமயம்
என்மயஉ மேச சிவா.

நாடு, ஊர்

11. தமிழ்நாடு ஐந்து

தனிப்பாடல் ஒன்று தண்டியலங்கார உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. அப்பாடலில் சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன் கொங்கு நாட்டையும், தொண்டை நாட்டையும் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து பிரிவு என்று கூறப்பட்டுள்ளது. அப்பாடல்,

நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியான் அல்லன் - துறையின்
விலங்காமை நின்ற வியன்தமிழ்நாடு ஐந்தின்
குலங்காவல் கொண்டொழுகும் கோ.

12. கொங்கு அரசன்

கொங்குநாடு மலைகளையும், பன்னிரு நதிகளையும், பாடல் பெற்ற ஏழு தலங்களையும், வஞ்சி என்ற பெயருடைய நான்கு ஊர்களையும் உடையது. இதை ஆள்பவன் வஞ்சி என்னும் கருவூருக்கு உரியவனே. அவன் வஞ்சிக்க மாட்டான். இப்பாடல் அனுப்பப்பட்டிச் செப்பேட்டில் உள்ளது.

கொங்கு மலைநாடும் குளிர்ந்தநதி பன்னிரண்டும்
சங்கரனார் தெய்வத் தலம்ஏழும் - பொங்கொளிர்சேர்
வஞ்சிநகர் நாலும் வளமையால் ஆண்டருளும்
கஞ்சமலர்க் கையுடையோன் காண்.

13. கொங்கு நாட்டு எல்லை - 1

இப்பாடல் கொங்கு நாட்டின் எல்லைகளைக் கூறுகிறது.

வடக்கு எல்லை - பெரும்பாலை

தெற்கு எல்லை - வைகாவூர் (பழனி)

மேற்கு எல்லை - வெள்ளியங்கிரி மலை

கிழக்கு எல்லை - குளித்தலை

'பெரும்பாலை' என்பதற்கு 'தலைமலை' என்ற பாட பேதமும் உண்டு.

வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்றம் - கிடக்கும்
களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு.

14. கொங்கு நாட்டு எல்லை - 2

சோழன் பூர்வ பட்டயம் கொங்கு நாட்டு எல்லையைக் கீழ்வருமாறு கூறுகிறது.

வடக்கெல்லை பாலமலை வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று - கடற்பால்
கோட்டைக் கரையளவும் கொங்குநாட் டெல்லைஎன
நாட்டிவைத்தார் நல்லோர்க ளே.

15. கொங்கேழ் தலங்கள்

கொங்கு நாட்டில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூன்று சமய குரவர்களும் தேவாரம் பாடிய திருத்தலங்கள் ஏழு, அவை கருவூர், வெஞ்சமாங்கூடல், கொடுமுடி, அவிநாசி, பவானி, திருச்செங்கோடு, திருமுருகன்பூண்டி என்பன.

சோழ, பாண்டிய நாடுகளை நோக்கப் பாடல் பெற்ற தலங்கள் மிகக் குறைவாக இருப்பினும் கொங்கு மக்கள் நாள்தோறும் இந்தத் தலங்களை மனதில் நினைந்து போற்றியுள்ளனர் என்பதைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது. வெஞ்சை - வெஞ்சமாங்கூடல், நணா - பவானி. ஒரு வெண்பாவில் கொங்குத் தலங்கள் ஏழையும் தகுந்த அடைமொழி கொடுத்துக் கூறியிருப்பது மிகவும் சிறப்புடையதாகும்.

ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறைசை
நீதி அவிநாசி நீள்நணா - மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதமை
நெஞ்சமே நித்தம் நினை.

16. வஞ்சி நகர்கள்

சேரர்கள் கொங்கு நாட்டை வென்று அடிப்படுத்தி ஆட்சி செய்யும் போது தங்கள் தலைநகரான வஞ்சி எனும் பெயரை கொங்கு நாட்டில் 4 ஊர்கட்குப் பெயர் வைத்தனர். அவை சேலம், தாராபுரம், கருவூர், மூலனூர் என்பன.

மாந்தரர்க்கும் மற்றுவரு மன்னவர்க்கும் கொங்குவஞ்சி
ஏந்துபுகழ் சேர்தலைமை ஏய்ந்தபதி - சார்ந்திலகு
சேலமொடு தாரா புரமும் திகழ்கருவூர்
மூலனூர் என்றே மொழி.

17. பூந்துறை நன்னாடு

கொங்கு 24 நாடுகளில் முதல் நாடு என்று சிறப்புடன் கூறப்படுவது பூந்துறை நாடு. கொங்கு நாட்டில் மக்கள் முதலில் புகுந்து உறைந்த (வசித்த) நாடு பூந்துறை நாடு. அத்தகு பூந்துறை நாட்டின் பெருமை களையெல்லாம் தொகுத்துக் கூறும் பாடல்.

பூந்துறை நாட்டு மலைகள், ஆறுகள் கூறப்படுகின்றன. ஈரோடு, பெருந்துறை, கொளாநல்லியில் கோட்டைகள் பெற்ற நாடு. தாரமங்கலம் கெட்டி முதலியை வென்ற நாடு. வீரம் மிகுந்த நாடு. வெற்றி மிகுந்த நாடு. பொன்மாரி, பூமாரி பெய்த நாடு எனப் பல சிறப்புக்கள் கூறப்படுகின்றன.

சென்னிகிரி கனககிரி நாககிரி வெள்ளிமலை
திண்டல்மலை உள்ளநாடு
சென்பககிரி மங்கலகிரி ஊராட்சி மலையதும்
சீர்பெற விளங்கும் நாடு

மன்னிஈ ரோடுயர் பெருந்துறை குழாநிலை
மிக்ககெடி படைத்தநாடு
வணங்கா முடிகெட்டி முன்புகை மீசையில்
அவன்சிரம் அரிந்தநாடு

தென்னுலவு ராயர்கை வாசல் பணிக்கன்
சீட்டொட்ட மிட்டநாடு
செய்யமுகி லானையும் திறைசெயக் கொங்கினில்
செல்வம் படைத்தநாடு

பொன்னுமா மழைபெய்து மாதிரு வர்க்காய்
புரந்தரன் பரவுநாடு
பொன்னிநதி வானிநதி காஞ்சிநதி சூழ்கின்ற
பூந்துறைநன் னாடுதானே!

பூந்துறை நாட்டுச் சிறப்பு

''பொன்மேவும் பூந்துறை நாடு'', ''பூரணமாம் தாரணிசூழ் பூந்துறை சேர் நன்னாடு''வாய்ந்தபுகழ் பூந்துறைசை நாடு'' என்று புலவர்கள் நாவால் புகழ்ந்துரைக்கப்பட்ட பூந்துறை நாட்டைப் பல்வேறு இலக்கியங்களும், தனிப்பாடல்களும் பலவாறு சிறப்பிக் கின்றன.

18. வளம் மலி பூந்துறை

அட்ட மங்கலம் அறுநதி வளங்களும் சிறந்த
கட்டு இங்கிதம் நகர்தொறும் குளம்கழனி கள்சூழ்
கொட்டி ஆம்பலும் மரைமருக் கொடிமலர் பலபூ
மட்டு வேர்நறை மலிந்திடும் பூந்துறை நன்னாடு.

19. தமிழ் வளர் பூந்துறை

காடெல் லாம்சிறு செந்நெல் விளையும்
கதிரவன் வந்து கமலங்கள் சேரும்
நாடெல் லாம்வெண் தரளம் கொழிக்கும்
நல்ல அல்லியில் வெண்மதி சேரும்
வீடெல் லாம்திரு மின்விளை யாடும்
வேத காவிய புராணங்கள் ஓதும்
பாடெல் லாம்பைந் தமிழதை ஆக்கும்
பன்னு பூந்துறை நாடெங்கள் நாடே.

20. தான தர்மம் மிக்க பூந்துறை

கொட்டுதல் மேள தாளம் குவிப்பது வளர்செஞ் சாலி
கட்டுதல் கோட்டை யானை கவனமாம் புரவி வெள்ளம்
அட்டுதல் கருப்பஞ் சாறே அழித்தல்தேன் பலாப்ப ழங்கள்
கிட்டுதல் தான தன்மம் கிடைக்கும்பூந் துறைநன் னாடு.

21. கொங்கு நாட்டின் கண் பூந்துறை

பூமாது வாழும் புகழ்மாது போற்றிசைக்கும்
நாமாதெந் நாளும் நயக்குமே - கோமேவு
கோட்டங் கரமாகும் கொங்கென்னும் செல்விக்கு
நாட்டமாம் பூந்துறையூர் நாடு.

22. சென்னிகிரி அருள் பூந்துறை

மஞ்சள்இஞ்சி கமுகுதென்னை வளர்ந்தோங்கும் நாடு
        மாதுளை எலுமிச்சை வரிசையுள்ள நாடு
தஞ்சம்என்று வந்தவரைத் தாபரிக்கும் நாடு
        தானதர்மம் என்னாளும் தழைத்தோங்கும் நாடு
அஞ்சுகமென் மொழிமடவார் ஆடல்புரி நாடு
        அருள்பரவு பூந்துறைசேர் அன்புவளர் நாடு
விஞ்சையர்கள் வேதியர்கள் மேன்மைபெறு நாடு
        விதமான சென்னிகிரி அருள்பூந்துறை நாடு.

23. பூந்துறை நாடு அதிகம்

மூவரசர் பசுபதிபாற் கன்பு கூர்ந்து
        முந்தியகோ புரம்கட்டி முடிநில் லாமல்
காவலரும் மற்றவரும் பிடிமண் வைக்கக்
        கலசம்நில்லாது இந்நாட்டைக் கருதித் தேடி
ஆவலுடன் இவர்கையால் கலசம் வைக்க
        அதுநிற்க மூவர்முடி அன்பாய்ச் சூட்டிப்
பூவுலகில் கொங்கிலிரு பத்து நாட்டில்
        பூந்துறைநாடு அதிகம்எனப் புகன்றிட் டாரே.

24. தன் ஊரின் அபிமானம்

கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டல சதகத்தை 1923 ஆம் ஆண்டு சிறப்புறப் பதிப்பித்தவர் திருச்செங்கோடு அ. முத்து சாமிக்கோனார். 1912 ஆம் ஆண்டு 40 பாடல்கள் மட்டுமே கொண்ட கொங்கு மண்டல சதக ஏட்டுச் சுவடியைப் பெற்றார். சதகத்தின் வரலாற்றுச் சிறப்புக் கருதி பல இடங்களில் சதக ஏட்டுச் சுவடி தேடினார்.

1922 வரை பத்தாண்டுகளில் 6 முழுப் பிரதியும், 5 குறைப் பிரதியும் பெற்று 1923இல் பதிப்பித்தார். அவையடக்கமாகக் கீழ்க்கண்ட பாடலைப் பாடிப் பதிப்பித்துள்ளார்.

குளத்தில் உள்ள தாமரையின் தேனை குளத்தில் வாழும் தவளை அறியாதது போல கொங்கு மண்டலத்தில் தோன்றிய தான் கொங்குமண்டலம் பற்றி அறியாமல் இருப்பதாகக் கூறுகிறார். தன் ஊரில் பற்று இல்லாதவர் எவரும் இல்லை என்பதனால் சததைத்தைப் பதிப்பிப்பதாகக் கூறுகிறார். கோனாரைப் போல, கொங்குச் செய்திகள் அறிந்தவர் எவரும் இல்லை என்பதை சதகப் பதிப்பு நன்கு காட்டுகிறது.

அரவிந்தத் தடத்துதித்தும் அதில்வசித்தும் அதனில்
அலர்ந்தமலர்த் தேன்சுவைசற் றறியாத்த வளைபோல்
பரவிந்தக் கொங்குமண் டலத்துதித்தும் வசித்தும்
பழகுவரை யினும்அதன்தன் பழஞ்சரிதம் ஓரேன்
திரவிந்தை இலகும்இம்மண் டலசதகத் தினுக்கோர்
சிற்றுரையும் மேற்கோளும் தேர்ந்தவர லாறும்
தரவந்தஎன் துணிவுக்கு யாவர்களே இகழ்வார்
தன்னூரின் அபிமானம் தணிந்தவரும் இலரே.

25. வெள்ளோட்டு விநாயகர்

வெள்ளோடு பயிரகுலம் பழனிமலைக் கவுண்டர் வெள்ளோட்டுப் புலவரைக் கொண்டு வெள்ளோட்டுக் கோயில்கள் பலவற்றிற்குப் பாடல்கள் எழுத வைத்துள்ளார். அவற்றுள் சில பாடல்கள் இங்கே பதிப்பிக்கப் பெறுகின்றன.

சீர்மருவும் உயிர்உடம்பும் திகழுமுயிர் மெய்யாய்
சிறந்தசொல்லும் பொருள்யாப்பும் அலங்காரம் ஓதி
ஏர்பரவு தூதுமடல் பரணிகுறம் பாடி
இன்பான தாதாவை அன்பாக நாடி

பார்மேவு துதித்திருப்பன் கொழித்திருகண் பாராய்
பவநாச முறஅருளிப் பரகதிகள் தாராய்
கார்மேவு காயமத யானைமுகத் தோனே
கதுமைபுகழ் வெள்ளோடை காத்தஅய்ங் கரனே.

26. அரசடி விநாயகர்

அய்ங்கர விநாயகனே ஆனை முகத்தோனே
அரசடியில் வரமருளும் ஆதி நாயகனே
திங்களைச் சூடுகின்ற தேவர் உமைபாலா
செகதலத்தி லேவிளங்கும் சிறந்த அனுகூலா
மங்கையுமை யாள்பெற்ற மணிநீல வர்ணன்
பொங்கரவ மேஅணிந்த புதல்வனும் நீயே
தங்குபுகழ் வெள்ளோடை நகர்தனில் வாழும்
தந்திமுகத் தோனைத்தினம் சற்றும்மற வோமே.

27. பள்ளிக் கூடத்து விநாயகர்

எள்ளுபொரி அவல்கடலை இனியபலாச் சுளையும்
இனிதான சர்க்கரையும் இன்பமிகும் தேங்காய்
தெள்ளுதினை மாவுடனே தேனும்இள நீரும்
செப்பரிய பச்சரிசி சீனிவெல்லப் பாகும்
வள்ளிக்கிழங் கொடுதோசை வாய்த்தமுக் கனியும்
வளமான சீனிப்பலா வாய்த்திடுமாங் கனியும்
அள்ளித்தினம் யான்படைக்க அமுதமென நுகர்வாய்
அழகுபள்ளிக் கூடமதில் அமர்ந்தஐங் கரனே.

28. சருவலிங்கர்

உலகிலொரு மறைமுனிவர் ஓதிய விநோதா
உண்மைஅடி யார்தமக்கு உதவும்இரு பாதா

நிலவுஅணி சடாமகுட நிமலா சங்கரனே
நீலநிற மால்அயனும் தேடுபரம் பொருளே
புலவுபுகழ் சூலியுடன் புரிந்தபரா பரனே
போற்றுதிருத் தாள்எடுத்த புனிதசரு வீசா
இலகுதிரு வெள்ளோடை எனும்பதி யுளானே
இறைவர்தொழும் சருவீசர் என்னும்ஈசு பரனே.

29. பாடகவல்லி

தோகைமயில் வாகனனோடு ஆடும்வா கணனை
தொல்லுலகில் பெற்ற சூலிதிரு நீலி
பாகனைய சொல்லிஇம வான்அருள் மெல்லி
பகரருமை ஆறிரண்டு காரறியும் வல்லி
நாகமதில் உலகவெண் ணாகம்அணி நேசர்
நண்புதிரு சருவீசர் ஆம்பரம நேசர்
ஆகமும் புகலிடப் பாகம்அமர் தேவி
அன்பு பாடகவல்லி அம்மை பூரணியே.

30. சென்னிமலை வேலவர்

துள்ளுமயில் ஏறிவரும் சூரசங் காரா
சுந்தரர்க்குப் பரவைமனை தூதுசென்ற சிவனார்
உள்ளமக னாகவரு உபதேச குருவே
ஓங்குபுகழ் அருணகிரி ஓதுதமிழ்க் கந்தா
வள்ளிதெய்வ யானைக்கு வாய்த்தமண வாளா
மன்றுதனில் நடனமிடு வல்லியுமை பாலா
தெள்ளுதமிழ்ப் பூந்துறைசை நாடுகந்த செவ்வேள்
சென்னிமலை வேலர்பதம் சிந்தைமற வோமே.

31. தண்டாயுதபாணி

சீர்கொண் டிலங்குமணி மகுடம் பளீரென்னச்
செங்கதிர்ப் பிரபை மின்னச்
செவியிரு குண்டலம் இலங்கவும் கந்தரஞ்
சேர்ந்தபொற் காறை மின்ன

தார்கொண்ட செங்கடம்பு அணியும் புயத்தில்
சாத்தின பதக்கம் மின்ன
சருவபூ சிதவிசையம் உயர்கரம் தன்னிலே
தங்கவேல் கற்றை மின்ன

ஏர்கொண் டிலங்குமிரு பாதங்கள் தன்னிலே
இசைந்திடும் சதங்கை மின்ன
இன்பமொடு வந்துகுடி கொண்டிடும் தயாபரர்
எம்மான் அருள்கு மாரர்

தேர்கொண்ட வெள்ளோடை நன்னகரில் வாழ்வுகொள்
தெய்வமே செம்பொன் மேரை
சென்டால் அடித்தகுக கந்தா பரப்பிரம
தெண்டாயு தக்கடவுளே!

32. ஆதிநாராயணப் பெருமாள்

பஞ்சவர்கள் தூதன்என வும்சேரல் பாதா
படியுலகை அடையவோர் அடியும்விஸ்த் தாரா
கஞ்சனுயிர் கொன்ற செங்கண்நெடு மாயா
கமலலெட் சுமிமார்ப கருணைதன் உபாயா
வஞ்சனைசெய் பேயின் முலையுலைகள் வாயா
வாதகோ விந்தஅரி மாயதுரை நேயா
நஞ்சுலவு பணியின்மிசை துஞ்சுநா ரணனே
நளினமுடன் வெள்ளோடை வாதநா ரணனே.

33. அண்ணன்மார்

சென்னெல்வயல் சூழ்பொன்னி நாடுடைய தீரா
சிற்றாலை புரிநகரில் சிறந்தஓய் யாரா
மன்னர்முடி தான்பணியும் வாகான தீரா
வருபில்லி நோய்களையும் மடியவிடு கோரா
பன்னரிய வேல்நீட்டிப் படைமன்னர் சூழ
பாரிலுள்ள தேவதைகள் பரிவாகச் சூழ
தென்னுலவு வெள்ளோடைச் சீரான பதியில்
தேவனே அண்ணமார் என்னும் நாயகனே.

34. எங்கள் குல இராசாக்கள்

திருமாது சர்வலிங் கேசுரர் பாடகவல்லி
தேவிஉமை யாள்கணபதி
சிவசுப்பிர மன்னியர் ஆதிநா ராயணர்
சீதைஅல மேலுமங்கை

பொருசூலி பொன்காளி அத்தனூர் ஆயியும்
புகழ்பெற்ற அண்ணமாரும்
பொன்னிலகு முப்பத்து முக்கோடி தேவர்கள்
புவிமீதில் வந்துகாக்க

திருமேவும் வடசோலை நந்தன வனங்களும்
தர்மமட சாலை நிலையும்
தண்டா மரைக்கமல மேவுதிரு மாலுடன்
சரசுவதி கலைவாணியும்

இருமாது பிரியாமல் அனுதினமும் விளையாடும்
எழிலான வெள்ளோடையில்
எண்டிசை மதிக்கவரு தண்டிகைத் துரையான
எங்கள்குல ராசாக்களே.

35. இராசாக்கள் சுவாமி

மண்டலத்தில் கண்டுதொழ வந்தருளும் பாதா
        மணிமவுலி முடிமீதில் வயங்கும்அலங் கிருதா
கொண்டல்பரி யானையுடன் கோடிதள தீரா
        கொற்றவர்கள் வணங்கஅருள் செய்திடும் சீரா
சண்டர்முடி இடறிவரும் சமரான சூரா
        தடவரைகள் கிடுகிடென தாண்டுபரி வீரா
பண்டுலவும் வெள்ளோடைப் பதியில்வாழ் பவனே
        பார்மீதில் ராசாக்கள் என்னும்பரா பரனே!

36. கருப்பண்ணன்

சட்டமொடு பாதசர மிக்ககன கொலுசு
        தளதளென சிலம்புஒலிகள் கலகலெனும் பாதா
வட்டமிகு சந்திரநுதல் வதனமருள் சீலா
        மணிமவுலி பளபளென மருவுமுடி சீரா
வெட்டுகொடு வாள்தடி வீச்சறுவாள் கரமும்
        விளங்குமணி யாபரணம் துலங்கும் பூரணனே
மட்டுலவும் வெள்ளோடைக் கருப்பண்ண ராயன்
        மனதிலே உனதுபதம் தினமும்மற வோமே.

37. மாரியம்மன்

திங்கள்சேர் நுதல்அழகி செல்விசிங் காரி
        செகதலத்தி லேவிளங்கும் சிறந்தஅவு தாரி
கங்கைபுனல் அழகியெனும் கனகமய மாரி
        கரகம்எடுத் தாடிவரும் கன்னிதிரி சூலி
கொங்குலவும் கருவலூர் கோதைகண்ண னூரு
        குமரிதிருச் சமயபுரம் குவலயங்கள் தோறும்
மங்களம் புவிதான மணிகெழுத்தி ஆடும்
        வல்லியே வெள்ளோடை மாரியுமைத் தாயே.

38. சருவீசர் வாழும் தலம்

காய்மாறாத் தேமாவும் கத்தரியி லாக்கிணறும்
பூமாறாக் கொன்றையுள பொற்பதியாம் - நேம
நறுவீசர் சோலைசெறி நன்னகர் வெள்ளோடைச்
சருவீசர் வாழும் தலம்.

39. வெள்ளோட்டு வளம்

ஓதுரிவை யேகாசர் உமைநேசர் பவநாசர்
தாதகிதோள் புனைஈசர் சருவேசர் வாசவூர்
மாதவிநீ ழலினோடும் வயலோடும் மதகோடும்
மேதிநறும் பாலோடு புனலோடும் வெள்ளோடு.

40. வெண்மை ஓடை

வெள்ளோடை ஆம்பல்நிறை வெண்டயனோடு
அண்டர்தொழும்
வெள்ளோடை ஆம்பல்நிறை வெள்ளோடை - வெள்ளோடை
ஏற்றவிடங் கையனார் ஏற்றவிடங் கையனார்
ஏற்றவிடங் கையனார் இல்.

41. வெள்ளோட்டு மக்கள்

வெள்ளோட்டின் வரலாற்றுப் பெருவாழ்விற்கும், பெருமைக்கும் சிறப்புக்கும் காரணமான சாத்தந்தை, பயிரகுல வேளாளர்களுடைய சமூகப் பெருமையை ஒரு பாடல் விளக்குகிறது.

அம்புவியில் மிக்கான சித்திரமே ழிக்கொடிக்கு
அதிபர்எனு வந்த சமுகம்
அரவின்மணி தன்னையே கவிவாணர் தங்களுக்கு
அன்பாய்க் கொடுத்த சமுகம்

பண்புபெற வேயுலகில் நீலிபழி தந்துமே
　　பார்புகழ வந்த சமுகம்
பரதவித நாட்டியம் புரிகின்ற பொதுமாதர்
　　பண்புரிசை இட்ட சமுகம்

தம்பமென வேதியர்கள் மறையோதி அச்சதை
　　சதாதினம் விளங்கு சமுகம்
தானமொடு தருமமும் அன்னசொன் னங்களும்
　　தயவாய் விளங்கு சமுகம்

கம்பர்தன் தமிழ்பெற்ற கீர்த்தியும் புகழவே
　　கனிவுகூர்ந் துற்ற சமுகம்
காசினியில் மிக்கான வெள்ளோடை வேளாளர்
　　காராளர் தன் சமுகமே.

என்பது அப்பாடலாகும்.

பல்சுவை

42. அப்பிச்சிமார் மடம்

திங்களூர் அருகில் அப்பிச்சிமார் கோயில் உள்ளது. பக்தர்கட்கு அன்னதானம் தந்து உதவும் காரணத்தால் அது ''மடம்'' என்றே கூறப்படுகிறது. அப்பிச்சிமார் உசர வேட்டுவர் குலத் தலைவர், வேட்டுவர் மட்டுமல்ல வேளாளர்களும் வணங்கும் கோயில்.

சந்திரபுரி மாநகரில் இந்திரஓ லக்கமாய்
　　தழைத்திட விளங்கு மடமாம்
தண்டமிழ்க் கவிவாணர் கொண்டாட வேவந்த
　　சற்சங்க மான மடமாம்
விந்தையுட னேமுனிவ ரானமதி யோர்களும்
　　மெய்ப்பாய் விளங்கு மடமாம்

வீரமிக இரணசூர அப்பிச்சி மாரய்யன்
வீற்றிருக் கின்ற மடமாம்

கொந்துலவு குலமாதர் சிந்துநட னம்பரவு
கொலுஅலங் கார மடமாம்
கூறரிய கொங்குமலை யாளமும் ஈழமும்
கொண்டாடி வந்த மடமாம்

அந்தமிக வாகவே பழனியய் யன்நீதி
அர்ச்சனைகள் செய்யும் மடமாம்
அம்புவியில் மெய்ப்பான அப்பிச்சி மாரய்யன்
அன்னந்தந்து உதவும் மடமே.

43. மாணிக்க வாசகர் மடத்து விருந்து

காங்கய நாட்டுப் பதினான்கு ஊர்களில் பாப்பினி பழமையான ஊர். அவ்வூருக்கு பார்ப்பதி, பார்வதிபுரம் என்ற பெயரும் உண்டு. வளமான ஊர். போசள வீரவல்லாளன் காலத்தில் டணாயக்கன் கோட்டை மாதவப் பெருமாள் கோயிலுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்ட கொங்குநாட்டு ஊர்கள் 13ல் ஒரூர். போசளர் இட்டபெயர் 'கொங்கர மாரி மாதவ நல்லூர்' என்பது.

பாப்பினியில் ஒரு பகுதி மடவளாகம். அங்கு கோயில் அர்ச்சகர் குடும்பத்தில் தோன்றியவர் இலட்சுமணன். பெற்றோர் மறையவே ஊதியூர் உறவினர் வீட்டில் தங்கி, தமிழ் கற்று, பெரும் புலவராகி இலட்சுமண பாரதி (1769-1859) என்று பாராட்டப் பெற்றார். 'சிவமலைக் குறவஞ்சி', 'மடவளாகம் தலபுராணம்', 'சிவகிரி மயில் விடு தூது' முதலிய நூல்கள் இயற்றியவர்.

ஒருமுறை இலட்சுமண பாரதி கூனம்பட்டியில் உள்ள மாணிக்கவாசகர் மடத்துக்கு ஓலை எழுதும் தன் கையேட்டுக்காரருடன் சென்றிருந்தார். புலவர்களைப் போற்றிப் பல இலக்கியங்கள்

பெற்ற மடம் 'மாணிக்கவாசகர் மடம்'. மடத்தில் பாரதிக்கும், கையேட்டுக்காரருக்கும் வேறு வேறு இடங்களில் உணவு ஏற்பாடு.

உணவு உண்டபின் பாரதி தன் கையேட்டுக்காரரிடம் 'சாப்பிட் டாயா?' என்று கேட்டார். கையேட்டுக்காரர் உடனே,

மொட்டைச்சோ ளச்சோற்றில் மொத்தையிட்டுக் கத்தரிக்காய்த்
தட்டைச்சாற் றைத்தூக்கித் தாணிட்டார் - பட்டமுறு
மாணிக்க வாசர் மடாலயத்தார் ஐயாஉள்
நாணிக் கடிந்துவந்தேன் நான்

என்று பாடிப் பதிலளித்தார். மடத்தாரும் இதைக் கேட்டு விட்டனர்.

மீண்டும் கையேட்டுக்காரருக்கு நன்கு விருந்துபசாரம் செய்தனர். விருந்துக்குப் பின் கையேட்டுக்காரர் பாடிய பாடல்,

துவையல் வருவல் துவட்டல் கறியும்
அவியல் குழம்புரசம் அப்பம் - அவல்வடகம்
வேணிவடை பாயசநெய் பேணி அமுதளிக்கும்
மாணிக்க வாசர் மடம்.

என்பதாகும்.

44. சோறு கண்ட மூளி யார்?

இரண்டு தமிழ்ப் புலவர்கள் பெருந்துறை அருகில் உள்ள ஈங்கூர் அல்லாள ஈசுவரன் கோயிலில் தங்கியிருந்தனர். மதிய உணவு நேரம். இருவருக்கும் நல்ல பசி. அப்போது கோயிலில் உச்சிக் காலப் பூசை நடைபெற்றது. அர்ச்சகர் பூசை செய்தார். வாத்தியக் கருவிகள் ஒலித்தன.

புலவர்கள் அல்லாள ஈஸ்வரனிடம் 'சிவனே! நாங்கள் பசித்திருக்க நீர் மட்டும் பூசை அமுதுபடியை ஏற்கலாமா?' என்று கேட்டனர்.

அப்போது அசரீரியாக ''சங்குமேளம் கொட்டு ஓசை மட்டுமே தான் உள்ளது. இங்கு அமுதுபடி ஏதும் படைக்கப்படுவதில்லை. எனக்கும் சோறு கிடையாது'' என்று ஒலித்தது.

''கோயில் பூசையின்போது அங்கு அமுதுபடி எதுவும் படைக்க வில்லை'' என்பது இதனால் தெரிகிறது.

இதைக் குறிக்கும் பாடல்,

தேங்குபுகழ் ஈங்கூர் சிவனேஅல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ - போங்காணும்
கூறுசங்கு மேளமுடன் கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்.

45. காவிரி கரை கடவாதே!

ஒருமுறை காவிரியாற்றில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கரைகளை உடைத்துக் கொண்டு வெள்ளம் நிலத்தில் பாய்ந்தது. பயிர்கள் அழிந்தன. எவராலும் காவிரி வெள்ளத்தைத் தடுக்க முடியவில்லை. அசரீரி 'சக்தியுடைய கவிஞர் சொன்னால் வெள்ளம் குறையும்'' என்றது. அப்போது பெரும் கவிஞராக வாழ்ந்தவர் கம்பர். அரசனும், மக்களும் வேண்டிக் கேட்கவே கம்பர் காவிரியை நோக்கிப் பாடிய பாடல் இது. காவிரியை 'உலகுடைய தாய்' என்கிறார் கம்பர்.

கம்பர் வாக்கால் காவிரி அடங்கியது.

கன்னி அழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரைகடந்து போயினள்என்று - இன்னீர்
உரைகிடக்க லாமோ உலகுடைய தாயே
கரைகடக்கல் ஆகாது காண்.

46. கம்பருக்குக் கல்யாண வரி

காவிரியை அடங்கச் செய்து நாட்டைக் காப்பாற்றிய கம்பருக்கு என்ன கைமாறு செய்யலாம் என்று ஆலோசனை செய்தனர்.

வேளாளர்கள் தங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்கு அரசுக்கு அரைக்கழஞ்சு பொன் வரியாகக் கொடுத்து வந்தனர். இனிமேல் அந்த அரைக் கழஞ்சு திருமண வரியைக் கம்பருக்குக் கொடுக்கும்படி சோழ மன்னர் குலோத்துங்கன் இட்ட ஆணையை இப்பாடல் கூறுகிறது.

இத்திருமண வரிபெற்ற கம்பர் வேளாளர்கட்கு திருமணத்தில் பாட மங்கல வாழ்த்துப் பாடிக் கொடுத்தார். தனக்குப் பின் அத்திருமண வரியை தன் வாரிசான புலவர்கட்கு அளிக்க ஏற்பாடு செய்தார்.

கதுவி வருபொன்னி கரைகடவா வண்ணம்
பதுமமுகக் கம்பரவர் பாட - வதுவைவரி
மாடை அரைக்கழஞ்சு வண்கம்பர்க்கு ஈந்தபரிசு
ஏடர் குலோத்துங்கன் எழுத்து.

47. காளியண நாவலன் புகழ்

திருச்செங்கோடு மண்டகப் பாளையத்தைச் சேர்ந்தவர் காளியண்ணக் கவிராயர். தமிழ் கற்றறிந்த பெரும்புலவர். பூந்துறைக் காணியாளர்கள் காடை குலத்தார் வேண்டிக் கொள்ள பூந்துறைப் புராணம் இயற்றினார். தமிழகம் எங்கும் பயணம் செய்து கவி பாடிப் பரிசில் பெற்றார்.

அவர் ஒருமுறை சோழ மண்டலம் திருவாவடுதுறை ஆதீனம் சென்று தன் கவி வல்லமையைக் காட்டி ஆதீன கர்த்தரால் பாராட்டுப் பெற்றார். அப்போது காளியண்ணக் கவிராயர் திறம்கண்ட திருவாவடுதுறை ஆதீனப் புலவர் பொன்னலம்பல சுவாமிகள் பாடிய பாடல்.

அகத்தியர் பொதியமலை அடைந்ததும், ஆதிசேடன் பூமியைச் சுமந்ததும், கலைமகள் பிரம்மாவின் நாவில் இருப்பதும் இவைகள் எல்லாம் பூந்துறைக் காளியண்ணக் கவிராயர் பாடல் இயற்றும் திறம் கண்டுதான்.

வேதமுனி குன்றுறைந்தான் மெய்ச்சேடன் மண்சுமந்தான்
மாதுவிதி நாவில் மறைந்திருந்தாள் - ஏதமிலா
ஆழிசூழ் பூந்துறைநாட்டு அண்ணல் தமிழ்க்கதிபன்
காழியண நாவலனைக் கண்டு.

48. காக்கும் காராளர் கை

''கம்பர் வாக்கு'' என்ற குறிப்புடன் இப்பாடல் காணப்படுகிறது.

ஏர்க் கலப்பை பிடிப்பதும், வேல்படையுடைய மன்னர்களும் விரும்பிப் பார்ப்பதும், வரும் தீமைகளைக் நீக்குவதும், என்றும் நிலை யாக இருப்பதும், என்றென்றும் உலகைப் பாதுகாப்பதும் வேளாளர் கையாகும்.

மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை
ஆழி தரித்தே அருளும்கை - சூழ்வினையை
நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி
காக்கும்கை காராளர் கை''.

49. என்றும் உழவே இனிது

இன்று வேளாண்மையாகிய உழவுத் தொழில் செய்வது மிக அரிய செயல் என்று பொதுவாகக் கூறப்படுகிறது.

ஆனால் ஏர் இரண்டும், வீட்டில் தயாராக விதையும், நிலத்தின் அருகே நீர் நிறைந்த கிணறும், அருகில் ஊரும், சொல் கேட்கும் பணியாளர்களும் கூடினால் என்றும் உழவுத் தொழில் மிக இனியதாக இருக்கும்.

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் - ஊருக்குச்
சென்று வரஅணித்தாய் ஏவலரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது.

50. பட்டமரம் தழைத்தது!

தொண்டை மண்டலத்து வல்லம் என்னும் ஊரில் நம்பிகாளி என்னும் புலவர் இருந்தார். பாடல் இயற்றுவதில வல்லவர். தெய்வ அருள் பெற்றவர். ஒருமுறை நம்பி காளி தன் மாணாக்கர்களோடு மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயில் அருகில் உள்ள நெருவூர் வந்தார். அங்கிருந்த பார்ப்பனர் சிலர் தமிழையும், தமிழ்ப் பாடல்களை மட்டுமல்ல தமிழ்ப் புலவராகிய நம்பி காளியையும் இகழ்ந்தனர்.

மாணாக்கர்கள் தமிழின் பெருமை, தமிழ்ப் பாடல்களின் அருமை ஆகியவற்றையும் நம்பி காளியின் புகழையும் அப்பார்ப்பன ரிடம் எடுத்துக் கூறினர். அதற்குப் பார்ப்பனர்கள் அப்படியானால் இதோ இந்தப் பட்ட மரத்தை உங்கள் தமிழ் தழைக்கச் செய்யுமா? என்று கேட்டனர். மாணாக்கர் வற்புறுத்தவே நம்பிகாளி கீழ்க்கண்ட பாடலைப் பாடினார். பட்டமரம் தழைத்தது என்பர்.

தெய்வத் தமிழென்னும் செம்மொழியும் அம்மொழிநேர்
செய்விப்பர் தேவரெனல் தேறத் - தெய்வம்
சுரந்தளிக்கு மாநெருவூர்ச் சோலையிலே பட்ட
மரந்தளிர்க்க இன்று வளர்ந்து.

51. வேட்டி பறிபோனது

ஒருமுறை நஞ்சயப் புலவர் சென்னிமலை சென்றார். முன்னிரவு வேளை, பவுர்ணமி நிலாக் காய்ந்து, பட்டப் பகல் போல நிலவொளி வீசியது. அப்போது சில திருடர்கள் நஞ்சயப் புலவரை வழிமறித்தனர். புலவரிடம் பொருள் ஒன்றும் இல்லை. வேட்டி புதியதாக இருந்தது. அதைப் பிடுங்கிக் கொண்டு சென்றனர்.

நஞ்சயப் புலவர் செய்வதறியாது சென்னிமலை ஆண்ட வரிடம் முறையிட்டார். அது கீழ்வரும் பாடலாக உருவெடுத்தது. அவர் கேட்காமலே யாரோ வந்து புலவருக்கு வேட்டி கொடுத் தார்களாம்.

பட்டப் பகல்போல் பரந்துநிலா தானுறைக்க
துட்டனென்ற பேரைவிட்டு சோமன் பிடுங்கவைத்தாய்
வெட்டவெளி யாச்சுநஞ்சன் வேட்டிவரப் போவதில்லை
அட்டியென்ன சொல்லுமையா அழகுசென்னி மலையாரே.

52. பணம் போனது! பாட்டு வந்தது!

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணல் என்ற ஊரில் நாச்சிமுத்துப் புலவர் என்பவர் இருந்தார். புதுப்பைப் புலவர் வழி வந்த பரம்பரைப் புலவர். விரைவாகப் பாடல் இயற்றும் வல்லமை பெற்றவர். தவிடு வியாபாரமும் செய்தார்.

சுற்று வட்டார ஊர்க்குச் சென்று பாடல் பாடிப் பணமும், தானியமும் பெற்று வருவார். கதாகாலட்சேபம் போலப் பிரசங்கமும் செய்வார். அவ்வாறு சேர்த்த பணம் ஒருமுறை காணாமல் போய் விட்டது. வருந்தினார். அவ்வருத்தம் ஒரு பாடலாகவும் மலர்ந்தது. பணம் இருந்தால் மதமும், பெரியதனம் எண்ணமும் வருமாம்.

பதினாறு மாகாணி கொண்டதொரு பணமே
பகரரிய எட்டரைக்கால் ஆனதொரு பணமே
சதுரான நாற்பத்தெட்டு ஆனதொரு பணமே
தயவுடனே நாலுகால் கூடியொரு பணமே
மதமுடனே பெரியதனம் ஆக்கிவைத்த பணமே
வையகத்தில் பாடுபட்டுத் தேடிவைத்த பணமே
கதையுடனே கம்புகொண்டு தவிடுவித்த பணமே
கையைவிட்டு அய்யய்யோ போனாயே பணமே!

53. புலி கொன்ற எருமைக் கன்று

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், சிவகிரி (தலைய நல்லூர்) கவுண்டம்பாளையத்தில் நஞ்சயப் புலவர் என்பவர் பெரும் புலவராக விளங்கினார்.

ஒருமுறை நஞ்சயப் புலவர் திங்களூர் அருகில் உள்ள அருள்மலை முருகன் கோயிலுக்குச் சென்றார். அப்போது அப்பிச்சிக் கவுண்டர் என்பவர் மகன் தன் எருமைக் கன்றைப் புலி கொன்றதாக வருத்தத்துடன் கூறினார். அவனும் முருக பக்தன்தான். உடனே நஞ்சயப் புலவர் முருகப் பெருமானை வேண்டிப் பாடினார். அப்பாடலே இது. எருமைக் கன்றைத் தருமாறு முருகனிடம் வேண்டுகிறார்.

மருமைக் கன்னி மகேசுவரி மைந்தனே
பிருமச் சம்பிர னேஎனைப் பேணுவாய்
அருமைக் கந்தாகு காஎன்றன் அய்யனே
எருமைக் கன்றை இனித்தரு வாயே.

54. சத்திரியனுக்கும் நாவிதனுக்கும் சிலேடை

இராமையா என்ற வள்ளல் ''சத்திரியனுக்கும், நாவிதனுக்கும் சிலேடையாக பாடல் பாடுக'' எனக் கேட்டபோது புலவர் பாடியது.

முடிவாங்கி வைத்து முதுமங் கலனா
வடிகத்தி யத்த மருவி - படிபுகழச்
சத்திரம்வைத் துள்ள தரத்தால்ரா மையாகேள்
சத்திரிய நேர்நாவி தன்.

சத்திரியன் அரசர் கிரீடத்தை வாங்கி வைப்பார் நாவிதர் முடியை எடுப்பார்.

சத்திரியன் வாண்மங்கலம், நாண்மங்கலம் போன்ற விழா எடுப்பார்.

நாவிதருக்கு மங்கலன் என்ற பெயர் உண்டு.

சத்திரியன் சத்திரம், சாவடி கட்டுவார் நாவிதன்; அறுவைச் சிகிச்சை செய்வான்.

55. ஓலைச் சுவடிக்கும் ஓணானுக்கும் சிலேடை

ஓலைச் சுவடியில் எழுத்து வரியுண்டு.
ஓணான் உடம்பில் வரி இருக்கும்.
ஓலைச் சுவடி கல்வி வல்லவரிடம் இருக்கும்.
ஓணான் வலிய அவரைச் செடி போன்றவற்றில் இருக்கும்.
ஓலைச் சுவடியில் ே, ர, ெ போன்ற குறிகள் இருக்கும்.
ஓணானுக்கும் பெரியதலை, கால், கொம்பு இருக்கும்.

இப்பாடல் புரவிபாளையம் பாளையக்காரர் கேட்க கார்மேகக் கவிஞர் பாடியது.

வரிகள் கடுமையாய் வல்லவரை யுற்று
பெரியதலை கால்கொம்பைப் பெற்று - மருவுதலால்
கோணாம லேஉதவும் கோப்பணவே ளேசுவடி
ஓணான்நேர் ஆமென் றுணர்.

56. வரடிகல்லுக்கும் தாசிக்கும் சிலேடை

ஒருமுறை பவானி பாலபாரதி திருச்செங்கோடு சென்றார். அப்போது திருச்செங்கோடு கோயிலில் மாணிக்கியாகப் பணியில் இருந்தவர் அழகு நாச்சி. அழகு நாச்சி தமிழ் கற்றவர். கவிபாடும் ஆற்றல் மிக்கவர். அழகு நாச்சியின் கவிபாடும் திறமை பற்றி ஏற்கனவே நன்கு அறிந்த பாலபாரதி அழகு நாச்சியிடம் மலை உச்சியில் தெரியும் வரடி கல்லைக் காட்டி அந்த வரடி கல்லுக்கும், தாசிக்கும் சிலேடையாக ஒரு வெண்பா பாடுமாறு கேட்டார். அப்போது அழகு நாச்சி பாடிய பாடல் இது.

வரடி கல்		மேகம் தங்கும்
தாசி		மேக நோய் உடையவள்
வரடி கல்		மகப்பேற்றிற்குப் பலர் சுற்றுவார்
தாசி	-	அவளிடம் இன்பம் துய்க்கப் பலர் சுற்றுவர்

வரடி கல் நாகமலை மீது உள்ளது
தாசி அவள் கரம் பற்ற காமுகர் விரும்புவர்

மேகம் உறையுதலால் வேண்டினபேர் சுற்றுதலால்
நாகமலை மீதிலுற நண்ணுதலால் - யோகர்புகழ்
ஆசுமது ரம்பாடும் ஐயாசுப் பையாகேள்
தாசியெனும் வந்திகல்லுத் தான்.

57. பாலபாரதி பாடல்

பாலபாரதியும் சில பாடல்கள் பாடினார். இது அப்பாடல்களைக் கேட்ட அழகுநாச்சி பாடிய பாடல். பாலபாரதி பாடலைக் கேட்ட மகிழ்வில் இரவு பகல் உண்ணவும் இயலாது என்றார்.

வேதமங்கை - பவானி அம்மன் வேதநாயகி

நண்ணாவூர் - பவானி

இன்று பவானிக் கோயில் சிவன் சங்கமேஸ்வரர் என்று அழைக்கப்பட்டாலும், பழம் பெயர் நண்ணாவுடையார். வேதநாயகியின் பழம் பெயர் பண்ணார் மொழியம்மை.

கல்லும் இளகும் உனதமுதக்
கவிகள் கேட்ட எனதுசெவி
அல்லும் பகலும் என்னவுண
வருந்தும் ஐயா வேதமங்கை
வல்லி முளைத்த நண்ணாவூர்
வாழ்வே வால பாரதியே
சொல்லும் தமிழுக்கு எழுகடலே
சொல்லாய் கலைகள் வல்லோயே!

58. நெற்போர் வெந்தது!

கொங்கு குறுப்பு நாட்டு விசயமங்கலம் இன்று ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் உள்ளது. அவ்வூரில் சாமிநாதப்

புலவர் என்பவர் வாழ்ந்து வந்தார். கவி பாடுவதில் வல்லவர். பல வள்ளல் பெருமக்களைப் பாடிப் பரிசில் பெற்றார். ஒரு சமயம் பொங்கலூர் நாட்டுப் புத்தரச்சல் என்னும் ஊருக்குச் சென்றார். புத்தரச்சலில் பெரும் செல்வந்தர் முத்தானிடம் சென்று தன் வறுமையைப் போக்க நெல் கேட்டார். ஏராளமான நெல் மலைபோல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. முத்தான் புலவருக்கு நெல் இல்லை என்று கூறினார். புலவர் கீழ்க்கண்ட வசை வெண்பாப் பாடினார். நெல் போர்கள் எல்லாம் தீப்பிடித்து வெந்து சாம்பலாயின.

பாழ்த்தவப் புற்றிரைச்சல் பாவிமுத்தான் குன்றையொப்ப
வீழ்த்தநெற்போர் வெண்பொடியாய் வேகவின்றே - வாழ்த்தக்
கொடாதான் இடாதான் குறுந்துணியுந் தோய்ந்தே
உடாதான் பெருந்துயருள் உற்று.

59. கருணாகர மாலை அச்சிட்டார்

திருச்செங்கோடு அ.முத்துசாமிக் கோனார் சந்தைக் கடைகளில் அளக்கும் படி அரசு முத்திரைப் படிதானா என்பதைப் பரிசோதித்து அறியும் 'படி மேஸ்திரி' வேலை பார்த்தார் (வயது 25). 'கருணாகரமாலை' என்னும் நூல் செங்கோட்டு வேலவர் பற்றியது. ஓலைச் சுவடி தேடிப் பெயர்த்து எழுதி 1881இல் சென்னை சென்று அச்சிட்டு வந்தார்.

அச்செயலைப் பாராட்டி திருச்செங்கோடு சிற்றம்பல நாவலர் மாணாக்கர் பழனிவேலு உபாத்தியாயர் பாடிய பாடல். தி.அ. முத்துச்சாமிக் கோனாரை 'முத்தமிழ் கற்றவர், நாவலவர் என்று பாராட்டுபவர் கருணாகரமாலை படித்தால் உண்டாகும் பயனையும் ஒரு பாடலில் பாடியுள்ளார்.

கருணா கரமாலை கற்றவர்க்கும் மற்றவர்க்கும்
தெருணாக ரீகச் செவியார் - அருணாடி
முத்தமிழ்சொல் முத்துச் சாமியெனும் நாவலவர்
சித்தமுற அச்சிட்டான் தேர்ந்து.

60. கருணாகர மாலை நூற்பயன்

திருநாக மாமலைவாழ் செல்வக் குமாரர்
கருணா கரமாலை கற்றோர் - திருவாழ்வும்
வாணாளும் புத்திரரும் மாதவமும் பெற்றுநிலை
கோணாமல் வாழ்வார் குறித்து.

61. அவிநாசி மான்மியம்

கணக்கரில் மாடல குலத்தைச் சேர்ந்த இளையான் கவிராயர் அவிநாசி மான்மியம் இயற்றினார்.

மாடலர்கோன் கொற்றை வைத்தியநா தன்இளையான்
பாடல்செய்தான் இன்பப் பரைக்காண - ஆடல்செய்த
அற்புதா னந்த அவிநாசி மான்மியத்தைச்
சொற்பனுவ லாகத் தொகுத்து.

62. அப்பிரமேயர் தல புராணம்

கணக்கரில் மாடவ குலத்தைச் சேர்ந்த இளையான் கவிராயர் அப்பிரமேயர் தல புராணமும், அவிநாசித் தல புராணமும் இயற்றினார்.

மருவளர் செந்திரு வனசத்தார் சுசீலன்
    வரிசையன்ன பரித்து வசந்தன் குபேரன்
திருவளர்சேர் திருமாடல கோத்திரத்தில்
    செனித்ததிகத் தமிழ்க்கடலான் தேர்ந்த நெஞ்சன்
அருள்பரவும் அப்பிர மேசர் புராணம்
    அவிநாசி லிங்கர் புகழிரண்டும் செய்த
வருணமுதல் சம்பந்தர் பதத்தைப் போற்றி
    வளரிளையான் தமிழுலகில் வாழி தானே.

63. கல் நந்தி கடலை தின்றது!

ஒருமுறை சிவப்பிரகாசர் திருச்செங்கோடு வந்தார். மலைக்கு வழிபடச் சென்றார். அவர் பெருமையை அறிந்த பலர் அவரை வரவேற்றனர். அவரைப் பற்றி அறியாத சிலர் ''சிவப்பிரகாசர் அருட்கவிஞர் என்றால் இதோ இந்தக் கல் நந்தியைக் கடலை தின்னச் செய்வாராக'' என்று இகழ்ந்தனர். கடலையும் போட்டனர். அடியார் வேண்டுகோளுக்கு இணங்க சிவப்பிரகாசர்,

''இறைவனே மதுரையில் கல்யானை கரும்பு தின்னச் செய்தாய். அது உண்மையானால் இதோ இந்தக் கல் நந்தி (இடபம்) எழுந்து கடலை தின்னச் செய்' என்றார். அப்போது கல் இடபம் கடலை தின்ற அதிசயம் நடந்தது. இப்பாடல் அப்போது சிவப்பிரகாசர் பாடிய பாடல்.

வில்லார் பொதுச்சபையின் வித்தகா நீயுமுனங்
கல்லானைக்கு இக்கருத்திக் காட்டியவன் - வல்லாண்மை
கட்டுரையே யாயின்இந்தக் கல்லே றெழீஇக்கடலை
இட்டஇவர் முன்தினச்செய் யே.

64. செருப்பு திருடியவன்

ஒருமுறை மடவளாகம் இலட்சுமண பாரதி இன்றைய திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம் நீலம்பூர் காளி கோயிலுக்கு வழிபடச் சென்றார். கோயிலில் அவர் செருப்புக் காணாமல் போய் விட்டது. அதுபற்றி நீலம்பூர் காளிகோயிலில் காவல் தெய்வமான கருப்பண னிடம் கீழ்வரும் பாடலைக் கூறினார்.

''கருப்பண்ணன் இரும்பு அரிவாள், வண்ணத்தடி, சக்கரம் இவைகளை ஏற்றுக் காவல் காப்பவர். காளியை வணங்கிப் பாட வந்தவரின் செருப்பைத் திருடியவனைப் பிடிக்க உன்னால் முடியவில்லையா' என்பது பாடல் பொருள்.

இருப்பரி வாளும் வளைதடி சக்கரம் ஏந்தியொரு
உருப்பண்ணி னான்குய வன்கருப் பணனென்று உன்னையுமே
பொருப்பரி நீலம்பூர் காளியைப் பாடும் புலவரிடும்
செருப்பைத் திருடி னவனைப் பிடிக்கத் திறமில்லையே!

65. புலவர் இட்ட சாபம்

தென்கரை நாட்டுப் புலவர் நாச்சிமுத்துக் கவிராயர் "மகாவித்துவான்" என்று பாராட்டுப் பெற்றவர். ஒரு செல்வரிடம் புலவர் சிறிது பொருள் கேட்டார். செல்வர் பொருள் கொடுக்காதது மட்டுமல்லாது புலவரை இகழ்ந்தார். அச்செல்வர் மீது புலவர் பாடிய வசைப் பாடல் இது.

ஆடழிய மாடழிய அஞ்சுபனங் காடழிய
வீடழிய எல்லாமே வீழ்ந்துவிடப் - பீடழிய
கூரிழந்து கட்டுக் குடியிழந்து கும்புவாய்
சீரிழந்து வேறோரூர் சென்று.

66. ஏன் காய்த்தாய் தென்னை மரமே!

சிவகிரி (தலையநல்லூர்) கவுண்டம்பாளையம் நஞ்சயப் புலவர் ஒருமுறை சென்னிமலைக்கு வழிபடச் சென்றார். சென்னிமலை அருகில் சென்றவர் ஒரு தோட்டத்தில் தென்னை மரம் இருப்பதைப் பார்த்து "சென்னிமலையாண்டவரை வழிபடப் போகிறேன், எனக்குத் தேங்காய் வேண்டும்" என்று கேட்டார். தோட்டத்துக்காரர் தேங்காய் தர மறுத்து விட்டார். உடனே நஞ்சயப் புலவர் தென்னை மரம் நோக்கி கீழ்வரும் பாடலைப் பாடினார். அத்தென்னை மரம் காய்ப்பதை நிறுத்தி விட்டது என்று கூறுகின்றனர்.

நஞ்சயப் புலவர் பாடிய பாடல்,

கன்னமிடுங் கள்ளருக்கும் காமவலை மாதருக்கும்
தின்னவோ காய்த்தாய் சிவசிவா - இந்நிலத்தில்

தேன்காய்த்த சென்னிமலைச் செவ்வேளுக் காகாமல்
ஏன்காய்த்தாய் தென்னைமர மே.

67. பெய் எனப் பெய்யும், நில் என நிற்கும்

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம் கவுண்டம்பாளையத்தில் வாழ்ந்த நஞ்சயப் புலவர் ஒருமுறை சிவகிரி வேலாயுதசுவாமி கோயிலுக்கு வழிபடச் சென்றார். சில காலம் சிவகிரியில் மழை இல்லாமல் கடும் வறட்சி நிலவியது. அங்கு கூடியிருந்த மக்கள் மழை இல்லாமையைக் கூறி புலவரிடம் முறையிட்டனர்.

நஞ்சயப் புலவர் இறைவனிடம் வேண்ட சிறிது நேரத்தில் மேகம் கூடிப் பெருமழை பெய்தது. நிற்காமல் தொடர்ந்து பெய்த மழை பல இடையூறுகளை விளைவித்தது. உடனே மக்கள் நஞ்சயப் புலவரிடம் மழையை நிறுத்தச் செய்யுமாறு கூறினர். புலவர் மழை நிற்கப் பாடியதும் மழை நின்றது.

நஞ்சயப் புலவர் மழை பெய்யுமாறு பாடியது

தந்தைக்கு எருமைதனை இன்பத்தி னுடன்உனது
தந்தைக்கும் அருள்குரிசிலே
இந்துக்குள் இனியமொழி கண்டுற்று மகிமைபுரி
இன்றைக்கு மழைபொழியவே
சொந்தத்தில் உலகமது நண்புற்ற அறிவினொடு
துங்கத்தில் உனைநினையவே
மைந்தர்க்கு மனமகிழ வும்கற்ற சிவகிரியில்
வந்துற்ற குமரகுருவே.

பெருமழை பொழிந்து நீர் நிறையவே மழை நிற்கப் பாடியது.

கட்டாப்புக் காட்டிய மாதர்கண் வாளியில் காந்திநொந்த
தெட்டாப்புக் காட்டிய மூடனை எப்படிச் சேர்குவையோ
நெட்டாப்புக் காட்டிய வானின் கருக்கலை நீக்கிநல்ல
வெட்டாப்புக் காட்டையா பொன்னருள் மாமலை வேலவனே.

68. ஆதி கம்பன் எனச் சொல்லலாம்!

சேலம் சுந்தர முதலியார் என்பவர் 'திருச்செங்கோட்டுக் கலம்பகம்' என்ற நூலைப் பாடினார். அதனைப் பாராட்டி ஜே.டி. மானுவேல் என்பார் பாடிய பாடல். சொல்லழகு, பொருள் அழகு போன்ற கலம்பகத்தின் சிறப்புக்களையெல்லாம் கூறி பாவலர்கள் மற்றும் யாவரும் ஏற்கும் வண்ணம் பாடிய சுந்தரமுதலியாரை ஆதிகம்பன் என்று பாராட்டலாம் என்று கூறுகிறார்.

வாக்கும் சொற்பொலி வும்துறை மார்க்கமும்
　　வண்ண மும்பொருள் கொள்ளும் வகையதும்
நோக்கும் சீர்ப்பர நோக்கமும் மேலவர்
　　நேர்மை செய்யத் தகைபெறு வண்மையும்
பார்க்க இன்பம் உறுவத லால்திகழ்
　　பாவ லோர்கள் துதிக்கக் கலம்பகம்
ஆர்க்கும் ஏற்கப் புகல்சுந் தரன்தனை
　　ஆதி கம்பன் எனச்சொல்ல லாகுமே.

69. சூல் அறியாத ஆண்கள்!

தக்கை இராமாயணம் இயற்றிய பக்தர்பாடி எம்பெருமான் கவிராயர் மனைவி பூங்கோதையும், தாரமங்கலம் வணங்காமுடிக் கட்டி முதலியின் மனைவி சின்னம்மையாரும் உற்ற தோழிகள். இருவருமே தமிழ்ப் புலமை பெற்று கவி இயற்றும் ஆற்றல் பெற்றவர்கள்.

ஒருமுறை பூங்கோதை வீட்டுக்குச் சின்னம்மையார் வந்திருந்தார். கவிஞர் எம்பெருமானைப் பார்க்க வந்த சிலர் வெளியே காத்திருந்தனர். காத்திருந்தவர் இடையே பெண்களைப் பற்றிய பேச்சு வந்தது. அனைவரும் ஆண்களை விட பெண்கள் அறிவில் குறைந்தவர்கள் என்ற பொருளில் பேசிக் கொண்டிருந்தனர். இதைக்

கேட்ட பூங்கோதையும், சின்னம்மையாரும் கீழ்க்கண்ட பாடலை ஒரு ஓலையில் எழுதி வேலைக்காரர் மூலம் வெளியே காத்திருப்பவர்களிடம் கொடுக்குமாறு கூறினர். காத்திருந்தவர்கள் இப்பாடலைப் பார்த்தவுடன் பேசாமல் அமைதியாயினர்.

வெளியே சென்றிருந்த எம்பெருமான் வந்து இப்படிப் பாடல் எழுதி காத்திருந்த ஆண்களிடம் கொடுக்கலாமா? என்று கேட்டார். அதற்குப் பெணமணிகள் இருவரும் தக்க விடையளித்தனர்.

ஒரு கரு பெண்ணிடம் வந்து சேரும் முன் ஆணிடம் இரண்டு மாதம் இருப்பது ஆண்களுக்குத் தெரியாது. ஆனால் பெண்கள் கருவில் சூல் அமைவதை அறிவார்கள். இதைத்தான் எழுதினோம் என்றார்கள்.

அறிவில் இளைஞரே ஆண்மக்கள் மாதர்
அறிவில் முதிஞரே ஆவர் - அறிமாதர்
தான்கொண்ட சூலறிவர் தந்தையர் ஆண்மக்கள்
தான்கொண்ட சூலறியா தார்.

70. ஈரோடு மகளிர் இயல்பு

பண்டைய ஈரோட்டு மகளிர் பற்றிய பாடல் ஒன்று அவர்கள் பக்தித் திறத்தை விவரித்துக் கூறுகிறது.

அதிகாலை காவிரி சென்று முழுகி, தீர்த்தம் கொண்டு வந்து தம் கணவர் பூசைக்குக் கொடுத்து அவர்களையே தெய்வம் என வணங்குவார்களாம்.

பூவார் அதிகா லையில்எழுந்து
பொன்னி படிந்து நீர்க்குடமும்
புடைத்திட்டு எழுந்த மார்பதனில்
பொலியும் இரண்டு பொற்குடமும்

ஆவா என்ன நடைநடந்திட்டு
அசைந்து மெலிந்து கமலமுறும்
அன்ன நடையும் ஞானியராம்
அறிஞர் நடையும் தடுமாற

பூவால் அமைந்த தாளதினால்
புற்றே யாம நடைநடந்து
போய்இல் சென்று தம்கணவர்
பூசா விதிக்குப் புனல்கொடுத்து

தேவா லயமும் தேவதையும்
தேவா நீயே எனத்தொழுகும்
திகழும் மடவார் கற்பதனால்
செறுக்கும் ஈரோடு எனும்பதியே.

71. கார்மேகக் கவியைக் காண வந்தேன்

திருச்செங்கோட்டில் வாழ்ந்த வீமணக் கவிராயர் மிகச் சிறந்த பெரும் புலவர். அவர் ஒருமுறை விசயமங்கலம் ஜினேந்திரன் என்ற இயற்பெயருடைய கார்மேகக் கவிஞரைக் காண வந்தார். வளம் மிக்க விசயமங்கலத்தில் உள்ள சமணக் கோயிலில் எழுந்தருளியுள்ள சந்திரப்பிரப தீர்த்தங்கரர் அருளால் வந்த துன்பங்களையெல்லாம் நீக்கி நல்வாழ்வு வாழும் கார்மேகக் கவிஞரே உம்மைக் காண வந்தேன் என்று கூறிய பாடல்.

தளையவிடா மரையொளித்த பேட்டடியில் சூட்டனந்தன்
தலைகீழாக
வளையவணங் கப்புலவி நீங்குவன வயல்விசய
மங்கையோங்கும்
இளையசந் திரப்பிரப நாயகரை யேத்திமனத்து
இடரையெல்லாம்

களையவரு கார்மேகக் கவியரசே வந்தனன்நிற்

காணஎன்றே!

72. வீமணக்கவி மொழி அமுது

ஒருமுறை திருச்செங்கோடு பெரும்புலவர் வீமணக் கவிராயர் விசயமங்கலம் கார்மேகக் கவிஞரைக் காணச்சென்றார். கார்மேகக் கவிஞரைக் காண வந்ததாக வீமணக் கவிராயர் பாட பதிலுக்குக் கார்மேகக் கவிஞர் 'வளம் மிக்க திருச்செங்கோட்டில் ஓவணன் அருளால் கவித்துவம் பெற்று விரைவில் கவிபாடவல்ல உம்மிடம் அளவளாவ விரும்பினேன்' என்று பாடிய பாடல்.

வீமணம ளாவுசிறு காலறுகா லுழுதாது மென்றூட்டுவ
வீமணவி ழாவிழைபூம் பொழிறிகழுஞ் செங்கோட்டின் மேவிவீர
வீமணவோ வணனருளால் பகைநூறி நிமிடகவி விளம்பவல்ல
வீமணநா வலநினது சல்லாப மொழியமுது விரும்பினேனே.

72. அ. வசை அல்ல வாழ்த்தே

எல்லா இடங்களிலும் கவிப் போட்டியில் வென்று பரிசில் பல பெற்ற படிக்காசுப் புலவர் கவசை - கோயில்பாளையம் இம்முடி மசக்காளி மன்றாடியாரின் தமிழ்ச் சங்கப் புலவர்களிடம் தோல்வி யடைந்து தம் விருதுகளையெல்லாம் இழந்தார். அந்த வருத்தத்தில் படிக்காசுப் புலவர் பாடிய பாடல்.

அஞ்சாலி மக்களும் சாணாரும் பாணரும்

அம்பட்டரும்

செஞ்சாயக் காரரும் வேசையர் மக்களும்

செந்தமிழைப்

பஞ்சாகப் பண்ணி ஒருகாசுக்கு ஒருவண்ணம்
பாடலுற்றார்
நஞ்சாகப் போச்சுதை யோஎன் தமிழ்கொங்கு
நாடெங்குமே.

கோயில் திருப்பணி, கொடை

73. நாட்டு வேலன் நற்கொடை

முளசி கண்ணகுல நாட்டுக் கவுண்டர் மரபின் வேலப்ப கவுண்டர் திருச்செங்கோட்டில் செய்த திருப்பணிகளை இப்பாடல் விளக்குகிறது. திருச்செங்கோட்டு மலை அடிவார சிவன் கோயிலான கயிலாசநாதர் கோயிலில் கிணறு வெட்டி வைத்தார். மலையில் தேவார மூவரான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோருக்குக் கோயில் அமைத்தார். அவரால் அவருடைய கண்ணகுலம் பெருமையடைந்தது.

கன்னல்செறி கோதைக் கயிலாயர் கூபம்மலைப்
பன்னுதமிழ் மூவர் படர்கோயில் - முன்னமருள்
நாட்டுவே லன்புரிந்தார் நன்மையுடன் கண்ணர்குலம்
மேட்டிமையாய்த் தான்வாழ்க வே.

74. காராளர் வேலன் பணி

பருத்திப்பள்ளி நாட்டார் ஆகிய செல்லன்குல வேலப்ப கவுண்டரின் திருச்செங்கோட்டுக் கோயில் திருப்பணிகளை இப்பாடல் விளக்குகிறது.

அர்த்தநாரீசர் விழா, மண்டபக் கட்டளை ஆகியவைகளை மிகவும் சிறப்பாகச் செய்தார். அவர் மிகவும பக்தியுடையவர்.

அர்த்தபா கத்திருநாள் அம்மண் டபச்சிறப்பும்
மெத்தவே தான்நடத்தி மேவினான் - பத்திபுனை

ஞாலம் புகழ்பருத்தி நாடுடையோன் காராளன்
வேலன் கனமாக வே.

75. செட்டியாக் கவுண்டர் திருப்பணிகள்

குமரமங்கலம் தூரன்குல செட்டியாக் கவுண்டர் பல திருப் பணிகள் திருச்செங்கோட்டில் செய்தார்.1. கயிலாசநாதர் கோயில் மகாமண்டபத் தாண்டவக் குறடு, 2. மலை விநாயகர் கோயில் குறடு, 3. மலை நடராசர் குறடு, 4. மலைப் படிகள், 5. சிவதீர்த்தத் தெற்கே 100 படிகள் 6. நூறாம்படி விரிவாக்கம் 7. வயிரவ தீர்த்தத் தென்மேற்கே இளைப்பாற்றி மண்டபம்.

ஆடரவ கிரியின்அடி வாரம்உறை கயிலாயர்
ஆலய மகாமண்டபத்து
அழகுதாண் டவக்குறடு மலைவிநா யகர்குறடும்
அகலநட ராசர் குறடும்

சேடகிரி ஏறுபடி சிவதீர்த்தத் தெட்சிணத்
திசைநூறு பெரியபடியும்
செஞ்சொல்நூ றாம்படி தனைப்பெரிய தாகவே
செய்வித்த ஏழுதர்மம்

நீடுவயி ரவதீர்த்த நிருதிதிசை யாகவும்
நிலமைதரு தலநாயகன்
நிறைமண்ட பத்திடை யும்இளைப் பாற்றியும்
நித்யம்அன தானநிபுணன்

நாடுபுகழ் குமரமங் கலம்மேவு தூரன்உயர்
நதிவம்ச குலசேகரன்
நன்மைதரு குமரபூ பதிசெட்டி அன்புடன்
நடத்தின திருப்பணிகளே.

76. கருவூலம் காத்த சுப்பராயன்

சிற்றளந்தூர் - சித்தளந்தூர் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் புகழ்பெற்ற ஊர். சிற்றழுந்தூர் என்பதே பழைய பெயர். கம்பர் பிறந்தது தேரழுந்தூர். "அழுந்தூர் வேள்" வரலாற்றுப் புகழ் பெற்றவர். சித்தளந்தூர் மிட்டாதார் கொங்கு வேளாளரில் தூரன் குலத்தினர். மிட்டாதாரை 'சமீன்தார்' என்றும் சில இடங்களில் கூறுவர். சித்தளந்தூர் மிட்டதார் முத்துச்சாமிக் கவுண்டர் மகன் சுப்பராயக் கவுண்டரின் திருச்செங்கோட்டுக் கொடையை இப்பாடல் விளக்குகிறது.

திருச்செங்கோட்டு ஊரில் சிவாலயம் கயிலாசநாதர் கோயில். இக்கோயிலை நிலத்தம்பிரான் கோயில் என்பர். மலைக்கோயில் மலைத் தம்பிரான் கோயில். சுப்பராயக் கவுண்டர் கயிலாச நாதர் கோயில் கருவூலத்துக்குப் பாதுகாப்பாக சிறந்த பூட்டு ஒன்றை நன்கொடையாக அளித்தார்.

மருவூரும் கோதை கயிலாய நாதர் மகாலயத்தில்
கருவூலத் துக்குஉயர் பூட்டி சைத்தொரு காப்பமைத்தான்
கருவூரும் சித்தளந் தூர்ச்சமீன் முத்துச் சாமிமகன்
திருவூரும் தூரன் புகழ்சுப்பராய சுபகரனே.

77. அர்த்தநாரீசர்க்கு அருங்கொடை

பருத்திப்பள்ளி நாட்டார் ஆகிய செல்லன்குலத்தார் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்குக் கீழ்க்கண்ட கொடைகளை மிகவும் அன்புடன் வழங்கினர்.

1. பருத்திப்பள்ளியில் நிலம், 2. பாலை மேட்டில் நிலம், 3. மல்ல சமுத்திரத்தில் வயல், 4. புகழ் பெற்ற கொன்னையாற்றில் ஐந்து மாநிலம், 5. துத்திநத்த வரிகள், 6. கொழுங்கொண்டை வெல்லம் ஒரு தாளி, 7. சான்றார் வரி, 8. வைகைப் பொன்மலைத் தேன் ஆகியவை.

தென்பருத்திப் பள்ளிநிலம் பாலை மேட்டில்
சிலநிலமும் மல்லசமுத் திரத்திற் செய்யும்
மன்பரித்த வளம்திகழும் கொன்னை யாற்றில்
மாஜந்தும் துத்திநத்த வரிகள் தாமும்
மின்பொருத்த மானகொழுங் கொண்டை தாளி
வெல்லமும் ஈழுவர்வரி வைகைப்பொன் தேனும்
அன்புடனே பருத்திநாட் டார்கள் கோதை
அர்த்தநா ரீசர்க்கே அளித்த தாமே.

78. இருப்புலி இளையான் திருப்பணிகள்

கீழ்க்கரைப் பூந்துறை நாடு இருப்புலி என்னும் ஊரைச் சேர்ந்த கொங்கு வேளாளரில் செல்லகுல இளையாக் கவுண்டர் செய்த திருச்செங்கோட்டுத் திருப்பணிகளை இப்பாடல்கள் விளக்குகின்றன.

திருச்செங்கோட்டு மலையில் செங்கோட்டு வேலவர் சன்னதி முன் உள்ள சிற்பச் சிறப்பு வாய்ந்த மண்டபத்தை இவர் உருவாக்கி னார். அது ஒரு விகாரி ஆண்டு. அவர் பெயர்தான் இளையான். எவருக்கும் இளைத்தவர் அல்ல என்று புகழ்கிறது இப்பாடல்கள். இவர் உருவாக்கிய மண்டபமே அக்கோயிலில் மிகச் சிறந்த பணியாகும்.

தென்னுலவு நாககிரி சித்திர மண்டபத்தை
மன்னுவடி வேலர்முன் வைத்தானே - பன்னுதமிழ்ச்
சொல்லில் இளையான் சுமுகன் விகாரிதனில்
பல்லுலகும் போற்றும் படி.

நாகமலைக் கோயிலுக்கு நாயகமென் றேமுருகர்க்கு
ஆகஒரு மண்டமுண் டாக்கினான் - பேகன்
இளையான் நிழலில் இமையவரும் ஆரும்
களையாற வேபணிவார் கள்.

79. வாழ்பருத்தி நாட்டார் கொடை

கீழ்க்கண்ட கொடைகளைத் திருச்செங்கோட்டு மலை அர்த்தநாரீசுவரற்கு அளித்துப் பருத்திப் பள்ளி நாட்டார் ஆகிய செல்ல குலத்தார் வரம் பெற்றார்கள்.

தினமும் கறி வகைகளோடு ஆறுபடி அரிசி அமுது படி, பூமாலை, மணப்பொருளில் காப்பு, மட தருமம், வைகாசித் திருவிழாவில் மண்டபக் கட்டளை, கோயில் பணிகள், வணிகர் வரி, திருமஞ்சனத்திற்கு காவிரி நீர், வாசனைத் திரவியம் ஆகியவை.

தினம்அமுது படியாறு கறிக ளோடு
 திருமாலை திருவிளக்கும் சுகந்தக் காப்பும்
அனமருவு மடதர்மம் திருவி ழாவில்
 அழகியமண் டபச்சிறப்பும் அமஞ்சி வேலை
கனமருவு பலர்உபய மார்க்க ரேகை
 காவிரிமஞ் சனம்புழுகுக் காப்பும் சாற்றி
மனமருவு கோதைஅரன் அருளி னாலே
 வாழ்பருத்தி நாட்டவர்கள் வரம்பெற் றாரே.

80. காலிங்கராயன் கொடை

கால்வாய் வெட்டிய காலிங்கராயன் பல கோயில் திருப்பணி செய்து, கொடைகளும் கொடுத்தார். திருச்செங்கோட்டுக் கோயிலுக்கு ஒரு பெரிய சிவலிங்கம் செய்து கொடுத்து ஏழுமா நிலமும் கொடையாக அளித்தார். அதனால் மிகப் புகழ் பெற்றார்.

ஆலிங்க நாகமலை அர்த்தநா ரீசுரர்க்குக்
காலிங்க ராயன்எனும் காராளன் - மாலிங்கம்
ஒன்றேமா மாந்தை நிலமெழுமா வுங்கொடுத்தான்
நன்றே புகழெய்தி னான்.

81. குப்பண்ணன் கொடைகள்

காங்கய நாட்டுக் கீரனூர் ஆறு காணியாளர்களில் ஒருவராகிய கொங்கு வேளாளரில் ஆதி குலத்தைச் சேர்ந்த குப்பண கவுண்டர் சிவமலைக் கோயிலுக்குக் கொடையாக அளிக்கும் பூசைப் பொருட்களை இப்பாடல் விளக்குகிறது.

தயிர், பால், சாம்பிராணி, சூடம், நெய், தேங்காய் இவைகளை நாள்தோறும் மூன்று காலப் பூசைக்கும் கொடுப்பார். இவையன்றி கோயில் திருப்பணி, தேர்த் திருவிழா, அமாவாசைக்கும் வேண்டிய உதவிகளை கீரனூர் ஆதிகுலக் குப்பண கவுண்டர் கொடுப்பார்.

ஆயன் மருமகன் விசாகன் கார்த்திகேயன்
அன்னதான சுப்பய்யன் அம்பிகையருள்
சேயன் சிவமலை வேலர் திருப்பணிக்கும்
தேர்க்கும் பருவத்து அமாவாசைக்கும்
தோயும் தயிர்பாலும் தூபசாம்பி ராணிக்கும்
சூடமும் நெய்யும் தேங்காயும் செந்தமிழ்
ஆயும் கீரைநகர் ஆதிகுலக் குப்பண்ணன்
அந்திதிரி சந்தியும் அனுப்பும் உலுப்பை.

82. முளசைக் கண்ணர் பணி

அழகிய முளசி கண்ணகுலத்தார் நாள்தோறும் ஐந்துபடி அரிசி அமுதுபடிக்கு அளித்தனர். அவர்கள் பெயரில் பழைய மடம் அங்கு இருந்தது. பெரிய மண்டபம் கட்டினர். இறைவனுக்குத் தோள்மாலை அளித்தனர். திருச்செங்கோடு அர்த்தநாரீசரிடத்து மிகவும் பக்தியாக இவற்றைச் செய்தனர்.

தென்முளசைக் கண்ணர் தினம்அரிசி ஐந்துபடி
தொன்மடமா மண்டபமும் தோள்மாலை - தன்மம்
நடத்தினார் கோதைஅர்த்த நாரீசர் அன்பாம்
இடத்தின ராயிருந்தா ரே.

83. குறைபணி முடித்த குமரபுரியார்

கோதைக்கிரி - திருச்செங்கோட்டு மலை. திருச்செங்கோட்டு மலையில் சிவதீர்த்தத்தின் கிழக்கே மாசி மக விழாவுக்காகக் குமர மங்கலம் (குமரபுரி) தூரன் குல வேலப்பகவுண்டர் ஒரு மண்டபம் கட்டத் தொடங்கினார். பணி முற்றுப் பெறவில்லை.குறை பணியை, சுவர், பாதிக்குறடு ஆகியவற்றைக் குமரமங்கலம் தூரன் குலச் செட்டியாக் கவுண்டர் செய்து முடித்தார். மண்டபம் 'சித்திரக் கூடம்' என்று சிறப்பிக்கப்படுகிறது.

கோதைக் கிரியில் சிவதீர்த்தக் குணபால் சித்ர கூடம்என
மாதவர் நமக்கு மாசிமக வேலன் தொடுத்த மண்டபத்தில்
பாதிக் குறடு சுவர்ப்படைசெம் பாதிக் குறடு மேல்வேலை
நீதிக் குமர புரித்தூரன் நேயன் செட்டி புண்ணியமே.

84. விமானத் திருப்பணி

மோரூர் கண்ணகுலத்தில் காங்கேயர் மரபில் நல்லதம்பிக் காங்கேயன் மகன் குமாரசாமிக் காங்கேயன் செய்த திருச்செங்கோட்டுத் திருப்பணி இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. அர்த்தநாரீசர் முன் மண்டப விமானம் இவரால் கட்டப்பட்டது. எல்லோரையும் வணங்கிப் புண்ணியம் பெற்றார். கி.பி. 1629 ஆம் ஆண்டு இப்பணி நடைபெற்றது.

வெற்றிபுனை கலியுக சகாத்தம்ஆ யிரம்மிசை
　　விளங்கும்ஐஞ் ஞூற்றைம்பதில்
மேவுசுக் கிலவருடம் வைகாசி தன்னிலே
　　வியன்அரவ மலைமேலிடம்

பெற்றஉமை பாகர்பல கனிவாசல் தன்னிலே
　　பெரியமண் டபம்நடுவிலே
பிரியமுடன் ஏமகூ டத்தைநிகர் என்னவே
　　பேருலகு மகிழ்வெய்தவே

பொற்றிரு விமானமது கண்டனன் அனேகதவ
புண்ணியம் கைக்கொண்டனன்
பூசுரரை ஈசரைக் கவிஞோரை அரசரைப்
பூசித்து வரம்எய்தினன்

கொற்றமிகு மோரூர் படைத்தகண் ணன்கங்கை
கோத்திரம் தன்னில்உதயன்
கோகனக முகனான நல்லநா யகன்அருள்
குமாரச் சுவாமிதானே.

85. பொன்தகடு வேய்ந்த புரவலன்

தாரமங்கலம் கட்டி முதலிகள் பரம்பரையில் ஒருவரான சீயால கட்டி திருச்செங்கோட்டு மலை அர்த்தநாரீசுவரர் கோயில் விமானத்துக்குக் கலசம் வைத்தார். அவர் வைத்த கலசத்திற்குப் பொன் தகடு போர்த்தியவர் குமரமங்கலம் மிட்டாதார் தூரன்குல கைலாசக் கவுண்டர். இவர் ஏலத்தில் எடுத்துக் குமாரமங்கலம் மிட்டாதார் ஆனார். அதன் நினைவாக இந்தப் பணியைச் செய்திருக்கலாம்.

வேயாரும் தோளி உமைபாகர் மேவி விளங்குமங்கைச்
சீயால கட்டி முதலிமுன் செய்த சிகரமதில்
காயா டகத்தகடு ஏற்றியே நல்ல கலசம்வைத்தான்
சேயார் குமர புரிவாழ் கைலாச சிகாமணியே.

86. இளையான் அருஞ்செயல்

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு இருப்புலி செல்லன் குல இளையாக் கவுண்டர் பல பூசைகளையும், பல திருப்பணிகளையும் செய்து பிறவிப் பிணி நீக்கி வீடுபேறு அடையும் சிறப்புப் பெற்றார்.

செல்லன்இளை யான்இரும்பைச் செம்மலிரு பாணிகொண்டு
பல்லுலகெண் கோதைப் பதியார்க்கு - நல்ல
திருப்பணியும் பூசையும் செய்துசெய்து சென்மக்
கருப்பிணியை மாற்றிவைத்தான் காண்.

பழையகோட்டை மரபுப் பாடல்கள்

கொங்கு மண்டலப் பட்டக்காரர்கள் நால்வரில் ஒருவர் பழையகோட்டைப் பட்டக்காரர்கள். வரலாற்றுப் புகழ்மிக்க அம்மரபினர் சர்க்கரை, உத்தமக் காமிண்டன், மன்றாடியார் எனப் பட்டம் பெற்றவர்கள், பல புலவர் பெருமக்களை ஆதரித்துப் போற்றியவர்கள். அம்மரபினரைப் போல மிகுதியான புலவர்களால் பாடப்பட்டவர்கள் தமிழ்நாட்டில் வேறு எவரும் இலர். அம்மர பினரைப் பல்வேறு வகையில் புகழ்ந்து பாடிய புலவர்களில்,

கார்மேகக் கவிஞர்	நல்லய்ய பிள்ளை
வாலசுந்தரக் கவிஞர்	அரசப் பிள்ளை
குருநாத நட்டுவன்	சிவராம தேசிகர்
சிவகிரி பண்டிதர்	சிதம்பர தேசிகர்
சிற்பி சோமசுந்தரம்	தண்டாயுதபாணிக் கவிஞர்
சேற்றூர்க் கவிராயர்	சடைப் பெருமாள்
கருங்குமரப் புலவர்	அருணாசலக் கவிராயர்
ஆறுமுகக் குருக்கள்	மாம்பழக் கவிராயர்
அவிநாசிப் புலவர்	அம்பலவாணக் கவி
இராமய்ய பிள்ளை	பழனிவேல் வாத்தியார்
நடேச தீட்சிதர்	வீரபத்திரக் கவிராயர்
ஆறுமுகம் சேர்வை	கந்தசாமிக் கவிராயர்
பழனிமலை வாத்தியார்	காங்கயம் புலவர்
சேசாலக் கவிஞர்	இலட்சுமண பாரதி

போன்றோர் சிலர். பழைய கோட்டைப் பட்டக்காரர்களும், அம்மரபுப் பெண்களும் கல்வி கற்றுப் பாடல் இயற்றும் புலமையாளர்களாக விளங்கியுள்ளனர். அவர்கள் பாடல்களும் இங்கு இடம் பெற்றுள்ளன.

அம்மரபைச் சிறப்பிக்கும் வகையில் அம்மரபுப் பாடல்கள் சில இங்கு தனியாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

87. ஏன் சர்க்கரைப் பட்டம் வந்தது?

பழைய கோட்டை பட்டக்காரர் ஒவ்வொருவர் பெயரிலும் சில பட்டப் பெயர்களுடன் 'சர்க்கரை' என்ற பட்டமும் தவறாமல் இணைந்திருக்கும்.

கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார்.

நஞ்சையன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் என்பன போன்று அவர்கள் பெயர் அமையும். ஏன் இம்மரபினருக்குச் சர்க்கரை என்ற பட்டப் பெயர் வந்தது? இவ்வினாவை எழுப்பிக் கொண்டு புலவரே பதிலும் சொல்கிறார். சர்க்கரை ஒரு இனிமையான பொருள். அதுபோல இந்த உலகத்திற்கும், பிறருடைய காதுகட்கும், புலவர்கள் இவர்கள் மீது பாடுகின்ற கவிகட்கும் எல்லோருக்கும் எப்பொழுதும் இனிமையான சொல், செயல்களையே செய்வதால் சர்க்கரை என்று பெயர் பெற்றார்களாம்.

சிலர் 'சக்கரம்' என்பதே அடைமொழி என்பர். கலிங்கத்துப் பரணியில் படைத் தலைவரான கருணாகரத் தொண்டைமானை கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார். 'சோழன் சக்கரம்' என்பார். சக்கரம் ஆணைச் சக்கரம்.

ஆனால் பழைய கோட்டைப் பிற பாடல்களில் 'இனிப்புப் பொடி' என்றும், 'கனருசி' என்றும் வருவதால் சர்க்கரை என்பதே சரியான வழக்கு.

அண்மைக் காலம் வரை பழைய கோட்டை வட்டாரத்தில் வாழும் பொதுமக்கள் சர்க்கரையை சர்க்கரை என்ற பெயரால் குறிக்க மாட்டார்கள். சர்க்கரை என்றால் பட்டக்காரர் பெயர் ஆகி விடும்.

எட்டயபுரத்தில் மக்கள் எண்களைக் கூறும்பொழுது ஆறு ஏழு மகாராசா ஒன்பது பத்து என்பர். எட்டு என்றால் மகாராசர் பெயர் ஆகி விடுமே.

நற்காரை யூரில்வளர் நல்லசே னாபதிக்குச்
சற்கரையென் றோர்நாமம் சாற்றுவதேன் - மிக்க
புவிக்கும் செவிக்கும் புலவர்கள் சொல்லும்
கவிக்கும் இனித்தருசி கண்டு.

88. சர்க்கரையைப் பாடலாம்

செங்குன்றம் எல்லப்ப பூபதி பெரும் வள்ளல் இரவலர், புலவர்கட்கு வரையாது கொடுப்பவர். ஒரு புலவர் அவரிடம் வந்து 'எல்லப்ப வள்ளலே வாரி வாரிக் கொடுக்கும் கைகளையுடைய உங்களைப் போல எங்கு தேடினாலும் உங்கட்கு இணை எவரு மில்லை' என்று கூறினார். 'அப்படியா எவரும் இல்லையா?' என்று வள்ளல் கேட்கப் புலவர் ''உங்கட்கு இணை பழைய கோட்டை சர்க்கரை மன்றாடியார் மட்டும் உள்ளார். அவரையும் பாடலாம் வேறு எவரும் இல்லை'' என்று கூறினார்.

செங்குன்றை எல்லாநின் செங்கைக் கொடையதனுக்கு
எங்கெங்கும் தேடி இணைகாணேன் - கொங்கதனில்
சர்க்கரையைப் பாடலாம் தண்டமிழ்க்கொன்று ஈயாத
எக்கரையாம் பாடோம் இனி.

89. ஓடினான் பொன்னிக்கோன்

கொங்கு மண்டலப் பாளையக்காரர்கள் பலர் நாடாண்ட பேரரசர் ஆட்சிக்குத் துணை நின்றனர். பழையகோட்டை

மரபினராகிய பட்டக்காரர்கள் பாண்டிய அரசுக்குத் துணையாக இருந்தனர். பாண்டியருக்கும், சோழர்கட்கும் போர் நடைபெற்றது. பழைய கோட்டை மரபினர் பாண்டியன் சார்பில் சோழனோடு போர் செய்தனர். சோழன் தோல்வியுற்றான். பழைய கோட்டையார் (காரைக்கோன்) பாண்டியர் (கன்னிக் கோன்) ஏவலால் சோழரை (பொன்னிக்கோன்) விரட்டி ஓட்டினர். அப்போது சோழர் பட்ட பாட்டை இப்பாடல் விளக்குகிறது. வழியெல்லாம் இரத்தம், எங்கும் பல பிணங்கள். தூறுகளில் எல்லாம் ஓடும் சோழனின் கூந்தல் என்கிறது பாடல்.

ஆறெல்லாம் செந்நீர் அவனியெல்லாம் பல் பிணங்கள்
தூறெல்லாம் சோழன் சுரிகுஞ்சி - விறுபெறு
கன்னிக்கோன் ஏவலினால் காரைக்கோன் பின்தொடரப்
பொன்னிக்கோன் ஓடும் பொழுது.

90. பாண்டியன் சூட்டிய முடி

ஒரு சமயம் சோழனுக்கும், பாண்டியனுக்கும் பகை ஏற்பட்டுப் போர் நடைபெற்றது. சோழன் வேள்வி செய்து பூதம் ஒன்றை வரவழைத்துப் பாண்டியன் படை மீது ஏவினான். பாண்டியன் சார்பில் போரிட்ட பழைய கோட்டை கரியான் சர்க்கரை அம்மன் அருளால் பூதத்தின் வலிமையை அழித்துப் பாண்டியனுக்கு வெற்றியைத் தேடித் தந்தான். அதனால் மகிழ்ந்த பாண்டியன் கரியான் சர்க்கரைக்கு உத்தமச் சோழனை வெற்றி பெற்றதால் ''உத்தமக் காமிண்டன்'' என்ற பட்டம் தந்து முடி சூட்டினான்.

கலிஇரு நூற்றதில் விளம்பியின் மீனத்தில் கார்புரந்த
வலிபுக ழான கரியான் செயமாது வலிமையினால்
புலிதுசன் உத்தமக் காச்சோழன் ஏவிய பூதவலி
தொலைவுசெய்து எரிபுகச் செழியன்தன் னால்முடி
சூடினனே!

91. அழகன் சர்க்கரை பட்டாபிஷேகம்

தென்னிலை வேட்டுவர் தலைவர் கொங்கு ராயனை வென்றமைக்காக விசய நகர மன்னன் சார்பில் நஞ்சைய உடையார் சோமன் சர்க்கரை மகன் அழகன் சர்க்கரைக்குத் தாராபுரத்தில் பட்டக்காரராகப் பட்டாபிசேகம் செய்தார்.

பராபவ ஆண்டு மாசி மாதம் ஒன்பதாம் தேதி ''காரையூர்ச் செப்பேடு'' இந்த நிகழ்வை விவரிக்கிறது. பட்டாபிசேகம் செய்யப் பட்ட அழகன் சர்க்கரை அவர்களே பழைய கோட்டை மரபின் முதல் பட்டக்காரர் ஆவார்.

இப்பாடலைக் காரையூர் செயங்கொண்டய்யர் பாடியுள்ளார்.

கலியுக சகாப்தம் நாலாயிரம் முன்னூறுடன்
நாற்பத்து எட்டின்மேலாய்க்
காணும் பராபவ மாசிஒன் பான்தேதி
கனகொங்கு ராயன்சிரம்

மலியநே ராய்க்கண்டு ராயரின் சமஸ்தானம்
மன்னுகா ரியகர்த்தனாம்
மதிமிக்க நஞ்சையுடை யாரவர்கள் மனதினில்
மகாமிக மகிழ்ச்சிகொண்டு

ஒலிகொளும் முரசுகள் பேரிகை முழக்கமது
உலகெலாம் அறியும்படி
உத்தமக் காமிண்ட சோமன்சர்க் கரைமகன்
உயர்அழகன் சர்க்கரைக்கு

துலியபட் டுத்தாளி சவுக்களி கபாய்குஞ்சம்
தூயகா ளாஞ்சிகுல்லாய்
துத்தரபல் லாக்குடன் பட்டமும் தந்துமே
துலக்கமோ டனுப்பினாரே!

92. முடி சூட்டிய கரியான் சர்க்கரை

சொட்டை முனை ஆயுதத்தால் கரியான் சர்க்கரை எதிரிகளை வென்றதும், மதுரையில் சிறப்புப் பெற்றதும், கொங்கு இருபத்து நான்கு நாட்டு மக்கள் அதனால் மகிழ்ச்சி பெற்றதும் கூறப்படுகிறது. அவர் தந்தையார் சொக்கன் சர்க்கரையார். அவர் முடி சூடிய பட்டாபிஷேக நிகழ்ச்சி கூறப்படுகிறது.

முத்தூர் செல்லக் குப்பண கவுண்டர் பாடிய பாடல்.

பதினெட்டு முனைகட்டி எதிரிட்டு வருசொட்டை
பாருக்குள் வீரப்பனாம்
பயிரகுல சர்க்கரை நளச்சக்ர வர்த்திமுன்
பதினெட்டு வாள்பறித்து

கதிருற்ற மதுரைக்குள் பரிவிட்டு முனைபெற்ற
காண்டீப விருதுகொண்டோன்
காங்கயநன் னாட்டில்வரு செயசொட்டை வல்லவன்
காரைநகர் தனில்உதித்தான்

எதிரிட்டு வருதுட்டர் களைமுட்டி சிரம்வெட்டி
ஈரல்குடல் நிணம்வகுத்து
இருபத்து நாலுநாட் டுள்ளவர்கள் மனம்மகிழ
இரசிதச் சிவிகைபெற்றார்

மதிளுற்ற கரிஉக்ர வருசக்ர துரைமெச்ச
மகிழ்சொக்க மன்றாடியார்
மகன்கரிய சர்க்கரை உத்தமக் காமிண்டர்
மவுலிமுடி சூடினாரே.

93. பட்டக்காரர் பட்டாபிசேக நாள்

1906 ஆம் ஆண்டு நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் பட்டம் சூடிய நாள்.

சீர்மேவு கலியாதி ஐயாயி ரத்தேழ்
சிறந்தவிசு வாவசுவினில்
சேர்உத்த ராயணம் கிரீஷ்மருது ஆனியாம்
திங்கள்முப் பதுதேதியில்

ஏர்மேவு குருவார மாம்பூர்வ பக்கத்து
இசைதுவா தசித்திதியினில்
இயலும்அனு டம்சுப்ர யோகமொடு பவகரணம்
எழில்கன்னி லக்கினமதாம்

பேர்மேவு காரைச் செயங்கொண்ட நாதரும்
பேணும்ஆ னூர்அம்மனும்
பெருகஅருள் செய்யஅறு கால்பீடம் அதனிலே
பெரும்காரை நகர்விளங்கப்

பார்மேவு நல்லசே னாபதிச் சர்க்கரைப்
பாண்டியன் தவத்துதித்த
பரவுபுகழ் நல்லதம்பிச் சர்க்கரை கிரீடம்கொள்
பட்டாபி ஷேகநாளே.

94. கந்தன் சர்க்கரையார் கொடை

கந்தன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் திருச்செங்கோட்டுக் கோயிலுக்குப் பல கொடைகள் அளித்தார்.

சந்தனம், இளநீர், பயறு, காய்கறிகள், நெய், வெல்லம் இவைகளைப் படித்தரமாக அளித்தார். வேதம் ஓதவும் ஏற்பாடு செய்தார். தேர்ச் சங்கிலி அளித்தார். மலைமேல் மேற்கு வாயில் கதவு அளித்தார். பரிவட்டம் தந்தார். தீபம் ஏற்றச் செய்தார். இவற்றால் பெருமை பெற்றார்.

அனுதினமும் அபிடேக சந்தனம் பலம்இரண்டு
ஆனகா விரிமஞ்சனம்
அளிசீத மானஇள நீரிரண்டு ஒருசுருதி
அத்தியா யனத்தருமமும்

தினம்அமுது படியைந்து பயறுபடி கறிகளொடு
சேரநெய் வெல்லமுடனே
செங்கோ டருக்கிவை படித்தரம் நடத்தினன்
சித்திரத் தேர்மீதினில்

மனமகிழ் மஞ்சனச் சங்கிலி கொடுத்தனன்
மலைமேலை வாசல்கதவு
வைத்தனன் அநேகபரி வட்டமா லிகைதீபம்
மடதர்ம மும்செய்தனன்

கனமிகுதி ஈதல்சவு ரியமகிமை பெற்றனன்
காரைஆ னூருடையவன்
கந்தன்என வந்தசர்க் கரைபயிரன் உத்தமக்
காமிண்ட மன்றாடியே.

95. சமையல்காரரை மதித்த சர்க்கரையார்

பெரிய சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் தினமும் இருவேளை ராகி, சோளம், கம்பு ஏதாவது ஒன்றில் இரு மிடாக்கஞ்சி காய்ச்சி மனிதரில் கூன், குருடு, நொண்டி, சப்பாணியர்க்கும், நாய், பூனை முதலியவற்றிற்கும் அளிப்பவர். ஈகையையே குணமாகக் கொண்டவர். அவரது இறுதிக் காலத்தில் அந்தணருக்குப் பால் பசு கொடுக்க உறவினர் கூற, அதைத் தன் சமையல்காரன் அருணானுக்கு கொடுத்து மகிழ்ந்தார்.

மனிதரில் கூன்குருடு நொண்டிசப் பாணியும்
மாடாடு நாய்பூனைஅும்
மாதிரி இருப்பதும் சேர்ந்தஅறு பதுக்குநிதம்
மகிழ்ச்சியாய் இருவேளையும்

புனிதமுள ராகிசோளம் கம்பு ஏதாகிலும்
போட்டுஇரு மிடாக்கஞ்சியும்

பொரித்தகொள் ளுக்கூட்டு மனைவிகைப் புல்லுடன்
புகழ்பெரிய சர்க்கரைஇவர்

அனுதினமும் உதவிவரு தர்மம்இதை விடவேறு
அறுதியாய்ச் செய்யாதவர்
அந்தியகா லத்தில்ஒரு கன்றுள்ள பால்பசு
அந்தணர்க்கு ஈயும்என்று

இனிமையுள தன்சுதன் பிள்ளைநற் சர்க்கரை
இயம்புமொழி யைத்தடுத்து
இந்தா எனத்தனது சமையல் அருணானுக்கு
ஈந்தனர்இது என்னமனதோ.

96. நல்மனமுடைய நாயகர்

இப்பாடல் பாலசர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாரின் நற்பண்புகளைக் கூறுகிறது.

எப்பொழுதும் கொடை கொடுப்பவர். தன் மனைவியோடு உழுது வேளாண்மை செய்பவர். தன்னை அடைந்தவரின் குறை தீர்த்து உபசரிப்பவர். பஞ்ச காலத்திலும் இல்லை என்று சொல்லாமல் உதவுபவர். இவற்றால் புகழ்மிகக் கொண்டவர். சம்பிரதி நல்லய பிள்ளை பகன் புலவர் அரசப்பிள்ளை பாடிய பாடல்

செப்பரிய தானகொடை எப்பொழுது மேசெய்து
சிறப்புமிகு பேர்பெற்றவர்
சீரான பண்ணையம் நேராகவே தாமும்மனைவி
யும்கூடி யேஉழுவார்

கப்பமிட் டுத்தமது சரணார விந்தமே
கதிஎன்று வந்திறைஞ்சிக்
கைகட்டி நிற்பர்தம் குறைஎலாம் தீர்த்துமவர்
கடும்பசிக்கு அன்னமிடுவார்

எப்படிக் கொத்தபஞ் சத்திலும் இரப்போர்க்கு
இலையென்று சொல்லாதவர்
ஈகையே தருமம்என் றெண்ணமது கொண்டவர்
ஏகபத்தினி கொள்விரதர்

இப்படிக் குள்ளமனது யார்க்குண்டு கொங்கினில்
என்றெவர் களும்சொல்லவே
ஏறுபுகழ் கொள்பால சர்க்கரை உத்தமக்
காமிண்ட மன்றாடியே.

97. கங்கா காசி யாத்திரை

ஐந்தாம் பட்டக்காரர் சோமன் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் தன் மகன் அழகன் சர்க்கரைக்கு திருமணம் செய்வித்துப் பட்டக்காரராக முடி சூட்டவும் செய்தார். அவர் தன் மாமனாரிடம் பஞ்சாக்கர உபதேசம் பெற்றவர்.

பக்தி முதிர்ச்சியின் காரணமாகக் காசி யாத்திரை சென்றவர் காசியிலேயே முக்தி அடைந்தார். இவர் நினைவாகக் காசியில் கங்கைக் கரையோரம் சர்க்கரைலிங்கம் என்ற பெயரில் ஓர் லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டது என்பர்.

இப்பாடல் பாடியவர் காரையூர் குருநாத நட்டுவன்.

சோமன் சர்க்கரை மன்றாடி யார்சுதன்
சுமுக னான அழகன்நற் சர்க்கரை
பூமக னாக முடியது சூட்டியே
பொற்பு மிகுந்த திருமணம் ஆனபின்
மாம னார்உப தேசபஞ் சாக்கரம்
மனதுளே கொண்டு பக்தி முதிர்ச்சியால்
சேம மாகக் கங்காகாசி யாத்திரை
செய்யச் சென்றவர் சேர்ந்தனர் முக்தியே.

98. பிரம்படி பைத்தியம் போக்கும்

இரண்டாம் பட்டக்காரர் சொக்கன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மந்திர வல்லமை பெற்றவர். வைத்தியம் செய்வதிலும் வல்லவராக விளங்கினார். பைத்தியம் பிடித்தவர்களை அவர் தன் கைப் பிரம்பால் 108 முறை அடித்தால் பைத்தியம் பிடித்தவர் நலன் அடைவார்.

இப்பாடலைப் பாடியவர் சம்பிரதி ராமபிள்ளை என்பவர்.

செயித்தபிரம் பால்வந்து சேர்ந்தசொக்கன் சர்க்கரைக்கு
வயித்தியமது ஒன்றுமிக வாய்த்ததுவே - பயித்தியத்தை
நூத்திஎட்டு மேஅடித்து நோவுபொறுத் தார்க்கந்த
மாத்திரத்தில் நீக்குமருந் தாம்.

99. கைப்பிரம்பின் மகிமை

ஐந்தாவது பட்டக்காரர் அழகன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மிகச் சிறந்த பக்தர். பூந்துறை பெரிய வீட்டு மாமன் காடைகுல வாரணவாசிக் கவுண்டரிடம் பஞ்சாக்கர உபதேசம் பெற்றார். பட்டக்காரர் ஒரு கைப்பிரம்பு வைத்திருந்தார். அதன் உள்ளே தங்கத் தகடு ஒன்றைச் செருகியிருந்தார். அது மந்திரத் தகடு பிரம்புக்கு தூப தீபம் காட்டிப் பூசை செய்து செயங்கொண்ட நாத ஈசுவரன் மீது ஆணை என்று கூறி 108 தரம் அப்பிரம்பால் அடித்தால் பாம்பு கடித்து விஷம் முற்றி நாடித் துடிப்புக் குறைந்தால் கூட கடிபட்டவன் பிழைத்துக் கொள்வான்.

பிரம்பிலேயே எழுதப்பட்டிருந்ததாம் செயங்கொண்டநாதர் நத்தக்காடையூர் என்ற சிவபெருமான் பெயர். இவர் நல்ல கவிஞரும் ஆவார். செயங்கொண்டீசர், சண்டிகாதேவி மீது பதிகம் பாடியுள்ளளார்.

நயங்கொண்ட விஞ்சைஉரு லட்சம் செய்தே
நான்அழகன் சர்க்கரைஎன் கைப்பி ரம்பில்

சுயங்கொண்ட தங்கத்தின் தகடு தன்னைச்
சொருகிஅடைத் துள்ளதற்குத் தூபம் இட்டு
செயங்கொண்ட நாதரின்மேல் ஆணை வைத்துச்
சிரம்மீதில் நூற்றெட்டுத் தரம்அ டித்தால்
பயம்கொண்ட சர்ப்பவிடம் ஏறி, நாடி
படுத்துவிட்ட மனிதரையும் எழுப்ப லாமே!

100. இரு கையாலும் கத்திச் சண்டை

14 ஆம் பட்டக்காரர் கந்தன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் தன் இரண்டு கையிலும் கத்தி கொண்டு போர் செய்யும் பயிற்சி பெற விரும்பினார். ராயவேலூர் காதர்பாட்சா என்பவர் அவ்வாறு பயிற்சி அளிப்பார் என்று கேள்விப்பட்டு அவரை அழைத்துப் பயிற்சி பெற்று அத்திறமையைப் பெற்றார். பயிற்சி முடித்தார். பட்டக்காரர் கந்தன் சர்க்கரையார் காதர்பாட்சாவிற்குக் குதிரை ஒன்றைப் பரிசளித்தார்.

குதிரை வைத்தியம் பழனிமலை வாத்தியார் இந்நிகழ்ச்சியை ஒரு பாடலாகப் பாடினார்.

அட்டான நாடுபுகழ் கந்தன்சர்க் கரைஎன்னும்
அதிப ருக்கு
எட்டாறு நாளினிலே இரண்டுகை யிலும்கத்தி
எடுத்து வீசப்
பட்டாணி முகமதிய ராயவே லூர்க்காதர்
பாட்சா என்போன்
நெட்டாகப் பழக்கஒரு குதிரைஒன்று இனாம்கொடுக்க
நிலைபெற் றானே.

101. சவுக்கடி பொறுத்த சர்க்கரையார்

18 ஆம் பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் தமிழ்ப் புலவர்கள் மீது மிகுந்த மரியாதை உடையவர்.

கவிக்காக ஆயிரம் பொன் கொடுத்தவர். இந்தப் பெருமை வேறு எவருக்கும் இல்லை.

ஒரு புலவர் பரிசு பெற பழையகோட்டை வந்தார். பட்டக்காரர் வெளியூரில் இருந்தார். அங்கும் புலவர் சென்று பரிசில் பெற விரும்பினார். பட்டக்காரர் ஒரு குறிப்பிட்ட நாளைக் கூறி அன்று பழைய கோட்டை வந்தால் பரிசு கொடுப்பதாகக் கூறினார். ஆனால் குறிப்பிட்ட நாளில் பட்டக்காரர் பழைய கோட்டைக்கு வர இயல வில்லை. பழைய கோட்டைக்கு வந்து ஏமாந்த புலவர் பட்டக்காரர் இருக்கும் இடம் சென்று 'உம்மை நம்பி பிறரிடம் வாக்குக் கொடுத்தேனே' என்று சவுக்கால் அடித்தார். தன் பிழைக்கு வருந்தி பட்டக்காரர் புலவரின் சவுக்கடியைப் பொறுத்துக் கொண்டார். பின் அரண்மனை வந்து பொருள் கொடுத்தார்.

எவர்க்கா கிலும்வரு மோஇந்தக் கீர்த்தி எழுதரிய
கவிக்கா யிரம்கொடுத் தவன்காண் சொட்டைக் காரைமன்னர்
சிவிக்காய் அறிஞர் ஒருபோ தெழுந்து சினந்துவந்து
சவுக்கால் அடிக்கப் பொறுத்தான் நலதம்பிச் சர்க்கரையே.

102. சிவமலைப் பாதை

ஆறாம் பட்டக்காரர் அழகன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மகன் தீர்த்தகிரிச் சின்னமலை. சிவமலையின் வடபுறம் அனுமந்தராயன் கோயில் உள்ளது. அங்கிருந்து சிவமலை உச்சிக்கு செல்ல வசதியாகப் பாறைகளை உடைத்துப் பாதை அமைத்தார்.

விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் இயற்பெயர் தீர்த்தகிரிச் சின்னமலை. இப்பெயரை வைப்பது பழையகோட்டை மரபு என்று இப்பாடல் மூலம் தெரிகிறது.

ஆழகன்சர்க் கரைச்சிறுவன் அனுமந்தர் கோயில்வரப்
பழகுவதைப் பார்த்துக்கற் பாறைகளை - மளமளஎனப்

பேர்த்துச் சிவமலைமேல் பெரும்பாதை செய்தாரே
தீர்த்தகிரிச் சின்னமலைத் தேன்.

103. பெரிய வேட்டை நின்றது

வேட்டுவ சமூகத்தினர் பெரிய வேட்டை என்ற பெயரில் வேலியை அழித்து விளை நிலத்தில் வேட்டையாடினர். தன் தனி முயற்சியாலும், வழக்குத் தொடுத்தும் 1910 ஆம் ஆண்டு பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அதை ஒழித்தார்.

சொல்லு கலியுகம் ஐயாயிரம் பன்னொன்றில்
தூயசௌ மியவருடம் கடக மாதம்
அல்லற்ற தேதிதசம் கதிர்வா ரத்தில்
அறச்சலூர் வேட்டுவர்கள் ஆனூர் மன்னன்
நல்லதம்பிச் சர்க்கரையார் கோட்டைக் காட்டில்
நாற்றிசையும் கடவுஒடித்து வேட்டை யாட
பல்லுடைத்து தலைகிழித்து கேசுஆ ளாகிப்
பட்டிட்டார் கொட்டரைகொண்டு இட்டிட் டாரே.

104. சிவமலைக் கும்பாபிடேகம்

சிவமலை காங்கய நாட்டின் பொதுத்தலம். அண்மைக் காலம் வரை சிவமலைக் கோயில் பழையகோட்டைப் பட்டக்காரர்கட்கு உரிமையுடைய கோயிலாகவே இருந்தது. தமிழக அமைச்சராக இருந்த பழையகோட்டைப் பட்டக்காரர் நல்லசேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் கோயிலை அரசுக்கு ஒப்படைத்தார். பழைய கோட்டைப் பட்டக்காரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அறங்காவலர்களாக இருக்க வேண்டும் என அரசாணை உள்ளது.

25ஆம் பட்டக்காரர் மனைவியார் வள்ளியாத்தாள் விளம்பி வருடம் ஆவணி மாதம் சிவமலைக் கோயில் குடமுழுக்கு விழாவை

முன்னின்று சிறப்பாக நடத்தினார். நெருங்கிய உறவினர்களான சிலம்பகவுண்டன்வலசு சுந்தரப்ப கவுண்டர், குட்டப்பாளையம் சேனாபதிக் கவுண்டர் ஆகியோர் துணை புரிந்தனர். காங்கய நாட்டார் உதவி செய்தனர். இதைக் குறிக்கும் இப்பாடலைப் பாடியவர் பூந்துறை அவினாசிலிங்கப் புலவர் என்பவர்.

நலம்புரியும் சிவமலைக்கும் பாபி டேகம்
நல்லசே னாபதியின் மனைவி யாரால்
சிலம்பகவுண் டன்வலசுச் சீமான் ஆன
சிறப்புமிக சுந்தரவேள் முயற்சி செய்ய
பலம்பெருகும் குட்டைநகர் அதிபர் சேனா
பதித்துரையும் பக்திமிகு சிந்தை கொள்ள
குலம்பெரிய காங்கயநாட் டனைத்துள் ளோரின்
கூசாத உதவியினால் கூடிற் றாமால்.

105. அதிசயக் குதிரைச் சவாரி

பழைய கோட்டை பட்டக்காரர் மரபில் 12 ஆம் பட்டக்காரர் பெரிய சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் பயிரன் சர்க்கரையார் மகன். குதிரையேற்றத்தில் மிகவும் வல்லவர். அவர் சவாரி செய்யும் குதிரைக்கு தயிர் போட்டுப் பிசைந்த பட்டக்காரர் சாதத்தைத் தாளியில் விட்டு தினமும் உண்ணச் செய்வார். ஒருநாள் தோட்டத்தில் கருதுகளைத் தின்னும் குருவிகளை விரட்டக் குதிரையில் சென்றார். மகன் விசுவநாதனையும் உட்கார வைத்து கையில் கவண வீசிக் கொண்டே உத்தியில் நின்று கொண்டே குதிரையில் சென்றார்.

இந்தப் பாடல், அதிசயத்தைக் கண்ட அவர் மனைவி ஆரியப்பட்டி வள்ளியாத்தாள் பாடியது. நிறை கல்வி கற்ற வள்ளி யாத்தாள் தன் பெயரை ''கொம்பொடிந்த வெள்ளியாத்தாள்'' என்று எழுதுவாராம் (வள்ளி என்ற பெயர் சொல்ல விரும்பாமல்).

பயிரன்சர்க் கரையவர்கள் புதல்வ ரான
பண்புபெறு பெரியசர்க் கரையார் என்போர்
தயிரன்னத் தோடவரே பிசைந்து நித்தம்
தாளியில்தின் றிடவைக்கும் குதிரை மீது
கயிறு கவண்வீசி நின்று கொண்டே
கருதுதின்னும் குருவிகளை விரட்டிக் கொண்டே
மயிரளவும் தவறாது உத்தி மேலே
மகனோடு சவாரிசெய்து மகிழ்வ தென்னே.

106. சர்க்கரையும் காரும் சரி

சர்க்கரையும் கார் என்ற மேகமும் சரிசமம் எனலாம். சர்க்கரைக்கு மிகுந்த சுவையுண்டு. காருக்கு (மேகத்திற்கு) மின்னல் உண்டு.

சர்க்கரையும் காரும் சரிஎன் றுரைக்கலாம்
சர்க்கரைக்குக் கார்சரி ஆமோ - சர்க்கரைக்கு
கனருசியுண் டாயிருக்கும் காருக்கும் ஆங்கே
கனருசியுண் டாயிருக்கும் காண்.

107. பேரையே சொல்லிப் பிழை

கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் பகைவராகிய எதிரிகளைக் கண்டால் அழிப்பார். ஆனால் காரை ஆனூர் உடையாரும், கொங்கு வேளாளரில் பயிர குலத்தைச் சேர்ந்த வருமாகிய அவர் பெயரைப் புகழ்ந்து வாழ்வாயாக என்கிறார் புலவர்.

கொற்றவேல் சர்க்கரைக்குக் கோபமில்லை வாதுபுரி
சத்துருவைக் கண்டால் தகர்த்திடுவார் - வெற்றிபுனை
காரையா னூரான் கனபயிர கோத்திரத்தான்
பேரையே சொல்லிப் பிழை.

108. காதல் இலக்கியம் பெற்றவர்

21ஆம் பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மீது திருச்செங்கோட்டைச் சேர்ந்த வீரபத்ரப் புலவர் என்பவர் காதல் இலக்கியம் இயற்றினார். பட்டக்காரரோடு ஒன்றாக வீரபத்ரப் புலவர் உணவு உண்ணும்போது சாதி வேறுபாடு இல்லை என்பதை நிரூபிக்கப் புலவரின் எச்சில் வாயைப் பட்டக்காரர் கழுவியதாகப் பிற பாடல்கள் கூறுகின்றன.

காரைஆ னூர்மேவு காராளர் நல்லதம்பி
சீரைவிரித் துக்காதல் செப்பினான் - பேருலகெண்
கோதைநகர் வண்ணார் குலவீர பத்ரன்எனும்
மூதறிஞன் அன்பு முதிர்ந்து.

109. முத்தாத்தாள் உபசரிப்பு

14ஆம் பட்டக்காரர் கந்தன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மனைவி முத்தாத்தாள் ஊழியர்கட்கும், உறவினர்கட்கும் விருந்து உபசாரம் மிகவும் சிறப்பாகச் செய்பவர். ஏதாவது பணிகட்காக அரண்மனை வரும் பிற ஊர்ப் பணியாளர்கள் பணி முடிந்ததும் முத்தாத்தாள் அளிக்கும் விருந்தின் சிறப்புக் கருதிப் பல நாட்கள் தங்கியிருப்பார்கள். அவர்கள் எத்துனை நாட்கள் இருந்தாலும் முத்தாத்தாள் உபசாரம் தொடர்ந்து குறைவின்றி நடக்கும்.

அவ்வாறு பணி முடிந்தும் பல நாட்கள் பழைய கோட்டையில் தங்கிய குதிரை வைத்தியம் பழனிமலை வாத்தியார் பாடியது இப்பாடல்,

எத்தனைநாள் இருந்தாலும் எள்ளளவும் மனம்குன்றாது
இனிமை யாகச்
சுத்தமுள கம்பமுதும் பசுந்தயிரும் காய்கறியும்
ருசியாய்த் தந்து

உத்தமக்கா மிண்டர்எனும் கந்தன்சர்க் கரையார்க்கு
உவந்து வந்த
பத்தினிமுத் தாத்தாளின் பக்தியைநான் என்னென்று
பகரு வேனே.

110. கால்நடை நோய் தீர்ப்பார்

பழையகோட்டை மரபில் வந்த கல்லங்காட்டுச் சின்னசாமி ஓடை அருகில் உள்ள வீட்டில் வாழ்ந்த போது வந்த ஒரு பரதேசி உபதேசித்த மந்திரம் கற்று நூறு வயது வரை வாழ்ந்து குதிரை, மாடு, ஆடுகள் நோய் தீர்த்து வந்தார்.

தோள்நூறு பத்துடைய பாணனது வீரம்
துலங்குசின் னச்சாமியாம்
துங்கமுள கல்லதின் காட்டில்உயர் ஓடைமேல்
தோதான சிறுமனையினில்
வாள்நூறு வயதுகுறை வின்றிஇப் பூவினில்
வாழ்ந்துவரு ததியில்ஓர்நாள்
வந்தஒரு பரதேசி மந்திரமது கற்றுஅசுவம்
மாடாடு நோய்தீர்ப்பரே.

111. தேவி சக்கரம் பலம் சேர்த்தவர்

பிள்ளை சர்க்கரையார் 48 நாட்கள் விரதமிருந்து அரண்மனை சண்டிகா தேவி சக்கரத்திற்குப் பலம் சேர்த்த செய்தியை ஆறுமுகக் குருக்கள் பாடலாகப் பாடியுள்ளார்.

எண்திசையும் புகழுடைய பிள்ளைசர்க் கரைமன்னர்
இனிமையாக
மண்டியிட்டு விரதமொடு பூசைமிக வேசெய்தார்
மண்டலத்துள்

கொண்டஉரு லட்சமது நாற்பத்து முக்கோணம்
கோரிஏந்தி
செண்டிகையின் சக்கரத்தை அதிகபலம் செய்துவைத்துச்
சிறப்புற்றாரே.

112. நஞ்சு உறுஞ்சிய நாகம்

சொக்கன் சர்க்கரையார் மருமகன் முத்துவேல். அவரைப் பாம்பு கடித்து விட்டது. விஷம் மீறி விட்டது. கேள்விப்பட்ட மாமனார் சொக்கன் சர்க்கரையார் விரைந்து வந்து ஒரு மந்திரத்தை உச்சரித்தார். முத்து வேலைக் கடித்த பாம்பு வந்தது. சொக்கன் சர்க்கரையார் ஆணையின் படி பாம்பு கடிவாயில் வாய் வைத்து நஞ்சை உறிஞ்சியது. கடிபட்டவர் பிழைத்தார். விஷம் உறுஞ்சிய பாம்பு காட்டுக்குச் சென்றது. இராமையாபிள்ளை இதை நேரில் பார்த்துப் பாடியுள்ளார்.

சொக்கன்எனும் சர்க்கரை உத்தமக் காமிண்டர்
சொந்த மருமகன் முத்துவேல் வேளுக்கு
மிக்கவிஷம் கூடியதோர் சர்ப்பம் ஒன்று
மிரட்டவந்து கடித்ததனால் விஷமும் மீற
தக்கதொரு மந்திரத்தால் அழைக்கச் சர்ப்பம்
தான்வரவே சர்க்கரையார் அதனைப் பார்த்து
கக்குவிஷம் என்றுசொல்லக் கடிவாய் தன்னில்
கடித்தபல் கொண்டுறுஞ்சிக் காடே கிற்றே!

113. பெயர் சொன்னால் போதும்

23 ஆம் பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அதிகாரம் மிக்கவர். மிகவும் கண்டிப்பானவர். அவரைக் கண்டால் அனைவர்க்கும் பயம்.

அவர் பெயரைச் சொன்னாலே இளம் குழந்தை கூடப் பசித்தாலும் பால் வேண்டும் என்று அழாது, மௌனமாக இருக்கும்.

கறக்கின்ற பாலைக் கலையத்தில் வைத்தால் இயல்பாகக் காகம் குடிக்கும். ஆனால் பட்டக்காரர் பெயர் சொன்னால் காகம் பறக்கும். இருக்கும். துடிக்கும். பாலைக் குடிக்கப் பயப்படும். பாடிய புலவர் இராசகோபால பிள்ளை என்பவர்.

சிறக்கப் புகழ்கொண்ட நல்லதம்பிச் சர்க்கரை
சேதி சொன்னால்
பிறக்கின்ற பிள்ளையும் பாலென் றழாதிருப்
பர்அம் புவியில்
கறக்கின்ற பாலைக் கலையத்தில் வைத்திடில்
காகம் வந்து
பறக்கும் இருக்கும் துடிக்கும் குடிக்கப்
பயப்ப டும்மே.

114. பால்காரன் பெற்ற முத்தி

கந்தன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாரின் இரண்டாம் மகன் கனகசபாபதிச் சர்க்கரையார் சிதம்பர கவுண்டன்பாளையத்தில் குதிரைகள் மேயும் காட்டுக் குடிசையில் யோக நிட்டையில் இருந்தார். அவர் மூச்சு விடாமல் அடங்கி இருந்த நிலையைப் பார்த்த பால்காரக் குப்பணன் மூச்சு விடாமலிருக்க மூக்கில் பஞ்சு அடைத்ததால் மரணமடைந்தான். புலவர் அரசுப் பிள்ளை இந்நிகழ்வைப் பாட லாகப் பாடியுள்ளார்.

கந்தன்சர்க் கரையாரின் துதிய மைந்தன்
கனகசபா பதிக்கவுண்டர் கருணை வள்ளல்
சொந்தசிதம் பரநகரக் குதிரைப் பட்டிச்
சேர்க்குளகாட் டுக்குடிசில் சுகம தாக
பந்தமுள யோகநிட்டை சமாதி பார்த்த
பால்காரக் குப்பணனும் பார்ப்போம் என்று
முந்தவந்த பஞ்சுகளால் மூக்க டைத்து
மூச்சுவிடா மல்திணறி முத்தி சேர்ந்தான்.

115. வழக்குத் தீர்க்க வருக

'நல்லாண்டார்' பழைய கோட்டைப் பட்டக்காரர்களின் குல தெய்வம். சித்திரை இரண்டாம் தேதி நல்லாண்டார் விழா கொண்டா டப்பட வேண்டும். அவ்விழாவிற்குக் குயவர்கள் ஏதோ காரணத்தால் 'மட்பாண்டங்கள் வனைந்து கொடுக்க மாட்டோம்' என்று கூறினர். அதைத் தீர்த்து வைக்குமாறு பட்டக்காரரைப் புலவர் வேண்டிப் பாடிய பாடல். பாடியவர் அரண்மனைச் சம்பிரதி (கணக்கர்) இராமையாபிள்ளை.

திருஉயரும் நற்காரை மன்னவன் கொங்கில்உள
        திரிஎட்டு நாட்டினுக்கும்
தீராத சச்சரவு சாதிமத வாதுகள்
        தினம்தீர்த்து வைக்கும்இறைவன்

தருசொக்கன் சர்க்கரை உத்தமக் காமிண்டர்
        தான்அகம் மகிழ்ந்துகாண்க
தமியனும் சம்பிரதி கிழராம பிள்ளைஉன்
        தாள்பணிந்து எழுதும்ஓலை

வருயுவ சித்திரை இரண்டுதே தியில்உங்கள்
        வளர்த்துகுல தெய்வமாகும்
வலியநல் ஆண்டவர் எடுத்துநாங் கள்செய்ய
        வழக்கமது போல்குயவர்கள்

மருவும்உல குடையஊர் வந்துமண் பாண்டங்கள்
        வனையமாட்டோம் என்பதால்
வழக்கினைத் தீர்த்துநல் தேவகா ரியம்மது
        மங்கிடா தருள்கவாழி.

116. பூரித்து விருந்திட்ட புண்ணியவான்

சொக்கன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் தம்பி குமாரசாமி சோதிட நூல் கற்றுத் தன்பால் வந்தவர்கட்கு எதிர்காலப்

பலன் சொல்வார். குடும்பத்தோடு மூன்று மாதம் தல யாத்திரை சென்றபோது அவரது பயனற்ற காட்டைத் திருத்தி உழுது விதையை மக்கள் விதைத்துப் பயிர் வளர்த்தனர். வந்து பார்த்த குமாரசாமி ஊரார்க்கு மகிழ்ச்சியாக விருந்து வைத்தார்.

கொஞ்சுமொழிச் சொக்கன்சர்க் கரையார் தம்பி
குமாரசர்க் கரைதன்பேர் சூட்டும் ஊரில்
பஞ்சபட்சி சரநூல் ஆராய்ச்சி செய்து
பகுத்தறிந்தே எதிர்காலப் பலனை எல்லாம்
தஞ்சமென்று வந்தபேர்க்குத் தயவாய்ச் சொல்லும்
தகைமையுளார் குடும்பசகி தத்தோடு ஏகி
கஞ்சிகா ளத்திமுதல் சேது யாத்திரை
கண்டுவர மூன்றுமதி ஆவ தற்குள்
வஞ்சியங் குளத்தருகே உழுவ தற்கு
வசமில்லா முள்காட்டைக் குடிகள் கூடி
நெஞ்சதனில் கபடமின்றிச் செடிமுள் கொத்தி
நேராக்கி உழவுசெய்து மழைநாட் காலை
கொஞ்சமும்தா மதியாமல் விதைஏர் எல்லாம்
குறைவின்றிக் கொண்டுவந்து விதைத்த பின்பு
புஞ்சையதில் பசும்பயிரை வந்து பார்த்து
பூரித்து விருந்திட்ட புண்ய வானே.

117. சர்க்கரை மரபின் அட்டாவதானி

நல்லசேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் இளைய மகன் அர்ச்சுனன் குட்டப்பாளையத்தில் வாழ்ந்தார். செல்வம் மிக்கவராக விளங்கினார். தன் மாமனாரிடம் அட்டாவதானம் பயின்று அதை செயல்படுத்தியும் காட்டினார்.

நெல், மிளகு, கொள்ளு, மொச்சை, கடுகு, கழற்சிக்காய், நெருஞ்சிமுள், புளியம்பழம் முதலிய எட்டுப் பொருள்களையும்

அரை நாழிகை நேரம் (12 நிமிடம்) முதுகில் போட்டுக் கொண்டே இருப்பார்கள். அவர் வாய் 'வேலும் மயிலும் துணை' என்று சொல்லிக் கொண்டே இருக்கும். முடிவில் முதுகில் போட்ட ஒவ்வொரு பொருளின் எண்ணிக்கையைச் சரியாகக் கூறுவார்.

நல்லசே னாபதிச் சர்க்கரைத் துரைமைந்தர்
        நல்குட்டைப் பதியில்வாழ்
நந்தலில் லாதுமிக மாடுஆடு பால்பசு
        நானாவிதச் செல்வமும்

வல்லமை களும்கொண்ட வடிவழகன் அர்ச்சுனன்
        வள்ளல்இவர் சிறுவயதிலே
வாய்த்ததன் மனைவிஅவர் தந்தைசொல் லித்தந்து
        வைத்ததொரு அட்டதானம்

நெல்மிளகு கொள்மொச்சை கடுகோடு கழற்சிவிதை
        நெருஞ்சிமுள் புளியம்பழம்
நேரான எட்டும்அவர் முதுகினில் ஒவ்வொன்றாய்
        நிறுத்தாம லேபோடவும்

சொல்லுமவர் வாய்வேலும் மயிலும் துணைஎனச்
        சோராம லேசெப்பவும்
சூழும்அரை நாழிகையுள் அவையவைகள் ஒவ்வொன்றும்
        சொரிந்தமார்க் கம்பகர்வரே!

118. நான்மணிமாலை பெற்ற நல்லதம்பி

பழையகோட்டைப் பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மீது தமிழ்ப்புலவராகிய அப்துல் சுக்கூர் சாகிப் 'நல்லதம்பிச் சர்க்கரை நான்மணிமாலை' என்னும் இலக்கியம் இயற்றினார். பாடிய நூலாசிரியரின் நண்பரான விளாங்குறிச்சி நா. மருதாசலக் கவுண்டர் பாடிய சாற்றுக்கவி.

நல்லதம்பிச் சர்க்கரைமன் றாடிவேள் நாயகன்மேல்
சொல்லின்ப நான்மணித்தார் சூட்டினான் - வெல்லும்
தமிழறிஞன் என்நண்பன் அப்துல்சுகூர் சாகிப்
இமிழ்திரைப்பார் ஏத்தெடுப்ப வே.

119. ஒரு துரை ஆறு துரையானார்

தாராபுரம் போர்டு உயர்நிலைப் பள்ளிக்குப் பழைய கோட்டைப் பட்டக்காரர் நல்ல தம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் பல உதவிகள் செய்தார். பலர் அவரைத் 'துரை' என்றே அழைப்பார்கள். 1930 ஆம் ஆண்டு தாராபுரம் போர்டு உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வி. கணபதியாபிள்ளை ஒரு துரை என்ன ஆறு துரை வருமாறு பாடுகிறேன் என்று சொல்லிப் பாடிய பாடல்.

நாவலர்கள் போற்றுகிறார்கள். நல்ல தவமுடைய ஞானிகள் மெச்சுகிறார்கள். காவலர்கள் என்றும் எண்ணுவர். மேலானவர்களும் வந்து போற்றும் பழைய கோட்டைப் பட்டக்காரர் பசுக்களையும் காப்பவர் என்று கருத்துப்பட பாடிய பாடல்.

நாவலர்கள் போற்றுதுரை நற்றவர்கள் மெச்சுதுரை
காவலர்கள் என்றும் கருதுதுரை - மேவலரும்
நண்ணிப்போற் றெங்கள்துரை நற்பழைய கோட்டைத்துரை
அண்ணல்ஆன் காக்குதுரை யாம்.

120. புலவர்க்கு அளித்தோரே புகழ்பெறுவர்

கார்மேகக் கவிஞர் பட்டக்காரரிடம் 'நீர்ப்பாசன வசதி பெற்ற நல்ல வயல் ஆன விளை நிலம், பெரிய செல்வம், சுக துக்க காலத்தில் பார்ப்பனர்கட்குக் கொடுக்கும் கொடை முதலியன என்றும் நிலைத்து நிற்பதில்லை என்பதைக் கண்டறிந்தோம். புலவர்கட்கு எளிய கஞ்சி உணவு கொடுத்து ஆதரித்தாலும் அவர்கள்

புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதை அறிந்து தமிழ் கற்ற புலவர்கட்கு உதவிய உம்மைக் காண வந்தேன்' என்று கூறினார்.

நீர்ப்பாசன நன்னிலம் நிதியம்
நேரும் சாவு வாழ்வுகளில்
பார்ப்பார்க்கு அளித்தோர் பேரெங்கே
பார்த்தோம்; புலவர்க்கு இழிபழங்கூழ்
வார்ப்பா ரேனும் பூமியுள்ள
வரையும் புகழ்ச்சி ஓங்குமெனும்
நேர்ப்பாக் கற்றோர்க்கு உதவுதமிழ்
நேயர் ஆனூர்ச் சர்க்கரையே!

121. இயல்பு திரியாதவர்

மேரு மலை அசைந்தாலும், குல கிரிகள் சிதறினாலும், புயங்கள் எட்டு ஒழிந்தாலும், அட்டதிக்குப் பாலகர்கள் சென்றாலும், கங்கை வற்றினாலும், மேகம் மாறினாலும், சந்திர சூரியர் திசை மாறினாலும், தேவலோகத்தார் அதை விட்டாலும், முனிவர்கள் தவத்தை விட்டாலும், வேதம் பொய்த்தாலும், பெண்கள் கற்பு அழிந்தாலும், பூமியைத் தாங்கும் ஆதிசேடன் பணி மறுத்தாலும், உலகில் சொன்னசொல் மாறாத இயல்பு உடையவர்கள் சர்க்கரை மரபினர். அவர்கள் வழிவந்தவர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார்.

பொன்மேரு அசைகினும் குலகிரிகள் சிதறினும்
புயங்களவை எட்டொழியினும்
புவியில்எண் திக்கிறைவர் ஏகினும் கங்கைநீர்
பொங்குவது வற்றிவிடினும்

மென்மேகம் மாறினும் சந்திரசூ ரியர்எலாம்
வேறுதிசை கொண்டேகினும்

விண்ணாடர் பதிவிட்டு மாமுனிவர் தவமெலாம்
விட்டிடவும் மறைபொய்க்கினும்
நன்மான மாதர்கற்பு அழியினும் புவிபாரம்
நாகமுடி சாய்ந்துவிடினும்
நானிலந் தன்னிலே சொல்லுறுதி வாய்மைஎந்
நாளிலும் பிசகாதவர்
தன்மானம் மிகஎண்ணி நாவலர்கள் தங்கள்குடி
தாங்கிநின்று ஓங்குபுகழர்
தர்க்கமிடு மருவலர்முன் உக்ரமிடு நலதம்பிச்
சர்க்கரை மகிபாலனே.

122. சோமன் சர்க்கரை பக்தி

நான்காம் பட்டக்காரர் சோமன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாரின் பக்திச் சிறப்பை இந்த யமகப் பாடல் விளக்குகிறது.

சூரியனைக் கண்டால் தாமரை மலர் மலர்வதைப் போல மிக இனிய மனதுடன் அவரது ஆனூரில் உள்ள ஆனூர் அம்மையை வணங்குவார். சோமன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் குதிரையால் பகை நீக்கி மகிழ்ச்சி தந்தார். வேறு கோயில்கட்குச் சென்று பிற தெய்வங்களை வணங்காமல் ஆனூர் அம்மையை வணங்கி நல்வாழ்வைப் பெறுவார். ஆனூர் அம்மையே அவர் குல தெய்வம்.

'[1]மதியினுப்பு றத்துவைக லைக்காணும் முண்டகத்தின்
மலரை யொப்ப
[2]மதியினுப்பு வருமனத்தெ மாட்சதமா தங்கிதிரு
வடியைப் பேணும்
[3]மதியினுப்புப் பொடியினி மாப்பதத்தப் பகைநீக்கி
மகிழ்ச்சி தந்தாய்
[4]மதியினிப்பு காமறுகோ மனையெதற்கு மெங்குலகௌ
மாரி வாழ்க!'

1. மதியின் இப்புறத்து வைகல் - சூரியன்; முண்டகம் - தாமரை மலர்.
2. மதி இனிப்பு வரும் மனத் (தையுடைய); எம் ஆன் - எம் ஆனூர்.
3. மதி இனிப்புப் பொடி - சோமன் சர்க்கரையின்: மா - குதிரை.
4. மதி (சோமன்) இனி புகான்; மறு கோ மனை - வேறு தெய்வங்களின் கோயில்.

123. வலிமை கொண்ட நல்ல சேனாபதி

25ஆம் பட்டக்காரர் நல்ல சேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மிகுந்த பலசாலி. வலிமையுடையவர். அவர் தன் வலிமையைச் சில செயல்களில் காட்டுவார்.

பெரிய இரும்பு இருசு ஒன்றைத் தன் தலைமயிரால் பிடித்து எடுத்துக் காட்டுவார்.

ஒரு மனு எடையுள்ள கல்லைப் பற்களால் தூக்கிக் காட்டுவார்.

நேரில் கண்டு இப்பாடலை எழுதியவர் உலகுடையபாளையம் ஆறுமுகக் கவிராயர் என்பவர்.

வல்லபத்தில் பூமிசையில் எத்தனையோ பேர்கள்என
வருத்துள் ளோரில்
சொல்லி இரும்புஇருசை ஒருதலையில் பிடித்தெடுப்பார்
சோர்வில் லாமல்
பல்லதனில் மணுக்கல்லைத் தூக்குபலம் கொண்டவராம்
பழைய கோட்டை
நல்லசேனா பதிச்சர்க் கரைஎனும் மன்றாடியாம்
நரேந்திரர் ஒன்றே.

124. கறவைப் பசு கொடுத்தார்

24ஆம் பட்டக்காரர் கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அரவக் குறிச்சி ஆறுமுகம் சேர்வை என்பவரை குதிரைச்

சவாரிக்கு வேண்டிய வேலைகளைச் செய்ய அழைத்திருந்தார். பணிகள் முடிந்தவுடன் உரிய கூலி அல்லாமல் ஆறுமுகம் சேர்வைக்குக் கறவைப் பசு ஒன்றை இனாமாகக் கொடுத்தார்.

அவர் முன்னமே இப்பணிக்கு வந்தபோது கறவைப் பசுப் பெற்றதையும், தென்னங்கரைப்பாளையம் பட்டக்காரர் சித்தப்பா எருமை கொடுத்ததையும் நினைவு கூர்ந்து பாடிய பாடல்கள்.

கொற்றவேல் சர்க்கரையார் குதிரைச்சா மான்வேலை
முற்றவே செய்து முடித்தபின்னர் - பற்றுடனே
அரவக் குறிச்சியில்வாழ் ஆறுமுக னாம்எனக்குக்
கறவைப் பசுகொடுத்தார் காண்.

125. இன்னும் கறந்து குடிக்கின்றேன்

முன்னம் கறவைப் பசுகுதிரை
முழுச்சா மான்செய் தேபெற்றேன்
இன்னும் கறந்து குடிக்கின்றேன்
இனிய கொற்ற வேல்துரையே
கன்னங் கறுத்த நூல்கயிற்றுக்
கடிவா ளத்துக் கிவ்வெருமை
தென்னங் கரைநும் சிறியதந்தை
திதிக்கும் சேனா பதிகொடையே.

126. இவற்றை எங்கு கற்றார்?

13 ஆம் பட்டக்காரர் விசுவநாதச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அற்புதமான பேராற்றல் கொண்டவர்.

குதிரைகளின் சுழிகளைப் பார்த்து, அக்குதிரையின் குணநலன் களை உடனே கூறுவார். பசுக்களைக் கண்ணால் பார்த்தவுடன் அது கறக்கும் பால் பற்றிக் கூறுவார். சிறு குழந்தைகளைப் பார்த்தவுடன் அதன் சாதகப் பலன், வயது பற்றிக் கூறுவார்.

இதைப் பார்த்த சிதம்பர கவுண்டம்பாளையம் நடேச பாஸ்கர தீட்சிதர் பாடிய பாடல்.

அசுவத்தின் சுழியைப்பார்த்து அதன்குணத்தை
அவ்விடத்தே குறித்துச் சொல்வார்
பசுவைக்கண் ணால்பார்த்து பால்உளதில்
லாததென்றப் பொழுதே சொல்வார்
சிசுவைக்கண் ணால்பார்த்துச் சீக்கிரமாய்
ஆயுளையும் கணித்தே சொல்வார்
விசுவச்சர்க் கரையார்இவ் விதரணைஎங்கு
உணர்ந்தாரோ விளம்பு வீரே.

127. கருட கம்ப அபிடேகம்

19 ஆம் பட்டக்காரர் கொற்றவேல் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் நத்தக்காரையூர் செயங்கொண்டீசுரர் கோயில் திருப்பணி செய்தார். முன் கருடகம்பம் (தீபஸ்தம்பம்) நிறுத்த முடியவில்லை. தீட்சை (தாடி) வளர்த்து கருட கம்பம் நின்றால் தாடி குறையும். நிற்காவிடில் என் தாடி வளரும் என்ற சபதம் ஏற்றுப் பணி செய்து இறுதியில் கருட கம்பம் நிறுத்தி அபிடேகம் செய்தார். சிறந்த தத்துவஞானி ஆகிய இவர் சிறந்த கவிஞர். செயங்கொண்டீசுரர் கோயில் அம்மன் நல்லமங்கையம்மன் மீது சதகம் (100 செய்யுள்) பாடியுள்ளார். அவற்றுள் சில பாடல்கள் கிடைத்துள்ளன.

கற்றைவார் சடைஈசன் கருடகம்ப அபிடேகம்
கொற்றவேல் சர்க்கரைமேற் கொண்டுசெய்தார் - பற்றுடனே
தந்தனரே அன்னசொர்னம் தானமது ஏழைகட்கு
நந்தனஆண் டாவணிஏழ் தான்.

128. சதுரங்கம் வல்ல சர்க்கரையார்

20 ஆம் பழையகோட்டைப் பட்டக்காரர் நல்ல சேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் சதுரங்கம் (செஸ்)

விளையாடுவதில் மிகவும் தேர்ந்தவர். எவரும் அவரை வெல்ல முடியாது. நாட்கணக்கில் இழுத்தடிப்பார்.

ஒரு சமயம் சதுரங்கம் வல்ல பாண்டமங்கலம் முத்துக்குமரன் என்பவர் பட்டக்காரரோடு சதுரங்கம் ஆட வந்தார். அவர் பட்டக்காரரிடம் தோற்று தன் மோதிரத்தை இழந்தார். இப்பாடலைப் பாடியவர் பாண்டமங்கலம் அம்பலவாணக் கவிஞர் என்பவர்.

மதிமூன்று வரைஒன்றை இழுத்தாடிச் செயிப்பவர்
இவ்வை யத்தில்
எதிர்எவரும் இல்லாது சதுரங்கம் ஆடுபவர்
இவரே என்று
துதிபாண்ட மங்கலமுத் துக்குமரன் மோதிரத்தைத்
துணிந்து போட்டான்
நதிபெருகும் காரைமன்னர் நல்லசேனா பதிச்சர்க்
கரையா ருக்கே.

129. கொற்றவேல் சர்க்கரையார் பட்டாபிடேகம்

24 ஆம் பட்டக்காரர் விரோதி வருடம் ஆவணி மாதம் 17 ஆம் தேதி பட்டக்காரராக முடி சூட்டப்பட்டார்.

கொங்கு நாட்டில் பட்டக்காரர்கள் நால்வர்.

1. பழையகோட்டை சர்க்கரை மன்றாடியார்
2. சங்கரண்டாம்பாளையம் வேணாடுடையார்
3. காங்கயம் பல்லவராயர்
4. காடையூர் காங்கேய மன்றாடியார்

ஒரு பட்டக்காரருக்கு பட்டாபிடேக முடிசூட்டு விழா என்றால் மற்ற மூன்று பட்டக்காரர்களும் ஒன்றாக வந்து முடிசூட்ட வேண்டும். அதனால்தான் இப்பாடலில் ''மூன்று பட்டத்து அரசும் கூடி'' என்று கூறப்பட்டுள்ளது.

இப்பாடலைப் பாடியவர் அருணாசல வாத்தியார் என்பவர்.

சொல்லுகலி நாலா யிரத்தெண் ணூற்றுச்
சுகமான பதினொன்றாம் வருடம் தன்னில்
வெல்லுகின்ற விரோதிஆ வணியின் மாதம்
வெகுநல்ல பதினேழு தேதி தன்னில்
மல்குமன்னர் கொற்றவேல் சர்க்க ரைக்கு
மகிழ்ச்சியுள மூன்றுபட்டத் தரசும் கூடி
பல்குவெகு முழக்கோடு பட்டம் சூட்டி
பரிவுற்றார் நாட்டிலுள்ளோர் பணிவுற் றாரே.

130. பயிரன் சர்க்கரை அரிய பண்பு

11 ஆம் பட்டக்காரர் பயிரன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் பல விசேடப் பண்புகளைப் பெற்றவர்.

யாராவது கள் குடித்தவரைக் கண்டால் அவர்களைக் குதிரையின் முன் கயிற்றைப் பிடிக்குமாறு செய்வார். ஓடும் குதிரையுடன் ஓட வேண்டும். இதுவே தண்டனை. பெண்களுக்குள் சண்டை வந்தால் அவர்களைச் சாணிக்கூடை சுமக்கச் செய்வார்.

ஆனால் பக்திப் பெருக்கால் விபூதி பூசியவர்களைக் கண்டால் மகிழ்ச்சியுடன் அவர்கட்கு விருந்து உண்ணச் செய்து மகிழ்வார்.

பிள்ளை சர்க்கரை மன்றாடி யார்சுதன்
பிரிய மான பயிரநன் சர்க்கரை
கள்ளை உண்டு களிப்போரைக் கண்டிடில்
கடிய குதிரைமுன் கயிறுபிடிக்கச் செய்வார்
கள்ளைப் பெண்கள் சண்டையைக் காணுங்கால்
சாணிக் கூடைச் சுமைவைத்துச் சாடுவார்
வெள்ளை விபூதி வேடத்தைக் கண்டிட்டால்
விரும்பி வேண்டி விருந்துண்ணச் செய்வாரே!

131. குடும்ப பாரம் தாங்கிய தனயன்

எட்டாவது பட்டக்காரர் கரியான் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் தன் மகன் பெரிய சர்க்கரைக்கு ஆனூர் அம்மன் கோயிலில் திருமணத்தைச் சிறப்பாக முடித்தார். திருமணம் முடிந்தவுடன் மகன் பெரிய சர்க்கரைக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார். மகன் இளவரசன் ஆனதும் பழையகோட்டை நிர்வாகம் முழுவதையும் மகனிடம் ஒப்படைத்து விட்டுத் தான் துறவத்தை மேற்கொண்டார். பற்பல புண்ணியத் தலங்கட்கு யாத்திரை சென்று வழிபட்டார். 'குண்டலி' யோகத்தைச் செய்தார்.

இதைக் கண்ட கருங்குமரப் புலவர் பாடிய பாடல்.

சார்ந்தமதி அழகன்சர்க் கரையார் மைந்தர்
சற்குணவான் கரியான்சர்க் கரையே ஆவார்
தேர்ந்ததிரு மணம்ஆனூர்த் தேவி கோயில்
திறமான பந்தலிலே சிறப்பாய்ச் செய்து
நேர்ந்தமக னுக்குஇளமைப் பட்டம் சூட்டி
நிலைத்தவர் குடும்ப பாரம் தாங்க
கூர்ந்ததுற வறம்பூண்டு தலங்கள் சுற்றிக்
குண்டலியின் யோகமதைக் குறிக்கொண் டாரே!

132. குதிரையில் பழனிப் பயணம்

24 ஆம் பட்டக்காரர் கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் குதிரைச் சவாரியில் மிக வல்லவர். எங்கு சென்றாலும் குதிரையிலேயே செல்வார். ஒரு முறை பழைய கோட்டையிலிருந்து பழனிக்குக் குதிரையிலேயே சென்றார். 9 நாழிகையில் பழனி சென்றடைந்தார்.

ஒரு நாழிகை 24 நிமிடம். 9 நாழிகை. அதாவது 3 மணி 36 நிமிடம். இவரது குதிரைச் சவாரிக்கு நிகர் எவரும் இல்லை என்கிறார் புலவர்.

ஆற்றோரக் கோட்டை அகன்றுபழ னாபுரியில்
சாற்றுநவ நாழிகையுள் சார்ந்தாரே - ஏற்றமிகும்
கொற்றவேல் சர்க்கரையார் குதிரைச் சவாரிக்கு
மற்றுயார் நிகராம் மதி.

133. திப்பு வாங்கிய பழைய கோட்டைக் குதிரை

பழைய கோட்டையில் காங்கயம் இனம் காளை போல் குதிரைப் பண்ணையும் இருந்தது. பல பட்டக்காரர்கள் குதிரை ஏற்றத்திலும் மிக வல்லவர்களாக இருந்தனர். பழைய கோட்டை மகளிரும் குதிரை ஏற்றத்தில் வல்லவர்களாக இருந்தனர்.

22 ஆம் பட்டக்காரர் நல்லசேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாரிடம் நல்ல பத்துச் சுழிகளையுடைய பஞ்ச கல்யாணி குதிரையொன்று இருந்தது.

அதை வாங்க விரும்பிய திப்பு சுல்தான் ஆட்களை அனுப்பினார். பட்டக்காரர் குதிரையைக் கொடுக்கவில்லை. ஒருமுறை திப்பு சுல்தானே நேரில் பழையகோட்டை வந்து மிரட்டி 200 பொன் கொடுத்துக் குதிரையை வாங்கியதுடன் பழைய கோட்டை மாளிகையில் சைவ உணவும் உண்டு சென்றார். (புலால் உண்ணும் வழக்கம் பழைய கோட்டையில் என்றும் இல்லை).

காரையூர் சர்க்கரை உத்தமக் காமிண்டர்
　　காத்து வளர்த்திய பஞ்சகல் யாணிப்
பேரைஉள ஓர்குதிரை சுழிகள் பத்தும்
　　பிறழாது இருந்தசெய்தி கேட்டு வந்து
தாரையோ அலதிலையோ எனமி ரட்டித்
　　தயவொடுஇரு நூறுபொன்னும் தானே ஈந்து
போரையே கொள்திப்பு சுல்தான் சைவ
　　போசனமும் கூடஉண்டு போனான் தானே.

134. நல்லதம்பி பெற்ற பெரும் புகழ்

26 ஆம் பட்டக்காரர் ராய்பகதூர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மிகு புகழ் பெற்றவர். அவர் புகழ் கடல் கடந்து உலகமெலாம் பரவியது. அது காங்கேய இனக் கால்நடைகளால் பெற்ற பெரும் புகழ்.

அவர் பகைவர்களை வென்றவர். வேட்டுவர்களின் பெரிய வேட்டையைத் தடுத்து நிறுத்தி அடக்கியவர்.

இப்பாடல் தட்சிணத்து வித்துவான் ஒருவர் பாடியது.

கடலுடுத்த புவனசக்ர வாளகிரி அண்டர்அண்டம்
கடந்தும் அப்பால்
மடலெடுத்துக் கொழுந்துவிட்டு வளர்ந்தபெரும் புகழாளர்
மருவ லார்தம்
குடலெடுத்து மாலையிடும் செயவீர கோதண்ட
குலிச பாணி
உடலெடுத்த புவனேந்த்ரா நல்லதம்பிச் சர்க்கரையே
உசித மாலே.

135. குட்டம் தீர்த்த குமரன்

12 ஆம் பட்டக்காரர் பெரிய சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் - வள்ளியாத்தாள் தம்பதியர் மகன் விசுவநாதன் சிறுவன். விசுவநாதனுக்குக் காலில் வெண்குட்டம் தோன்றியது. அது குறித்து வள்ளியாத்தாள் சிவமலை முருகனை வேண்டிப் பாடல்கள் பாடினார்.

இரண்டு வாரத்தில் காலில் உள்ள வெண்குட்டம் நீங்கப் பெற்று சிறுவன் விசுவநாதன் நலம் பெற்றான்.

நலம் பெற்றபின் தாயார் வள்ளியாத்தாள் பாடிய பாடல்.

ஐயா சிவமலைவாழ் ஆண்டவனே பன்னிரண்டு
கையாளன் சேய்விசுவன் காலதனில் - மெய்யாக
வந்தவெண் குட்டமதை மாற்றிக் கருணையது
தந்தவனே நின்தாள் சரண்.

136. எண்ணம் பலித்தது

பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் கொங்குநாட்டுப் பட்டக்காரர்கள், பழையகோட்டை சர்க்கரை மன்றாடியார், காடையூர்க் காங்கேய மன்றாடியார், சங்கரண்டாம்பாளையம் வேணாடுடையார், காங்கயம் பல்லவராயர் ஆகிய நால்வரையும் ஒன்றாகப் பார்க்க விரும்பினார். பழைய கோட்டைப் பட்டாபிஷேகத்தில் அவர் எண்ணம் பலித்தது. பார்த்ததாகக் கூறும் கவிஞருக்குக் கண்பார்வை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மணங்கொண்ட காரை ஆனூரில் மேவும்
மன்னவராம் சர்க்கரைக்கு மகுடம் தன்னை
குணங்கொண்ட இம்முடிக் குமார ரோடு
குமாரரத்ன வேணாட ரவரும் நல்ல
எணங்கொண்ட சிதம்பரப்பல் லவரும் கூடி
ஏற்றினார் துர்முகி ஆவணிபத் தேழில்
பணங்கொண்ட நாலரசும் ஒருங்கு சேரப்
பார்த்தேன்மாம் பழம்எண்ணம் பலித்த தாமால்.

137. பைத்தியம் தீர்த்தார் சண்டிகாதேவி

ஒன்பதாம் பட்டக்காரர் பெரிய சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் காலத்தில் ஆறுமுகக் குருக்கள் மனைவிக்குப் பைத்தியம் பிடித்தது.

''பாங்கான என்மனைவி கண்டபடி பேசும்

பைத்தியமதை நீக்குவாய்

தேங்காமல் அருள்செய்யும் கண்கண்ட தெய்வமே

செண்டிகா தேவிஉமையே''

என்று வேண்டினார். பைத்தியம் நீங்கியது. இந்த நிகழ்வைக் கருங்குமரப் புலவர் பாடலாகப் பாடினார்.

செப்பியபி ரார்த்தனையைச் செண்டிகா உன்பதத்தில்
ஒப்பவே வைத்துவிட்டேன் உத்தமியே - இப்பவுமே
ஆறு முகக்குருக்கள் அன்புமனை பைத்தியத்தைத்
தீரும்வகை செய்தாய் தெளிந்து.

138. காரையூர் திருமதில் திருப்பணி

நஞ்சையன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாரின் இளைய மகன் பால வடிவேல் கவுண்டர் கொன்னை நகரில் வாழ்ந்தவர். தன் சொந்த விவசாய வருவாய் மூலம் நத்தக் காரையூர் செயங் கொண்டநாதர் கோயில் திருமதிலை ஐந்து ஆண்டுகளில் கட்டி முடித்தார். இரவு நிலவு ஒளியிலும் பணி நடைபெற்றது.

மடவளாகம் சிவராமதேசிகர் பாடிய பாடல்.

நஞ்சையன்சர்க் கரையாரின் கனிட்ட புத்ரன்

நாடுபுகழ் கொன்னைநகர் புதுவீட்டுக் காரர்

வெஞ்சினமென் னும்கொடிய குணம தான

வெகுளிஇலாப் பாலவடி வேல் கவுண்டர்

கொஞ்சுநல மங்கைசெயங் கொண்டார் மேவும்

கோவிலுக்குத் திருமதிலைக் கோவை யாக

எஞ்சியுள விவசாய வருவா யாலே

இயற்றிவரு வார்வருடங் கொஞ்ச மாக

மிஞ்சியுள கம்புபயிர் பச்சை யெல்லாம்
மீதியுள கூலிக்கு மிதமாய்த் தந்து
துஞ்சுகிற காலமதில் நிலவி ருந்தால்
தூயகருங் கல்லுகளைப் பேர்த்து வைத்து
அஞ்சுவரு டக்காலம் செய்து வந்து
அண்ணனவர் உதவிஅதும் அன்பாய்ச் செய்ய
மஞ்சுநிகர் கருணையுடன் மகிழ்ந்து செய்து
மதிப்புமிகப் பெற்றனர்இம் மாநி லத்தே.

139. குதிரைக்குப் பாத காணிக்கை

பெரிய சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் பேரன் கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார். அவர் ஒரு (ஆண்) குதிரையில் பயணம் செய்து ஒரே நாளில் கொங்கு நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற ஏழு தலங்களையும் வழிபட்டு வந்தார். மக்கள் கொங்கேழு தலம் சென்ற குதிரைக்கு காணிக்கை தந்தனர்.

கரூர், வெஞ்சமாங் கூடல், கொடுமுடி, அவிநாசி, பவானி, திருமுருகன்பூண்டி, திருச்செங்கோடு முதலியவை கொங்கேழு தலங்கள்.

பெரிய சர்க்கரை உத்தமக் காமிண்டர்
பேரன் கொற்றவேல் சர்க்கரை யாரிவர்
கரிய குண்டுக் குதிரைமேல் ஏறியே
காணும் ஓர்பொழுது அத்த மனத்துளே

அரிய கொங்குச் சிவாலயம் ஏழையும்
அணுகிச் சேவித்து அரண்மனை சேர்ந்தஅப்
பரியைக் காணுதற்குப் பாத காணிக்கை
பத்து நூறுடன் ஆயிரம் ஆகுமே.

140. முன்னவர் புகழ்

இப்பாடலில் பழைய கோட்டை சர்க்கரை மரபினர் பழம் பெருமைகள் கூறப்படுகின்றன. புலவர் தாய் முதுகில் ஏறப் பொறுத்தது. புலவர் சவுக்கடி பெற்றது. நெய்யில் கை விட்டது. புலவர் எச்சில் வாய் துடைத்தது. புலவர் விலை கூறப் பொறுத்தது முதலிய பழம் பெரும்புகழ் பலவும் கூறப்பட்டுள்ளன.

தண்டமிழ்க் கவிவாணர் செங்குன்றை எல்லனார்
தான்வரவும் அன்னமிட்டும்
தாய்முதுகில் ஏறப் பொறுத்தும் சவுக்கடிகள்
தனைஅடிக் கப்பொறுத்தும்

எண்டிசை விளங்கக் குறட்டடி பொறுத்துமே
இழிகுலம் விளங்க ஒருவன்
இலைஎன்று நெய்யினால் கையிட்டு வாய்எச்சில்
இன்பமுட னேதுடைத்தும்

கண்டிதம தாகவே ஒருபுலவன் மடிதனில்
கையிட் டிடப்பொறுத்தும்
காலம் பிழைத்தஉனை விற்றிடுவன் என்றுவிலை
காட்டவும் மனம்பொறுத்தும்

தண்டிரைக் கடல்உலகில் இப்படி அனந்தமாய்
தருபுகழ் படைத்தநிருபா
தர்க்கமிடு மருவலர்முன் உக்ரமிகு நலதம்பிச்
சர்க்கரை மகிபாலனே.

141. வசை போல் வாழ்த்து!

பயிரகுலப் பழையகோட்டை மரபில் 22 ஆம் பட்டக்காரர் நல்லசேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார். பட்டக் காரர் நன்கு தமிழ் கற்றவர். ஒரு சமயம் பூந்துறை காளியண்ணப்

புலவர் பட்டக்காரரைப் பார்க்கச் சென்றார். காளியண்ணப் புலவர் பூந்துறைப் புராணம் இயற்றியவர். அவரது சொந்த ஊர் திருச்செங்கோடு அருகில் உள்ள மண்டகப்பாளையம் பூந்துறைக்கு வந்து புலவன் தொட்டிபாளையம் என்ற திருஞான சம்பந்த புரத்தில் வாழ்ந்தவர். பூந்துறைப் புராணம் பாடியதற்காக அவர் 57 ஏக்கர் பூமியைப் பரிசாகப் பெற்றவர். அவர் பிற்சந்ததியார்களும் புலவர்களாகப் பலர் விளங்கினர்.

காளியண்ணப் புலவர் பட்டக்காரர் அவர்களைச் சந்திக்கச் சென்றார். அப்போதுதான் கீழ்க்கண்ட பாடலைப் பாடினார். பாட்டு வசை போலத் தோன்றும். அதன் உட்பொருள் வேறு, புலவர் பாடப் பாட பட்டக்காரர் பேஷ் பேஷ் என்று பாராட்டினாராம். பாடலின் உட்பொருள் தெரிந்தால் நீங்களும் மகிழலாம்.

கற்றவருக்கு ஈயாதான் பாவிவெகு தண்டுமுண்டன்
　　கருணையில்லான்
உற்றறிவி லாதவன் தப்பிலி கேடுகெட்டவன்
　　மெய்யுரையான்

நற்பணியே கைக்கணியான் தேவடியார்க்கு ஏவல்செய்வான்
　　நல்லதம்பிச்
சர்க்கரைசேய் நல்லசேனா பதியாம் சர்க்கரையு
　　தாரன்தானே

142. வெற்றி தந்த தேவி

ஒருமுறை சர்க்கரை மரபில் ஒருவர் விசயநகர அரசரிடம் தங்கி இருந்தார். அப்போது ‘வச்சிரவாகு’ என்ற பயில்வான் விசயநகர அரசவை வந்து ‘‘என்னை வெல்ல வல்லவர் யாரேனும் உளரோ’’ என்றான். ஒருவரும் முன் வராத போது சர்க்கரை மரபினர் போரிட்டு வச்சிரவாகுவை வென்றார். அரசர் பாராட்டினார்.

சர்க்கரை மரபினர் மன்னனிடம் ''உங்கள் மூன்று தெய்வங்களில் ஒருவரைத் தருக'' என்றார். அரசர் செண்டிகா தேவியையும் வழிபாடு நடத்திட செவந்தார அய்யரையும் அனுப்பி வைத்தார்.

இப்போது பழையகோட்டை அரண்மனையில் செண்டிகாதேவி கோயில் உள்ளது.

தோற்றும் கலியுக மூவாயிரத்துத் தொளாயிரத்தில்
தேற்றிடும் விக்கிரம தைஏழ்குரு தசமிதினத்தில்
போற்றும்நல் சர்க்கரை வச்சிரவாகுவைப் போர்தடிந்து
மாற்றிப் புகழ்அச்சுத ராயர்கையினில் வாங்கினனே.

143. வெற்றியால் வந்த தேவி

வாங்கிவர விசயநகரத்து ராயர் வாஎன்று
சர்க்கரையை அழைத்துக் கூவி
தேங்கிநின்று போவது யாதுஎன வினாவத்
திரமுள்ள மூன்று தேவிகளில் ஒன்றைப்
பாங்குடனே தருதிஎனப் பகரக் கேட்டு
பண்புள சக்கரத்தோடு செண்டிகையையும் கூட
ஓங்கு செவந்தாரையுமே வழிஅனுப்ப
உவப்போடு வந்தனர் காரை ஆனூருக்கே!

144. காய்ச்சிய நெய்யில் கை விட்டார்

திருச்செங்கோட்டில் வீரபத்திரக் கவிராயர் என்ற புலவர் வாழ்ந்து வந்தார். அவர் ஏகாலி (வண்ணான்) மரபினர். சிறந்த கவி இயற்றும் ஆற்றல் பெற்றவர். ஒருமுறை புலவர் பழையகோட்டை சர்க்கரை மன்றாடியாரைக் காண வந்தார். இருவரும் அளவளாவி மகிழ்ந்தனர். அப்போது ஏதோ காரியமாக பட்டக்காரர் மாளிகை உள் சென்றார். சிறிது தாமதித்து பணியாளர் ஒருவர் புலவரிடம், 'ஐயா தாங்கள் உணவருந்தச் சிறிது நேரம் செல்லும்' என்றார். தம்மை

விட்டு விட்டு பட்டக்காரர் உணவருந்துவார் போலும் என்று எண்ணிய புலவர் மரியாதை இல்லாத இடத்திற்கு வந்தது தவறு என்று எண்ணிப் புறப்பட்டு விட்டார். வெளியே வந்த பட்டக்காரர் விரைந்து சென்று, புலவரைத் தடுத்து நிறுத்தினார். 'நான் உங்களை விட்டு உள்ளே சென்று உணவருந்தவில்லை' என்றார். புலவர் ஐயம் கொள்ளக் கண்டு காய்ச்சிய நெய்யில் கையை விட்டுச் சத்தியம் செய்தார்.

பின் மாளிகை சென்று உணவருந்தி மகிழ்ந்தனர். புலவர் வேண்டவே, அவர் எச்சில் வாயைப் பட்டக்காரர் கழுவினார் என்பர். பின் மகிழ்ந்த புலவர் வீரபத்திரக்கவிராயர் நல்லதம்பிச் சர்க்கரை மீது 'காதல் இலக்கியம்' பாடினார்.

இந்நிகழ்வை நல்லதம்பிச் சர்க்கரை காதல் இலக்கியம்

'தூசர்குல வாணனுக்கோர் சோர்வுரைக்க வில்லையென
நேசமுடனே காய்ந்த நெய்யதனில் கையை விட்டோன்''

என்று கூறுகிறது.

மகிழ்ந்துகா ரைப்பதியில் வாழ்சர்க் கரைதான்
புகழ்ந்து திரிபுல வோரை - இகழ்ந்துநான்
வைய்யவில்லை என்றுசொல்லி மண்டலமெ லாமதிக்க
நெய்யிலே கையைவிட்டான் நேர்ந்து.

145. வித்துவான்கள் தொண்டன்

புலவர் ஒருவர் பழைய கோட்டைப் பட்டக்காரரைக் கண்டு, பாடி அளவளாவி மகிழ வந்தார். பட்டக்காரர் அவரை வரவேற்று உரையாடினார். அப்போது ஒரு தட்டில் பொன்னும் பொருளும் வைத்துப் புலவரிடம் நீட்டினார்.

அப்போது புலவர் 'பட்டக்காரரே, நாம் உம்மிடம் வந்து கவி பாடவும், என் கவிநயத்தை நீர் கண்டு மகிழவும்தான், நான் ஏதோ பொருள் பெற மட்டும் வந்ததாக எண்ணி தட்டில் பொருள் வைத்து நீட்டுகிறீரே' என்று பக்கத்தில் இருந்த குதிரையை அடிக்கும்

சவுக்கை எடுத்துப் பட்டக்காரரை அடிக்கத் தொடங்கினார். 'நான் ஒரு தவறும் செய்யவில்லை' என்று கூறிய பட்டக்காரர், 'அவசரம் கருதிச் செல்ல வேண்டியிருப்பதால் பரிசு தந்தேனேயன்றி அவ மதிக்கவில்லை' என்றார். பின் பட்டக்காரர் மாளிகையில் சில நாள் தங்கிப் புலவர் சென்றார்.

இந்த நிகழ்வை நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் காதல்

''கற்றாய்ந்த நாவலர்தன் கையில் சவுக்கடியும்
பெற்றான் சயத்தம்பம் பேருலகில் நாட்டுவித்தான்''

என்று கூறுகிறது.

கண்டால் புலவரை மேனாம்பு பேசும் கசரிட
மிண்டாநல் உத்தமக் காமிண்ட னேவித்து வான்களுக்குத்
தொண்டா புலவர் சவுக்கடி ஏற்ற சுமுககொடைத்
தண்டா மரைக்கை உத்தண்டா நலதம்பிச் சர்க்கரையே.

146. கைச் சிரங்கை நீக்கு

சோமன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாருக்குக் கையில் சிரங்கு நோய் வந்து விட்டது. ஆனூர் அம்மையை நோக்கி ''அம்மையே எல்லாம் நீ எனவே நாள்தோறும் பற்பல அன்னம் படைத்து வழிபட்டேன். விரைவில் என் கையில் ஏற்பட்ட சிரங்கை நீக்குவாயாக'' என்று வேண்டிய பாடல்.

பூமகளும் நாமகளும் புவிமகளும் நீஎனவே
புந்தி கொண்டு
நேமமுட னேமதியம் நாள்தோறும் பலஅன்னம்
நிவேதித் தேனே

தாமதமில் லாதருள்செய் ஆனூர்வாழ் பகவதியே
தமியன் ஆகும்
சோமன்எனும் சர்க்கரையின் கைச்சிரங்கை நீக்காத
சூழ்ச்சி என்னே.

147. சம்பந்தச் சர்க்கரை யார்?

ஒரு புலவர் சம்பந்தச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாரைப் பாடிப் பரிசு பெறப் பழைய கோட்டை சென்றார். பட்டக்காரர் தன் துணைவியாரோடு திருமலை நாயக்கர் தளபதி இராமப்பய்யனால் சங்ககிரியில் சிறையில் வைக்கப்பட்டிருப்பதை அறிந்தார். சிறையில் உள்ள பட்டக்காரரைப் பார்க்கப் புலவர் சங்ககிரி சென்றார். அங்கு இருந்தவர்கள் 'புலவர் சிறையிலும் பாடிப் பரிசு பெற வந்து விட்டாரே என்று இகழ்ச்சியாகக் கூறிய பொழுது 'இரப்பவன் இடம் அறியான்' என்று கூறி பட்டக்காரர் எங்கே என்று வினவியபோது பாடிய பாடல்.

எவரைஎன்று நாம்அறிவோம் இரப்பவனோ இடம்அறியான்
இரவில் வாழும்
கவருமதி ஒருபுறத்தே நிலவெரிக்கும் பான்மைதனைக்
கண்டி லீரோ

அவரைபதம் ஆகுமுனம் கடுகுபொடி யாகிவிடும்
அதனை ஓர்ந்து
துவரைமுதல் காதலனாம் சம்பந்தச் சர்க்கரையார்
சொல்லு வீரே.

148. தாலி கொடை தந்தார்

மதுரை திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சில காலம் அவர் தளவாய் இராமப்பய்யன் கொங்கு நாட்டில் அதிகாரியாக இருந்தான். வரி வசூலிப்பதில் மிகவும் கடுமையாக நடந்து கொண்டான். இரவு பகல் பாராமல் வரிவசூலில் கடுமை காட்டினான்.

பழையகோட்டைப் பட்டக்காரர் தன் நிர்வாகப் பகுதிக்குரிய வரியைக் கட்ட இயலவில்லை. மழையின்மை, பஞ்சம், வேளாண்மை பொய்த்துப் போனது காரணம். இராமப்பய்யன் வரிகட்ட இயலாத

சம்பந்தச் சர்க்கரையாரைக் குடும்பத்துடன் சங்ககிரியில் சிறையில் வைத்தான்.

சம்பந்தச் சர்க்கரையாரைப் பாடிப் பரிசில் பெற்றுத் தன் வறுமையைப் போக்கிக் கொள்ள ஒரு புலவர் பழையகோட்டை சென்றார். அங்கு பட்டக்காரர் சம்பந்தச் சர்க்கரை இல்லையென்பதை அறிந்து, மிகவும் சிரமப்பட்டு சங்ககிரி சென்று சம்பந்தச் சர்க்கரை யாரைப் பார்த்தார். புலவருக்குக் கொடை கொடுக்கச் சம்பந்தச் சர்க்கரையாரிடம் பொருள் இல்லை. அவர் தம் மனைவியின் கழுத்தை நோக்கினார். குறிப்பறிந்த அவர் மனைவி தன் தாலியைக் கழட்டித் தந்தார். சர்க்கரையார் தன் மனைவியின் தாலியைப் புலவருக்கு அளித்தார். இச்செய்தியைக் கீழ்க்கண்ட பாடல் விளக்குகிறது.

கொங்கினில் இராமப் பயன்அதி காரக் குரூரத்தினால்
கங்குலி ராப்பகல் சர்வசங் காரம்செய் காலத்திலே
சிங்கநல் சம்பந்தச் சர்க்கரை தேவி திருக்கழுத்தின்
மங்கிலி யந்தனை ஈந்தான் தமிழ்க்கவி வாணருக்கே.

149. காவல் விடுக காவலரே

தாலி பெற்ற புலவர் இராமப்பய்யனிடம் பட்டக்காரர் தனக்குக் கொடுத்த பரிசு பற்றிக் கூறினார். அதைக் கேட்ட வியப்புற்ற தளபதி இராமப்பய்யன் பட்டக்காரரை சிறையிலிருந்து விடுதலை செய்தார். 'இன்னும் ஏதேனும் வேண்டுமோ' என்று இராமப்பய்யன் பட்டக்காரரைக் கேட்க, அவர் 'சிறையில் உள்ள ஏனைய பட்டக்காரர், பாளையக்காரர் எல்லோரையும் விடுதலை செய்யக் கேட்டுக் கொண்டார். அவ்வாறே அனைவரும் விடுதலை பெற்றனர். அதைக் குறிக்கும் பாடல்,

வாணன் உரைத்திட மால்ராமப் பய்யன் மனமகிழ்ந்து
வேணது கேள்என சம்பந்தச் சர்க்கரை வேள்இனும்இவ்
வீணரைக் காவல் விடீர்என்று கூறிட விட்டிடலும்
தாணுவென்று இம்முடிக் காணிக்கை சாசனம் தந்தனரே.

150. தென்னிலையில் வென்ற தீரர்

தென்னிலை வெங்கச்சி வேட்டுவர் தலைவர் கொங்குராயன் காங்கய நாட்டில் கால்நடைகளைக் கவர்ந்தபோது காடையூர் பட்டக்காரர் குமார காங்கய மன்றாடியார் ஏவலால் அழகன் சர்க்கரையார் கொங்கு ராயனை வென்று வெற்றிச் சின்னங்களையும் கொண்டு வந்தார்.

பூந்துறை பாலதண்டாயுதபாணிக் கவிஞர் பாடிய பாடல்,

மட்டுக் கடங்காத தென்னிலையின் வேட்டுவர்கள்
மாசிங்க நாட்டில்வந்து
வண்டாட்ட மாகவே கொண்டாட்டம் கொண்டுமே
மாடாடு கொள்ளைகொண்டு

கொட்டமிட் டுக்கொண்டு திரியும்அந் நாளிலே
குமாரகாங் கயமன்றாடி
கொற்றவர்க் கரிதான சர்க்கரைநீ வாஎன்று
கொண்டாடி வரவழைத்து

திட்டமுடன் வென்றுவா என்னவே வெட்டியே
செயங்கொண்ட நாதர்அருளால்
தென்னிலையி லேசென்று முக்குறுணி தாலியைத்
தீர்க்கமுட னேஅறுத்து

வட்டவா சிக்குஒரு செக்கதையும் முக்கணனை
வண்டியுடன் ஏற்றிவைத்து
வந்தஅக் கீர்த்திபெறும் நலதம்பிச் சர்க்கரை
மன்றாடி மகிபாலனே.

151. பரதேசி மந்திரம் கற்றவர்

வீரபத்திரக் கவிராயரின் காதல் பிரபந்தம் கேட்ட நல்லசேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியாரின் மூன்றாம் சகோதரர் சின்னசாமி. அவர் கல்லங்காட்டு ஓடையருகில் வாழ்ந்தார். ஒரு

பரதேசியால் மந்திரம் உபதேசிக்கப்பட்டு குதிரை, ஆடு, மாடுகளின் நோய் தீர்த்த அவர் நூறாண்டு வாழ்ந்தார்.

உலகுடைய பாளையம் நல். இராசகோபாலபிள்ளை பாடியது,

ஆனூர் எனும்கோட்டை அருகே கீழ்பால்
அமைந்த ஓடுறு மாளிகை
அதனில்வளர் நலதம்பி அதிபர்சர்க் கரைமன்னர்
அழகுபெறு காதல் கேட்க

ஏனூறு பொன்தந்த தல்லாது தன்கையை
எரிந்து காய்கின்ற நெய்யில்
இசைவுபெற விட்டமிக சத்யகுண சீலருக்கு
இலங்கு மூன்றாம் சோதரர்

தோனூறு பத்துடைய பாணனது வீரம்
துலங்கு சின்னச் சாமியாம்
துங்கமுள கல்லதின் காட்டின்உயர் ஓடைமேல்
தோதான சிறு மனையினில்

வானூறு வயதுகுறை வின்றிஇப் பூவுலகில்
வாழ்ந்துவரு கதியில் ஓர்நாள்
வந்தஒரு பரதேசி மந்திரமது கற்றுஅசுவ
மாடாடு நோய் தீர்ப்பரே.

152. செம்மறியாடு விற்றுச் சிவமலைத் திருப்பணி

கரியான் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் நூறு செம்மறியாடுகள் விற்று வந்த பொருளால் சிவமலைத் தேர் செல்லும் பாதையைத் திருப்பணி செய்தார். நாள்தோறும் குதிரையில் வந்து ஏழு நாளில் பணியை முடித்தார். சிவமலை வர - போக இரண்டு குதிரைகளை அவர் பயன்படுத்தினார்.

சிவமலை சிவகிரி பண்டிதர் பாடிய பாடல்,

பாரும் கரியான் சர்க்கரை மன்னர்
பக்தி மிகப்பெருகி
பண்புள சிவமலை ஆண்டவர் தேர்வரு
பாதை அதைநிரவி

நேரும் கலியுக நாலா யிரமொடு
நானூற் றைம்பதுநாள்
நிகழும் நந்தன ஆண்டுதை பத்தேழ்
நிலைபெயர் தேதியினுள்

சீரும் கொண்டிட வேகிரி சுற்றிச்
செப்ப மிடத்தனது
செம்மறி யாடுகள் நூறது விற்றுச்
சேர்ந்த பணத்தினிலே

ஏரும் குதிரை இரண்டது வைத்திங்கு
ஒன்றங்கு சென்றதின் மேல்
எக்கியே வந்திரு வேளையு மேதினம்
ஏழுள் முடித்தனரே!

153. அஞ்சு பட்டுச் சோமன் அளி

இப்பாடல் கொங்கு மண்டல சதகம் இயற்றிய கார்மேகக் கவிஞரின் பேரன் கார்மேகக் கவிஞர் 19ஆம் பட்டக்காரர் கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் மீது பாடிய பாடல்.

கொற்றவேல் சர்க்கரையார் பட்டக்காரராக முடி சூட்டப்பட்டவர். பிறர் படைகளும் பயப்பட்டு அஞ்சும் கல்யாணிக் குதிரையை உடையவர். இறைவனை வழிபட்டு நலம் பெற்றவர் என்று பாராட்டி ஐந்து சோமன் பரிசு கேட்கிறார் புலவர்.

பட்டஞ் சுமந்த முடிமன்னர் சேனை பயந்துகடைப்
பட்டுஅஞ்சு வண்ணப் பரியுடை யோய்நம் பரனைவழி

பட்டுஅம் சுகம்பெறும் கொற்றவேல் சர்க்கரை
பட்டஞ்சு சோமன் அளிப்பாய் உன்கீர்த்தி பரவுதற்கே.

பட்டம் சுமந்த
சேனை பயந்து கடைப்பட்ட - தோற்று
பரனை வழிபட்டு அம்சுகம் பெறும் -
பட்டு அஞ்சு சோமன்.

தீரன் சின்னமலை பாடல்கள்

பழையகோட்டை மரபில் இரத்தினச் சர்க்கரை - பெரியாத்தா தம்பதியர்க்கு 17.04.1756 அன்று பிறந்தவர் தீரன் சின்னமலை. கம்பெனியார் ஆட்சி கால்கொள்வதை எதிர்த்துப் போரிட்டவர். 31.07.1805 ஆடி 18 அன்று சங்ககிரியில் தூக்கிலிடப்பட்டார்.

154. பொன் பெறாத புலவர் எவருமில்லை

பாங்காய்ப் புகழ்கொண்ட ரத்தினச் சர்க்கரை
　　பாலன்அன்பு
நீங்காத் தமிழ்க்கடல் ஆனூர் அடைவார்
　　நெடும்பசிக்குக்
காங்காத் திகழ்ந்திடும் தீர்த்த கிரிச்சர்க்
　　கரைகையிற்பொன்
வாங்காப் புலவரைக் கண்டறி யோம்இந்த
　　வையகத்தே.

155. சொன்னமலையால் அழித்து விட்டான்

சென்னி மலைக்கும் சிவன்மலைக் கும்இடை
　　தீரமிகு
சின்ன மலையென்று மேனாம்பு பேசிய
　　தீர்த்தகிரி

சொன்ன மலையினால் யானவன் கீர்த்தியைச்
சொன்னதற்கா
என்னை யடித்துத் துரத்திவிட் டான்இனி
என்செய்வனே.

பெருமைச் சுவடுகள்

156. மூவேந்தர் சூட்டும் முடி

வேளாளர்கள் அரசருக்கு முடிசூட்டும் உரிமையுடையவர்கள். இராமனுக்கு முடிசூட்ட "சடையன் மரபினோர்" கொடுக்க முனிவர் வசிட்டர் சூடியதாய்க் கம்பர் கூறுவார். சடையன் கொங்கு வேளாளர்.

இதற்கு மாறாகக் கொங்கு வேளாளர் தலைவர்கள் நால்வருக்கு மூவேந்தர் கூடி முடி சூட்டியதாக இப்பாடல் கூறுகிறது. அவர்கள்,

சங்கரண்டாம்பாளையம் பெரியகுல வேணாடுடையார், வெள்ளோடு சாத்தந்தை குல உலகுடையார், பழையகோட்டை பயிரகுல சர்க்கரை மன்றாடியார், பூந்துறை காடைகுல நண்ணாவுடையார் ஆகியோர் ஆவர். அதைக் குறிக்கும் பாடல். உலகுடையார் வெள்ளோடு (தென்முகம்) உலகபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவர்.

வேணா டுடையான் வெள்ளோடு உலகுடையான்
ஆனூர்க்குச் சர்க்கரை மன்றாடி - வேணுபுகழ்
நாவேந்து பூந்துறைசை நண்ணா வுடையார்க்கு
மூவேந்தர் சூட்டும் முடி.

157. எழில் சுப்பராயன் எவன்?

வேளுக்குறிச்சி வள்ளல்கள் மரபில் இராசிபுர நாடு, கொங்கு வேளாளரில் விழியகுலம், பரஞ்சேர்வழியைப் பூர்வீகமாகக் கொண்ட வேலப்ப கவுண்டர் பேரனும், நஞ்சைய கவுண்டர் மகனும் ஆன சுப்பராயக் கவுண்டர் வாழ்ந்த காலத்தில் அவரைப் பார்க்க

திருச்செங்கோடு மண்டகப்பாளையம் காளியண்ணக் கவிராயர் சென்றார். முன் அவரைக் கண்டது இல்லை. வேளுக்குறிச்சி சென்ற புலவர் பலர் இருந்த அவையில் யார் சுப்பராயக் கவுண்டர் என்று கேட்டது பாடலாக வடிவம் பெற்றுள்ளது.

இருமடந்தை நண்பன் இராசை வளநாடன்
அருவிழியன் வேள்குறிச்சி யாளன் - பரஞ்சேர்
வழிவேல வன்பேரன் வாழ்நஞ்சை யன்சேய்
எழில்சுப்ப ராயன் எவன்.

158. காதில் கடுக்கன் பூட்டியது ஏன்?

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம் கொளாநல்லி கவுண்டம்பாளையம், மோரூர் கண்ணன் குலப் பாம்பண்ண கவுண்டர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்த வள்ளல். கொளாநல்லி சிவாலய இறைவன் பெயர் பாம்பலங்காரர். அக்கோயில் காணியாளர்கள் பாம்பண்ணன் என்று பெயர் வைத்துக் கொள்வது வழக்கம்.

இப்பாம்பண்ண கவுண்டர் ஆதரவு பெற்ற புலவர் பவானி பாலபாரதி. புலவர் பாலபாரதி பாம்பண்ண கவுண்டர் மீது ஒரு குறவஞ்சி இலக்கியம் இயற்றினார். கவுண்டம்பாளையத்தில் அந்நூலின் அரங்கேற்றம் நடைபெற்றது. அப்போது பாம்பண்ண கவுண்டர் பவானி பாலபாரதிக்கு வைரக்கல் பதித்த தங்கக் கடுக்கன் பரிசாக அளித்தார்.

அவர் தங்கக் கடுக்கன் கொடுத்தற்கு ஒரு நயமான காரணத்தைக் கூறி பாலபாரதி ஒரு பாடல் பாடினார். 'கொடை கொடுக்க மனம் இல்லாத உலோபிகள் பக்கம் சென்று தொகை வேண்டிப் பாடினால் அது தவறு என்று இரு கன்னத்திலும் அடிக்கவே பாம்பண்ண கவுண்டர் கடுக்கன் பூட்டினார் என பாலபாரதி பாடிய நயமான பாடல் இது.

காதாட்டிக் கைநீட்டி நின்போல் குறவஞ்சிக்
கவியைச்சொல்லி

நாதாட்டி கத்துடனே பிரசங்கம் செய்கின்ற
நாவலர்க்கு
வாதாட்டி லுத்தர்பக்கம் சேர்ந்தவர்கன் னத்தடிக்க
மணிக்கடுக்கன்
மாதாட்டி கத்துடன்பூட் டியபாம்ப ணேந்திரநீ
வாழிமாதோ!

159. கம்பும் பொன்னும் அருள்க

மேல்கரைப் பூந்துறை நாட்டுக் காடைகுல வள்ளல் ஒருவரைப் பார்த்துப் புலவர் பாடிய பாடல்.

''காடைகுல மேருவே! அன்னதானம் செய்வதில் வல்லவரே! கற்ற புலவருக்கு உற்ற துணையே! உம் மீது நான் தமிழ்ப் பாடல்கள் பாடி வந்துள்ளேன். தவறாமல் எனக்கு ஒரு பொதி கம்பும், ஐந்து பொன்னும் அருள்வாயாக'' என்று புலவர் கூறியதை இப்பாடல் விளக்குகிறது.

காமனருள் பாலகன் முத்துமக ராய்னிட
கனமணிகள் தானசுதனே
காடைகுல மேருவென அனதான வீடனே
கற்றவர்க்கு உற்றதுணையே
ஆமனவை எந்தனிட தமிழ்மாலை கேட்டுநீ
ஆடையா பரணம்எல்லாம்
அட்டிசொல் லாமலே ஒருபொதி கம்புடன்
அஞ்சுபொன் அருள்புரிகுவாய்.

160. கீரனூர் சென்னிமலை பூபன்

காங்கய நாட்டுக் கீரனூர்க் காணியாளர்கள் ஆறு குலத்தாரில் அந்துவன் குலத்தாரும் ஒருவர். கீரனூர் அந்துவகுலச் சென்னிமலைக் கவுண்டரைப் பற்றியது இப்பாடல்.

கீரனூர்க் கோயில் தெய்வங்கள் அனைவரும் காத்து நிற்பதால் சென்னிமலைக் கவுண்டர் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வருகிறார். அவரைப் பதினாறு பேறுகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவெனப் புலவர் மனமாரப் பாராட்டி மகிழ்கிறார்.

சீர்கொண்ட வடிவுற்ற ஆதீச லிங்கரும்
　　தேவிஅகி லாண்டவல்லி
செந்தில்வடி வேல்முருகர் கந்தவேள் குமரனே
　　தெண்டா யுதக்கந்தனே

கார்கொண்ட கருணைபுரி செல்லாண்டி யம்மனையும்
　　கருப்பண்ண சுவாமியாரும்
கரியகுழல் பேச்சியும் துக்காச்சி யம்மனும்
　　கருணைவிண் ணப்பம்செய்து

பேர்கொண்ட பிரபலன் கீரைநகர் அதிபனே
　　பெருமைபெறும் அந்துவகுலனே
பிரபலத்து அதிபனே சென்னிமலை பூபனே
　　பிரசண்ட மகமேருவே

வார்கொண்ட ரதிமோகன் சென்னிமலை பூபனும்
　　மகராச யோகமல்கு
மக்கள்பதி னாறுடன் நீடூழிக் காலமும்
　　வாழ்ந்திடக் காக்கநன்றே!

161. கருப்பண மகிபாலன் வாழ்க

வெள்ளோடு சாத்தந்தை குலக் கருப்பண கவுண்டர் உள்ளூர்க் கோயில்கள் அனைத்திற்கும் சென்று வழிபட்டுப் புண்ணியம் பெற்றவர். இருப்பினும் பொன்காளியம்மன் மீது மிகுந்த பற்றுக் கொண்டு விருப்ப தெய்வமாக நாள்தோறும் சென்று வழிபட்டு வந்தார். அவர் கொடை வழங்குவதில் குமணன் போல் சிறந்தவர் என்று புலவர் போற்றிப் புகழ்கிறார்.

தவமகிமை குலவிவளர் சந்தான பாக்கிய
தமிழ்தெரி விதட்சணீகன்
சற்பாத்திர யோகபூ சிதமுலவு கெம்பீர
தனதான்ய சந்தானசூரன்

பவமகற்றும் சர்வலிங் கர்பாடக வல்லி
பற்பண லட்சுமிநாராயணர்
பாதைரா சாக்கள்நஞ் சுண்டீசர் பொற்பதம்
பவிசுசிர கிரிமுருகனை

புவனமதில் உயர்சகல தேவர்களை யும்தொழுது
புண்ணியம் கைக்கொண்டவர்
பூந்துறைசை நாட்டில்வெள் ளோடைவளர் பொன்காளி
பூசைபுரி கின்றஅன்பர்

மவுனகங் காகுல குமணராசன் தன்இளனி
மனதுசிவ சீலமைந்தன்
மகராசன் கருப்பண மகிபாலன் இப்புவியில்
வரிசையுடன் வாழ்கநன்றே.

162. மேழி விருதாளர் செங்கோடன்

உமையம்மை 32 அறம் வளர்த்தார் என்பது சைவ மரபு. அந்நெல்லில் ஒரு நாழி நெல் பெற்றே வேளாளர் நெல் உற்பத்தி செய்து உலகில் உள்ள 84 லட்சம் உயிர்கட்கும் உணவு தருகின்றனர். நீ அவ்வழியில் வந்தவன். உன்மீது அட்டமங்கலம் என்னும் தமிழ்நூல் பாடி வந்தேன் என்று புலவர் கூறி பரிசில் தர நசியனூர்க் கூறைகுலப் பொன் கவுண்டைய கவுண்டர் மகன் செங்கோட கவுண்டரை வேண்டிப் பாடிய பாடல்,

கருணைதிகழ் முப்பத்தி ரண்டறம் செய்ததைக்
காப்பதற்கு உண்மையாகக்

கருதியொரு நாழிவிதை நெல்லதனை உமையவள்
கனிந்துதவ வாங்கிமுன்னாள்

தரணிதனில் உழவுதொழி லாற்பெருக் கிச்செயும்
தருமம் தழைக்கமேலோர்
தங்கள்முத லாகஎண் பத்துநான்கு இலக்கஉயிர்
தழைக்கஅமு தீன்றுமிக்காய்

பெருமைதிகழ் மேழிவிரு தாளன்நீ ஆகையால்
பேசும் அட்டமங்கலம்
பிரபந்தம் உன்மீதில் ஏந்தினேன் தியாகநிதி
பேணிப் பரிந்துதருவாய்

திருவுலவு நசையநகர் வளர்கூறை குலதிலக
திவ்யனாம் பொன்கவுண்டய
தீரன்அருள் செங்கோட மாநிதிக் குபேரனே
செகதலப் பிறைக்யாதியே.

163. பெத்தான் செல்லப்பன் பெரும்புகழ்

இப்பாடல் கீரனூர் அந்துவகுலப் பெத்தாக்கவுண்டர் மகன் செல்லப்ப கவுண்டரின் புகழ் பாடுகிறது. பொதுவாக வேளாளர்கள் பரிக்கு நகுலன் என்று கூறப்படுவர். இது புகழ்மொழி. ஆனால் செல்லப்ப கவுண்டர் குதிரையேற்றத்தில் மிக வல்லவர் என்று இப்பாடலில் கூறப்படுகிறார். கீரனூர் போன்றே நாகம் பள்ளியிலும் காணியுரிமை உடையவர் என்று கூறப்படுவதுடன் இவர் கற்றவர்க்கும் உற்ற துணையாகவும் இருப்பது கூறப்படுகிறது.

வண்டுற்ற சோலைதிகழ் நாகயம் பதியினில்
வலமிட்டு வாளியிட்டு
வல்லயத் தருகிட்டு சவரிதுப் பாச்சியில்
வங்களப் பச்சையிட்டு

அண்டத்தில் மணிகட்டி மின்சல்லி பின்சல்லி
அணிசல்லி ரேக்குமிட்டு
அழகுபொன் முகமிட்டு வாகார மிட்டுமே
அதிகவெம் சுட்டிகட்டி

கண்டத்தில் விருதிட்டு முகத்துக்கண் ணாடியில்
காலத்தின் நீலிமெச்சும்
கருதிட்டுத் துட்டரை எதிரிட்டு வெட்டியே
கடியபரி முனைபெற்றவன்

செண்டுற்ற புகழ்பெற்ற கீரைநகர்ப் பெத்தான்
செல்லப்ப மகிபாலனே
தென்வஞ்சி நகராளும் மங்கைநகர் அதிபனே
செந்தமிழ்க்கு உற்றதுணையே.

164. பனைங்காட்டுச் சின்னய்யன் பண்பு

ஈஞ்சகுலச் சின்னய்ய கவுண்டர் தென்கரை நாட்டின் காணி யாளராகவும் போற்றப்படுகிறார். சித்தர்கள் பொன் ஆக்கும் ஊதியூர் மலை, ஆன்பொருநையாறு, பல வளம் பெற்ற தென்கரை நாட்டு நீலம் பேரூர் வடபத்ர காளி, ஆவுடையீசர், கவுரியம்மை, கரிய வரதர், கறுப்பண்ணசாமி ஆகியோரைக் குல தெய்வமாக வணங்குபவர்.

நவகோடி சித்தர்கிரி யாம்கொங் கணர்பொன்
னாக்குபொன் ஊதிமலையும்
நவமணி கொழிக்கும்ஆன் பொருநைநதி செங்கழுநீர்
நறுமலர் உதிக்கும்பொழில்

தவநிறை சிவத்தலம் சிகரகோ புரம்எழில்
சதிர்சாலை தண்ணீர்ப்பந்தல்
தண்பனை நிறம்புதென் கரைநாடு தன்னிலே
சதுர்மறை வாக்யங்களும்

கவின்இலகு நீலம்பே ரூரில்உமை வடபத்ர
காளியை ஆவுடையீசர்
கவுரிபா கம்பெரிய வளைநீல மேனியர்
கரியவர தர்ஆலயம்

குவலயம் மதிக்கவரு கறுப்பண்ண சாமியைக்
குலதெய்வம் எனநம்பியே
கோலபனைங் காட்டுச் சின்னய்யன் எனவரும்
ஈஞ்சகுல சந்திரபூபா.

165. அன்னம் இட்ட சின்னம்மாள்

மேல்கரை அரைய நாட்டுத் தலைநகர் தலையநல்லூர்க் கூறைகுல ஆயிக்கவுண்டர் பேரனும், காளியண்ண கவுண்டர் மகனுமான பழனிக் கவுண்டர் மனைவி சின்னம்மாளின் விருந்தோம்பும் சிறப்புக் குறித்துப் புலவர் பாடிய பாடல்.

காய்கறிகளோடு விருந்தளித்து பொருளும் தருவார். பெற்ற தாய் போல மிகவும் அன்போடு தருவார்.

காயும் கறியொடு அன்னமும் சொன்னமும் கற்றவர்க்குத்
தாயின் பரிவொடு ஈதல்கற றாய்தென் தலைசைவளர்
ஆயி மகீபன் தருகாளி ராயன் அருளில்வந்த
சேயன் பழனி மகீபன் மனைவளர் சின்னம்மனே.

166. கோவுக்கு அழகிய குப்பண்ணன்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம், வெள்ளோடு கிராமம், தென்முகம் வடமுகம் என இரண்டு நிர்வாகப் பிரிவு பெற்றது. தென்முகம் வெள்ளோட்டுக் காணியாளர் சாத்தந்தை குலத்தினர். வடமுகம் வெள்ளோடு காணியாளர் பயிரன் குலத்தாரும் சாத்தந்தை குலத்தாரும். வடமுகம் வெள்ளோடு பயிரகுலக்காணியாளர்களில் குப்பண கவுண்டரை இப்பாடல் புகழ்கிறது.

பூக்களில் தாமரை அழகு, நல்ல சொற்கள் பேசுவது நாவுக்கு அழகு, பாக்களில் அழகு குப்பண்ணனைப் பாடும் பாடல், பயிரன் குலத்தில் அழகானவர் வெள்ளோட்டுக் குப்பண்ணன்.

பூவுக்கு அழகுசெந் தாமரைப் புட்பம் புகழ்ந்துரைக்கும்
நாவுக்கு அழகு பழுதுரை யாமைநல் நாவலர்சொல்
பாவுக்கு அழகு நினைப்பாடல் வாழும் பயிரகுலக்
கோவுக்கு அழகு நீயேவெள் ளோடையில் குப்பணனே.

167. பொன்னர் சங்கர் உறவு

பொன்னர் - சங்கர் ஆகிய அண்ணன்மாரின் குடும்ப உறவுகளை இப்பாடல் குறிக்கிறது.

அவர்களில் பாட்டன் கோளாத்தாக் கவுண்டர் வாங்கல் கோயில் திருப்பணி செய்ததால் வாங்கலான் எனப்பட்டார். அவர் திருக்காம்புலியூரில் வாழ்ந்தார். செல்லாத்தாக் கவுண்டர் சித்தப்பா, அவர் பொன்னர் - சங்கருக்குப் பல தீங்குகள் செய்தார். தந்தை குன்றுடையான், தாயார் தாமரை நாச்சியார். அவர்கள் சிற்றாலைப் பட்டணத்தில் வாழ்ந்தனர்.

வாங்கலான் பாட்டனவன் வாழ்வுதிருக் காம்புலியூர்
தீங்குசெய்த செல்லாத்தான் சிற்றப்பன் - ஓங்குதந்தை
நாமம்எழிற் குன்றுடையான் நண்ணுநகர்ச் சிற்றாலை
தாமரை நாச்சியார் தாய்.

168. படிக்காசுப் புலவர் பாடிய நூல்

கொங்கு மண்டல கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுத் தலைநகர் மோரூர். கொங்கு வேளாளர் கண்ணன் குலத்தார் காங்கேயர் ஊர். அங்குள்ள சிவாலய இறைவன் பெயர் பாம்பலங்காரர். காங்கேயர் ஆதரவு பெற்ற தொண்டை மண்டலம் பொன் விளைந்த களத்தூரைச் சேர்ந்த படிக்காசுப் புலவர் மோரூர் பாம்பலங்காரர் மீது ''வருக்கக் கோவை'' இலக்கியம் பாடினார். வருக்கக் கோவை என்பது தமிழில்

முதல் மொழியாக வரும் எழுத்துக்களை வரிசையாக அமைத்துப் பாடப்படும் ஒரு சிற்றிலக்கியம்.

காரூர் பொழில்திகழ் மோரூரில் பாம்பலங் காரரின்மேல்
சீரூர் வருக்கத் தொடைமாலை அன்புறச் செப்பினனால்
நீரூர் புடவிக் கவிவாணர் வாழ்த்த நிமிர்களந்தைப்
பேரூர் வருபடிக் காசனென் றோது பெரியவனே.

169. தந்தச் சிவிகை தந்தார்

கவசை கோயில்பாளையத்தில் தமிழ்ச் சங்கப் புலவர்களிடம் தோல்வி அடைந்து தன் விருதுகளையெல்லாம் இழந்த படிக்காசுப் புலவர் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு மோரூருக்கு வந்தார். மோரூர்க் காங்கேயர் மரபில் அப்போது வள்ளலாக வாழ்ந்தவர் குமாரசாமிக் காங்கேயர். வேலர் சன்னதி முன்பாக கந்த புராணச் சிற்பங்களை அழகுடன் வடிக்கச் செய்தவர்.

அவர் படிக்காசுப் புலவரை ஆதரித்துப் போற்றினார். படிக்காசுப் புலவர் மோரூர் பாம்பலங்காரர் மீது வருக்கக் கோவை பாடினார். அதனால் மிகவும் மகிழ்ந்த குமாரசாமிக் காங்கேயர் படிக்காசுப் புலவருக்கு தந்தம் போர்த்த அழகிய சிவிகையைப் பரிசாக அளித்தார். சிவிகை பெற்ற படிக்காசுப் புலவர் மகிழ்ந்து பாடிய பாடல் இது.

அந்திப் பிறைச்சடை யாரர வாசலர் ஆலயத்தில்
கந்தப் பிரான்கதை கற்சிலை யாலமை காங்கேயரில்
விந்தைப் புயக்கும ரேந்திர வேந்து வியந்தெமக்குத்
தந்தச் சிவிகை கொடுத்தான் பெரும்புகழ் பெற்றனனே!

170. செந்தமிழ்க்கு வேளுக்குறிச்சி

19 ஆம் நூற்றாண்டின் நிலையை இப்பாடல் விளக்குகிறது. அரசு, அரசர் ஆகியோர் இரவலர்களை, புலவர்களை ஆதரிக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை பல அரசர்களுக்கு இல்லை என்பதை இப்பாடல் விளக்குகிறது.

சிந்தைமகிழ்ந் திடும்மைசூர் சமஸ்தா னத்தில்
செயவில்லை; கும்பினியார் செய்ய மாட்டார்;
அந்தமிகு செஞ்சிதஞ்சா வூர்கோ டற்கோ
அரசில்லை; சேதுவுக்கோ ராணிப் பட்டம்;
வந்தளட்ட யாபுரத்தில் பேட்டி இல்லை;
மற்றவர்க்கோ கொடைகொடுக்க வளம்போ தாது
செந்தமிழ்க்கு வேள்குறிச்சி யொன்றே யல்லால்
செய்யுதற்கோ வேறிலைமுச் சகத்தில் தானே!

171. நாகப்ப கவுண்டருக்கு வாழ்த்து

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் விசயமங்கலத்தை அடுத்துள்ள கம்புளியம்பட்டி நாகப்பகவுண்டர் கற்றறிந்த சான்றோர், கவிஞர், ஆலய நிர்வாகக் குழு உறுப்பினர். பல திருப்பணிகள் செய்தவர். பெற்றோர் ரங்கைய கவுண்டர் - காவேரியம்மாள். இவர்கள் வெள்ளோடு சாத்தந்தை குலத்தினர்.

கதித்தமலை முருகன் மீது பதிகம், தங்கச் சிந்து முதலிய இலக்கியம் இயற்றி சென்னை சென்று அச்சிட்டு வந்தவர். அவரைப் பாராட்டி விசயமங்கலம் சமணர் கொங்கு மண்டல சதகம் பாடிய கார்மேகக் கவிஞர் வழிவந்த சீனிவாசய்யர் பாடிய பாடல். நூல்கள் வெளிவந்த ஆண்டு 1875.

சீர்கொண்ட யிங்கிலீ சாயிரத் தெண்ணூறத்திச்
செப்பும் எழுபதைந்தில்
திகழ்கொங்கு தேயமதில் கதித்தமலை தன்னிலுறை
சேவலங் கொடியோன்மிசை
வார்கொண்ட சொன்மணிக் கோர்வையென யாவரும்
கிளந்தினிது கொண்டாடவே
மதுரமிகு செந்தமிழ்ப் பதிகமும் சிந்துதனை
மாண்புடன் பாடினானால்

ஏர்கொண்ட வெள்ளோடைச் சாத்தந்தை குலதீரன்
எங்கணும் புகழ்நிறைந்தோன்
இரவலர்க்கு உபகாரி சற்குண விபேகனாம்
ஏந்தல்மே ழிப்பதாகை
கார்கொண்ட கரதலன் பூபால ரங்கயன்
கருணைதாங் கியமனைவியாம்
காவேரி ஈன்றருள் நாகப்ப மால்எனது
காண்டி சிரோரற்றினமே!

172. நல்லதம்பியா?

ஒரு புலவர் மோரூர் வள்ளல் அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் மாளிகைக்குச் சென்றார். வாயில் காவலன் பாரதக் கதை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது பொறுத்திருங்கள் என்று புலவரிடம் கூறினார். புலவர் 'பாரதக் கதையில் விருந்தினரை வரவேற்று உபசரிக்க வேண்டாம் என்று கூறப்பட்டிருக்கிறதா? "உனக்கு எப்படி நல்லதம்பி என்ற பெயர் ஏற்பட்டது" என்ற பொருளில் பாடல் எழுதி நல்லதம்பியிடம் சேர்க்குமாறு காவலனிடம் அனுப்பியபோது எழுதிக் கொடுத்த பாடல்.

செட்டியார் தன்கதையில் செட்டிமா மன்கதையில்
இட்டுள்ள வேண்டாமென் றிருக்கிறதோ - அட்டபால்
மோரூரத் தப்பன் மொழியுநல்ல தம்பியெனப்
பேரான தெப்படியோ பேசு.

173. "படைத் தலைவர்" பதினொருவர்

முதலாம் பராந்தக சோழன் (907-950) ஆட்சிக் காலத்தில் கொங்கு ஆட்சியாளராக 942 ஆம் ஆண்டு கோநாட்டான் வீர சோழப் பெருமானடிகள் என்பவரை நியமித்தார். அவர் 980 வரை ஆட்சி

புரிந்தார். அவர் பரகேசரி பட்டம் பெற்றவர். மகிமாலய இருக்குவேள் என்ற பெயரும் அவருக்கு உண்டு.

அவருக்குப் பின் இராசகேசரி வீரசோழக் கலிமூர்க்கப் பெருமாள் என்பவர் ஆட்சிக்கு வந்தார் (980 - 1004). இக்காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்களைத் தவிர்க்கவும், கள்ளர் பயம் ஒழிக்கவும், அன்னியர் படையெடுத்தால் எதிர்க்கவும் நிலைப்படை ஒன்றை அமைக்க விரும்பினார். தொன்மையானதும், கொங்கு நாட்டின் மையத்தில் அமைந்திருப்பதும், வாகை என்ற பழம்பெயர் உடையதும் ஆகிய விசயமங்கலத்தில் தங்கள் வெற்றியைக் கொண்டாடப் படை நிறுவ எண்ணினார்.

அப்படையில் கொங்கு வேளாளரில் பதினொரு குலத்தார் இணைந்தனர். அவர்கள் பொருளந்தை, சாத்தந்தை, மணியன், ஈஞ்சன், பூமன், புள்ளந்தை, மேதி, பயிரன், வாணன், வாணி, சாத்துவாய் ஆகிய குலத்தைச் சேர்ந்தவர்கள். இதனை இத்தனிப்பாடல் விளக்கு கிறது.

மங்கையொரு பாகர் திருநா கீசரும்
மால்கரிய மாணிக்கரும்
மகதேவர் சோமீசர் செல்சந்திர நாதரும்
மகிழ்வுடன் மகிழ்ந்துகாக்க

மங்கைநகர் கூடல் கருமாபுரம் காடையூர்
மன்னவர்கள் பொருளந்தையும்
வானிதனில் அணைகண்ட சாத்தந்தை மேருவும்
மணியனுடன் ஈஞ்சகுலமும்

துங்கமிகு பூமனும் புள்ளந்தை மேருவும்
துரைராசர் மேதிகுலமும்
துன்பமில் பயிரனும் வாணன்கேள் வாணியும்
துரைசாத்து வாயருடனே

இங்கிவர்கள் படைத்தலைவர் பதினொரு குலத்தவர்கள்
இரவோர்கள் தம்பம்என்ன
எழில்பெற்ற நிலையுற்ற காராளர் ஏராளர்
இன்னிலம் தனில்வாழ்கவே.

என்ற பாடல் படைத்தலைக் கவுண்டர்கள் பதினொரு குலத்தாரையும் தொகுத்துக் கூறுகிறது. இவர்கள் படையில் இருந்ததால் மற்ற வேளாளருடன் தொடர்பு குறைந்து தங்களுக்குள்ளேயே கொள்வினை கொடுப்பினை வைத்துக் கொண்டு தனி வேளாளர் ஆயினர்.

174. ஆறைவாணன் புகழ்

கொங்குப் பகுதி முழுவதையும், கலிங்க நாட்டையும் வென்ற ஆறகழூர்வாணன் சினம் தணியாமல் வங்கார தொங்கனையும் வென்றான். அப்போரில் செங்குன்றம் பிணக்குன்றம் ஆயிற்று.

கொங்கும் கலிங்கமும் கொண்ட கண்டா
கொடித் தேருதியர்
தங்கும் படிகொண்ட வாணாதிபா சினம்
தணியாத தென்கொல்
பொங்கும் சினப்படை வங்கார தொங்கன்
புரண்டு விழச்
செங்குன்ற மின்று பிணக்குன்ற மாக்கிய
தேர் மன்னனே.

175. வணங்காமுடி வணங்கியது

தாரமங்கலம் வணங்காமுடிக்கட்டி ஆற்றல் மிக்கவர். பலரை வென்றவர். அவரை பூந்துறை காடைகுல வாரணவாசிக் கவுண்டர் போரிட்டு வென்ற செய்தியை இப்பாடல் கூறுகிறது. பூந்துறையின் மிகு வளமும் வாரணவாசிக் கவுண்டரின் படை வலிமையும் இதில் கூறப்பட்டுள்ளது.

மாற்றலர் மண்கொள்ளும் வணங்கா முடிக்கட்டி
ஆற்றல்அழிந்து ஏங்கி அடங்கினான் - தாற்றரம்பை
பூங்கனித்தேன் பாய்மருதப் பூந்துறையான் சேனைமதிற்
பாங்குறுத்துச் செய்கொடுமை பார்த்து.

176. செப்பேடு பெற்ற செம்மல்

மாற்றலரை வென்று வெற்றிக்கொடி கட்டிய ஈஞ்சகுல இரகுநாத சிங்கக் கவுண்டருக்கு அவர் வெற்றியைப் பாராட்டி, சேர, சோழ, பாண்டிய அரசர் மூவரும் வெற்றிக் காணிக்கையாகச் செப்பேடு எழுதிக் கொடுத்தனர். மீனாட்சியம்மன் சொக்கலிங்கம் சாட்சியாக அவருக்குக் கருமனூர், வெப்படை ஆகிய ஊர்களைக் கொடையாக அளித்தனர்.

செப்பரிய கொத்துமுடிச் சேரன் சோழன்
பாண்டியர் மூவர்கூடி
இப்புவியில் இரகுநாத சிங்கய்ய கவுண்டருக்கு
வெற்றிக்கா ணிக்கையாக
செப்பேடு தான்எழுதி மதுரைமீ னாட்சியின்
செயகருணையது தன்னால்
அப்புநிறை சொக்கலிங்கர் சாட்சியாக வெப்படை
கருமனூர் அருளினாரே!

177. கொடுமணல் பொன்னையன்

கொடுமணல் சேரகுலப் பொன்னையனை நலமுடன் காப்பாற்றுமாறு திருப்பதி வெங்கடேசப் பெருமானைப் புலவர் வேண்டும் பாடல். கொடுமணலில் இராமசாமி கோயில் உள்ளது. ஒரு கல்வெட்டு ''திருவேங்கடமுடையான் திருவிடையாட்டம்'' என உள்ளது. பொன்னையன் குறுப்பு நாடன், அகளங்கன் (களங்கம் இல்லாதவர்) என்று புகழப்படுகிறார். அவர் மீது ''காதல்'' இலக்கியம் பாடப்பட்டுள்ளது.

சீர்மேவு பைந்துளப மார்பனே சீதரா
புனிதமிகு லட்சுமிமணாளா
பொன்கருட வாகனா சங்குசக் ராயுதா
பூதலம் தன்னில்மூவர்

பார்மேவு சம்புசிவன் மைத்துணா கர்த்தனே
பாருலகு அளந்தராமா
பால்வண்ண னானவெங் கடேசு பரன்அடிமை
பகரும்விண் ணப்பமதுகேள்

கார்மேவு சோலைசூழ் குறுப்புநன் னாடனே
கனமான சேரகுலனே
காசினி மதிக்கவரு கொடுமணல் பதியரசு
கதித்துவளர் அக்னீசுவரர்

தார்மேவு காண்டீப னாகவரு பொன்னையன்
கனதுங்க அகளங்கனே
தேகசுக ரட்சகன் யோகமுடன் வாழ்கவே
அருள்செய்திருப் பதிவாசனே.

178. வாழிய சின்னய்யன்

ஆந்தை குலத்தைச் சேர்ந்த சின்னய்யன் என்பவரைப் புலவர் வாழ்த்திப் பாடிய பாடல். அவர் தந்தை பெயர் நாச்சிமுத்து, தெய்வங்கள் எல்லாம் சின்னய்யனைக் காக்க வேண்டும் என்று புலவர் வேண்டுகிறார்.

செப்பரிய சதகோடி வேதங்கள் தேடரிய
திசைமுகத்து அயனும்மாலும்
சிங்கவா கினிசத்ரு சங்காரி பெரியம்மை
தேவிசின் னம்மைஉமையும்

அப்பணி சடையப்பர் மிக்ககுல மாணிக்கர்
　　ஆதிகுங் குமவல்லியும்
அம்புயச் சோபணமும் கூறியே என்றென்றும்
　　அருள்தந்து உமைக்காத்திட

நற்புகழ் மடந்தையர்கள் வங்கிஷம் ஆந்தைகுலம்
　　நலம்பெற உதித்தசதுரன்
நாச்சிமக ராசனருள் ராச்சிய யோககண
　　நன்னய குணாநிதியெனும்

தர்க்குதரு வுக்குநிகர் சின்னய மன்னவன்
　　கொடைக்குக் கர்ணன்எனவே
தலையென்று காசினியில் பதினாறும் பெற்றுக்
　　கருத்துடன் மிகவாழியே.

179. கீரனூர் தேவண பூபதி

கீரனூரில் ஆதி குலத் தேவண கவுண்டர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் புலவர்கட்கு வரையாது வழங்கும் வள்ளலாக வாழ்ந்துள்ளார். அவரிடம் பரிசு பெற்ற புலவர் ஒருவர் அவர் நெடுங்காலம் வாழ கீரனூர்த் தெய்வங்கள் எல்லாம் காக்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

கங்கைமதி புனைகின்ற ஆதீசர் தன்னை
　　கவுரிஅகி லாண்டஉமையை
கரியமால் வீரநா ராயண முராரியை
　　கமலவா சுனச்செல்வியை

கொங்குலகில் மிக்கான கீரனூர் ஆதிகுலக்
　　குருசிலை தனுமாரனை
குருராயன் மலைய கொடுமுடிப் பண்டிதர்
　　கொடுத்தவெண் ணீறுபுனையும

துங்கவே ளாளர்செயம் உயர்ஆதி செல்வனை
தோன்றலைச் சாந்தகுணனை
தோறாத மணியத் தேவண பூபதியை
சுகம்பெறக் காக்கவென்றே.

180. தரும வேளாளர்

கொடுமணல் காணியாளர் பாண்டியன் குலத்தார் பற்றிய பாடல்.

அக்கினீசுபரன், வீரநாராயணப் பெருமாள், அகத்தூர் அம்மன், தங்கம்மன், மதுரகாளியம்மன், முத்தாலம்மன், பட்டத்தலைச்சியம்மன், இராவுத்தமார், மாரியம்மன், விநாயகர், இராமர் முதலிய கொடுமணல் தெய்வங்கள் அனைவரும் அருள்புரிந்து காக்கப் பாண்டியன் குலத்தார் கொடுமணலில் சிறப்பாக வாழ்கின்றனர்.

சீர்மருவு கங்கைபுனை அக்கினீசு பரக்கடவுள்
சேர்வீர நாராயணன்
செல்வியுமை அகத்தூர் ஆயிமக மாயியும்
திருவுற்ற தங்கம்மனும்

பார்மருவு மாமதுரை காளியுடன் முத்தாலை
பட்டத் தலைச்சியுமையும்
பண்புதிகழ் ராவுத்த மாருடன் பொன்மாரி
பரிவான கணபதியுடன்

ஏர்மருவு ராமரும் முதலான கடவுளர்கள்
கிருபையால் வாழ்த்தநாளும்
எழிலான கொடுமணலில் இனிமையது பொருந்தவே
ஏற்றசெங் கோல்நடாத்தும்

தார்மருவு குவளைமலர் புனைபாண்டிய குலத்தினில்
தருமவே ளாளமன்னர்
தரணிதனில் நீடூழி காலம்இனி தாகவே
தழைத்துமிக வாழ்கநன்றே.

181. சேர குலத்தார் சிறக்கும் கொடுமணல்

கொற்றனூர், முத்தூர், கோனூர், கந்தம்பாளையம், சித்தமுந்தூர், நீலம்பூர், கொடுமணல், மணவாடி, வடுகப்பட்டி ஆகியன சேரன் குலத்தார் காணியூர்கள் ஆகும். கொடுமணல் சேர குலத்தாரின் மிகச் சிறப்பான காணியூர் ஆகும். கொடுமணலில் சேரன் குலத்தார் ஆட்சி செய்ததாகப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. கொடுமணல் சேர குலத்தாரைச் சிறப்பிக்கும் ஒரு பாடல். கொடுமணல் தெய்வங்கள் எல்லாம் கூறப்பட்டுள்ளன.

கார்கொண்ட மேனிதிகழ் மாயனும் போதனும்
காணரிய அக்னீசுவரர்
கரியமால் வீரநா ராயணர் முகுந்தனும்
கமலம்ஈன் பூமங்கையும்
மார்கொண்ட தனவல்லி தங்கம்மன் அத்தனூர்
மகமாயி தம்பிராட்டி
மதிவதன செல்லாண்டி அம்மனுடன் முத்தாலை
மாமதுர காளிஉமையும்
ஏர்கொண்ட ராவுத்தர் பட்டத் தலைச்சியுடன்
இனிதான பொன்மாரியும்
ஏரம்ப மூர்த்திமுதல் உண்டான தெய்வங்கள்
இன்பமிகு காட்சியதனால்
தேர்கொண்ட வீதிதிகழ் கொடுமணல் பதியரசு
சேரர்குல கோத்திரத்தில்
தீபம்என வருகின்ற காராள மன்னவர்கள்
செழித்துமிக வாழிநன்றே.

182. மூலனூர் சேரிலான் குலச் சிறப்பு

தென்கரை நாட்டு மூலனூர்க் காணியாளர்களில் சேரிலான் குலத்தினர் ஒருவர். சேரிலான் குலத்தார் விசயநகரில் சிறப்பிக்கப்

பட்டவர்கள். வேலூரில் அரசரின் கிடாயைக் காது அறுத்தவர்கள். பல உரிமை பெற்றவர்கள். வாணநல்லூர் உரிமையுடையவர்கள். அண்ட நாட்டிலும் உரிமையுடையவர்கள்.

இராசாதி ராசமது வாணராயர் சபையினில்
நலமுற்ற விசயநகரில்
ராயவே லூர்தனில் கைக்கிடாய்ச் செவிதனை
நானென்று செவியறுத்து

கூசாம லேபொன் சரப்பணி பிடுங்கியே
கோசகன கண்மணியே
கூர்கதுமை நல்கியே முப்பேறு பிப்பேறு
கொடுவந்த மகராசனே

தேசாதி தேசபதி கறுத்தநல் லூரனே
தென்மூல னூரதிபனே
சேரிலான் குலதிலக சூரியதே வேந்திரனே
செல்வக் குபேரநிதியே

ஆசார வர்பகன் உயர்தீற்ற நாயகன்
அதிகபுகழ் வாணநல்லூர்
அண்டநா டுடன்புரவு தென்கரசை நாடனே
அடையலர் பணிசிங்கமே!

183. எழுமாதைப் பொன்னையன்

''எழுமாதை'' என்பது எழுமாத்தூர். மேல்கரைப் பூந்துறை நாட்டின் நான்காம் தலைநகர். ''ஏழ்மாதர் போற்றும் எழுமாத்தூர்'' என்பர். அங்குள்ள மலையின் பெயர் 'கனககிரி' - பொன்மலை. அங்கு ''ஏழு மாற்று'' உடைய பொன் கிடைக்கும் என்பர். 10½ மாற்று உடையதே சிறந்த பொன்.

எழுமாத்தூர் காணியாளர்கள் கொங்கு வேளாளர்களில் 'பனங்காடை குலத்தினர்'. பனங்காடை குலத்தைச் சேர்ந்த முத்துப்

பொன்னையன் என்பவரை இப்பாடல் புகழ்கிறது. அவர் 'மன்னர்' 'வேந்தர்' என்று புகழப்படுகிறார். அவர் எழுமாத்தூர்த் தலைவர். இரவலர் அவரைப் பரிசில் வேண்டி அணுகுகின்றனர். அவர் பெரும் புகழ் பெற்றவர். கற்றறிந்த புலவர்கட்கு உதவி செய்பவர் என்று பாடல் புகழ்கிறது.

எழுமாதை நகர்க்கதிபா இரவலர்சேர் பனங்காடை
வழுவாத கீர்த்திபெற்ற மன்னா - பழுதில்லா
வித்வசனர்க் கேஉதவும் வேந்தனே கீர்த்திபெற்ற
முத்துப்பொன் னையவேள் முகம்.

184. பயிர குலச் சுப்பராயன்

இவர் பயிரகுலம் என்பதால் பழையகோட்டைச் சிறப்பு இவருக்குக் கூறப்பட்டுள்ளது.

பரிதிமதி சூழ்புவன மதில்கொங்கிலேஇரு
பத்துநால் நாட்டில் மேலென்பது
பூந்துறை நாட்டினில் வெள்ளோடை யாதிபன்
பயிர கோத்திர விலாசன்

பரமனுக்கு இரவில்முளை அன்னம் பகிர்ந்துஅப்
பசிதீர்த்த இளையான்குடிப்
பதிமா றனுக்குநிகர் போகதே வேந்திரன்
பரிக்கு நகுலன் இணையானவன்

பாவாணர் கையில் சவுக்கடி பொறுத்திட்ட
பரிவுசர்க் கரைமன்றாடி
பட்டமது பெற்றவன் காசிவிசு வேசரின்
பரிவுகொள் விசாலாட்சிதன்

பட்டமும் பெற்றிட்ட விசுவநாதன் வங்கிஷ
பரிவாளன் முத்துவேலப்
பன்தான் அருளிய பழனிமலை சுதாகரன்
பரிவுசுப்ப ராயமாலே.

185. காவிரியைக் கொங்கில் ஏற்றியவர்

கொங்கு நாட்டில் காவிரி ஓடினாலும் அதனால் எப்பயனும் இல்லை. முதன் முதலில் பரமத்தி பாளையக்காரர் அல்லாள இளையா நாயக்கர் சேடர்பாளையம் அருகே காவிரி நீர் கொங்கு மண்டலத்தில் பாயும் வண்ணம் ராஜவாய்க்கால் மூலம் பாசனம் பெறச் செய்தார்.

மூவருக்கும் அகத்தியமா முனிவருக்கும் அரசிருந்த
முன்னையோர்க்கும்
தேவருக்கும் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித்
திறைகொண்டாயே

பூவிருக்கும் உரமாயன் கடலடைத்தான் அவன்வேடம்
புனைந்தவாறோ
யாவருக்கும் இளையானே அல்லாளத் திருமலையா
ஈகையோனே.

186. என்றும் சுகமாய் இரு

மேல்கரை அரையநாட்டின் தலைநகர் தலையநல்லூர். இப்போது சிவகிரி என்று அழைக்கப்படுகிறது. அவ்வூர்க் காணியாளர்கள் கொங்கு வேளாளரில் கூறைகுலத்தாரும், விலையன் குலத்தாரும் ஆவர். கூறைகுல குமார சின்னய்ய கவுண்டர், அவர் மகன் சின்னய்ய கவுண்டர் ஆகியோரை இப்பாடல் புகழ்கிறது. அவர்கள் மேல்கரை அரைய நாட்டின் அதிபர்கள். என்றும் அவர்கள் புகழ் நிலைக்கப் புலவர் வாழ்த்துகிறார்.

வாகாதென் கூறைகுல மார்க்கண்ட னேபுகழ்சேர்
நேகா குமாரச்சின் னேந்திரனே - மாகநகர்
குன்றும் கடலும் குலகிரிகள் உள்ளமட்டும்
என்றும் சுகமாய் இரு.

கோடார்பூந் தென்தலைசைக் கூறைகுல மேலரைய
நாடாளும் வேந்தன்எனும் நாகரிகா - தாடாண்மை
தென்னவன்கு மாரச்சின் னய்யவேள் பெற்றதுரை
சின்னய பாலா செயம்.

187. கண்ணர் குல மேரு

மோரூர், காங்கயம் காணி உரிமையுடைய கண்ணர் குலத் தலைவர் ஒருவருக்குப் பாண்டியன் சிறப்புச் செய்து மதுரையில் முடி சூட்டினான். மோரூர் கண்ணர் குலத் தலைவர்கள் ''காங்கேயர்'' பட்டம் பெற்றது காங்கேயம் காணி பெற்றதால் என்பது இத் தனிப்பாடல் மூலம் தெரிகிறது.

மதுரபுரி கூடலில் சொக்கர்அங் கயற்கண்ணி
மலைமகள்தன் மீனாட்சியும்
வைகைநதி சொக்கயம் பொதியமா மலைகளும்
வாருதி கயல்மணிகளும்

சதுரகிரி காங்கயம் ஆறுகால் பீடமும்
மிக்கசங் கப்பலகையும்
தனுவிசையு வேப்பமலர் மீனத் துவசமும்
சாமத்துரோக மணிவெண்டயம்

அதுரகையி னால்மக மேருசெண் டால்எறிந்து
ஆயிரத் துரோகமணியும்
அணிரத்ன மணிமகுடம் பாண்டியன் கிரீடமும்
அவர்கையால் முடிபொறுத்தாய்

கதிரசம் புகழ்கன்னி மோரூரு காங்கயம்
கண்ணர்குல மதிவேந்தனே
கருணைபுரி திலகம்என கனகமுடி கவித்திட்ட
கண்ணர்குல மேருநீயே.

188. பொன் கவுண்டய்யன் பட்டாபிசேகம்

எழுமாத்தூர்ப் பனங்காடை குல முத்துக் காங்கய கவுண்டர் மகன் பொன் கவுண்டய்ய கவுண்டருக்குத் திருமுருகன்பூண்டி முருகீசர் சன்னதியில் நாட்டுத் தலைவராக முடி சூட்டினர். சேவூர், செவளம்பூண்டி அரசு அலுவலர்கள் இந்நிகழ்ச்சியை நடத்தினர்.

வளமைதிகழ் கலியுக சகரநா லாயிரத்து
வழங்குமுப்பத் தைந்துமேல்
வருகின்ற குரோதன ஆண்டுதை மாசமும்
வடிதமிழ் விளங்கவந்த
அழகுதிகழ் ஒன்பதாம் திகதிரே வதிவெள்ளி
அன்புற்ற சுபதினத்தில்
ஆதிகன் எழுமாதை வளர்பனங் காடைகுலன்
அருள்முத்துக் காங்கயன்சொல்
செழுமலர்ப் புயனான பொன்கவுண் டய்யனுக்கு
செம்பொன்முடி சூட்டுநாளில்
சேவையம் பதிஅரசு சோழரா சேந்திரன்
செவளையில்க் குமாரசாமி
நளினமிகு கொங்காறு நாட்டினில் கந்தபுரி
நாதர்முரு கீசர்முன்பாய்
நாட்டிலுயர் சிவசுப்பிர மண்ணியகுரு தேசிகன்
நாட்டிவைத் தருள்பட்டமே.

189. இரகுநாத சிங்கன் வெற்றி

கலியுக சகாப்தம் அறுநூறாம் ஆண்டு ஆங்கிரச வருடம் மார்கழி மாதம் 5 ஆம் தேதி பரணி நட்சத்திரத்தன்று சோழ மன்னனுடைய செங்கோல் ஆட்சி நடைபெறும் திசையிலிருந்து புறப்பட்டு செங்குவளை மாலையணிந்த வேளாளராகிய ஈஞ்ச குல ரகுநாத

சிங்கக் கவுண்டர் வடதிசைக் கொங்கு நாட்டில் பகைவரை வென்று வெற்றித் தோரணம் கட்டினார். (கலியுக ஆண்டு தவறு).

சகம்கலி சகாப்தம் அறுநூற்றுச் செல்கின்ற
ஆங்கிரச மார்கழி ஐந்தாம் தேதியில்
திகழ்பரணி நட்சத்திரம் உற்றசுப நன்னாளில்
திறல்கொண்ட மாதண்டன் செம்பியன் செங்கோன்மை
தருமதன் னுடையதிசை நீங்கியே வடதிசை
குவளையணி வேளாளர் கொங்கினில் நண்ணவே
செகமது மதிக்கவே தோரணம் கட்டிவென்றார்
ஈஞ்சகுல ரகுநாத சிங்கய்ய மகிபளே.

190. இரகுநாத சிங்கன் பெற்ற காணியூர்கள்

சோழனும், கொத்துமுடிப் பாண்டியனும், சேரனும் கொங்கு நாட்டில் குடியேறிய நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் வேளாளர் களையும் பார்த்து ''கொங்கு 24 நாட்டிலும் காவிலுவர், மாவிலுவர், பூவிலுவர், வேடர், வேட்டுவர் என்னும் வேட்டுவர் பாளையங்களில் எந்தெந்த ஊரை வெல்லுகிறீர்களோ அவ்வூர்களை உங்களுக்குக் காணியுரிமையுடைய ஊராக ஆக்குவோம்'' என்று கூறினர். ஈஞ்ச குலத் தலைவர் இரகுநாதசிங்கக் கவுண்டர் திருக்காம்புலியூரில் தோரணம் கட்டி, மதுக்கரைச் செல்லாண்டியம்மனை வணங்கிப் போரிட்டு 88 ஊர்களைக் கைப்பற்றினார். மூவேந்தரும் மதுக்கரைச் செல்லாண்டியம்மன் சன்னதியில் இரகுநாத சிங்கக் கவுண்டருக்கு 88 ஊர்களைக் காணியுரிமையுடையதாக்கிச் செப்பேடு வெட்டித் தந்தனர் என்று செப்பேடு கூறுகிறது.

திருமருவு சேரனும் சோழனும் வழுதிகள்த்
திறமையுள முனைவெற்றியில்
சேரலரை வெட்டிச் செயங்கொண்டு ஈஞ்சகுலன்
தீரரகு நாதசிங்கன்

பெருமையுடை யான்நமது தளபதி எனும்பெயர்கள்
பிரபலித் திடமூவரும்
பேணியே தண்டிகை சுருட்டிதீ வட்டியும்
பிறங்குசா மரைக்குடைகளும்

அருளுடன் மதுக்கரைச் செல்லாண்டி யம்மன்முன்
அனைவோரும் அறியவேதான்
அதிகவிரு துகள்தந்து கொங்குமண் டலம்தனில்
ஆதிக்க மேபுரிந்தாய்

வரிசையுள கலியாயி ரத்திஎண் ணூத்தியேழ்
மேல்வரும் ஈரேழாண்டினில்
மருவுநந் தனவருடம் எண்பத்தெட் டூர்க்காணி
வளம்பெறத் தந்தனர்களே.

191. சர்க்கரை பெற்ற புகழ்

புலவர் ஒருவர் பண்ணை குல ஆயியண கவுண்டர் மகன் சர்க்கரைக் கவுண்டர் என்பவரிடம் பரிசு பெற்றார். புலவர் அவர் மீது அழகிய பாடல் ஒன்றைப் பாடினார். வேளாளர் பெருமைகளை யெல்லாம் அவர் மீது ஏற்றிக் கூறுகிறார்.

திருவழுந் தூரில்வரு கம்பநா டர்க்குஅடிமை
செய்கின்ற வேளாளன்நீ
சிவனுடைய பசியகல முளைவாரி அனமுதவி
செய்கின்ற வேளாளன்நீ

கருணைகொண் டரவின்மணி வாணர்க்கு உதவியே
கதிமைபெறு வேளாளன்நீ
காவலன் மதிக்கஉயர் ஆடைகீ றிச்சிலந்தி
காண்பிக்கும் வேளாளன்நீ

வருசைபெறு தொண்ணூத்தி ஆறுகீர்த் திக்கினிய
மன்னனிவர் கையினாலே

வடிதமிழ்க்கு உதவிசெய் கின்றதோர் கொடையுதவு
வளர்பண்ணை குலதிலகனே
தருவைநிகர் கர்னனான ஆயியண வசீரான்
தந்தசந் தானமணியே
தனபதிக ளாகவரும் சடையன்மகி பாலனே
சர்க்கரை விற்பன்னனே!

192. கொடுமணல் சிவமலை பெருமை

பாண்டியன் குல காளிகவுண்டர் மகன் சேனாபதிக் கவுண்டர். சேனாபதிக்கவுண்டர் தம்பி சிவமலைக்கவுண்டர் கொடுமணல், பட்டாலி ஆகிய ஊர்களின் காணியாளராகவும், நிர்வாகியாகவும் இருந்தார். அவர்பால் பரிசு பெற்ற ஒரு புலவர் அவரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

பாண்டியருடைய வேப்பமாலை, மீன் கொடிகள் பெற்றாலும் கொங்கு வேளாளர் ஆன பாண்டியன் குலத்தலைவர்கள் வேளாளர்களின் மேழிக் கொடியேற்றிக் குவளை மாலை அணிந்தனர் என்பது பாடல் மூலம் தெரிகிறது.

சீருற்ற சிவமலையில் முருகர்தன் கிருபையால்
செகராசர் மெச்சுதயவும்
செய்யகன யோகமும் புத்திரசந் தானமும்
செந்தமிழ் உணர்ந்தஅறிவும்

தாருற்ற குவளைமலர் மாலிகா பரணமும்
தாய்தீங்கை உதவுவரமும்
சற்சனர் விலாசமும் மேன்மையும் வீரமும்
சாற்றுதற்கு ஒருவர்உளரோ

மேருற்ற பொன்மேழி விருதுடைய சோமனே
மேலான பாண்டியகுலனே
மேதினியில் வருகின்ற கொடுமணல் பட்டாலி
விளங்கிய விசுவாசனே

வாருற்ற தனமாதர் வேள்காளி ராயன்அருள்
மைந்தனாம் சேனாபதி
மன்னவர் துணைவனாம் சிவமலை மகீபனே
வனசலட் சுமிவாசனே!

193. கவி எல்லாம் காளியண்ணனுக்கே!

மேல்கரை அரைய நாட்டுக் கூறை குலத் தலைவர் தலைய நல்லூர் செங்காளியப்ப கவுண்டர் மகன் காளியண்ண கவுண்டரைப் பார்த்த புலவர் "செங்காளியப்ப கவுண்டர் மகன் காளியப்ப கவுண்டரே அரைய நாட்டுத் தலைவரே தூய்மையானவரே கூறைகுலத் தலைவரே எப்பொழுதும் எங்கும் உன்னையே பாடுவேன், உன் புகழையே பேசுவேன். இவற்றைத் தவிரப் புகழ்வதற்கு வேறொன்று மில்லை" என்றார்.

செங்காளி காளியண்ணா சிற்றரைய நாட்டதிபா
துங்காநல் கூறைகுல சோமனே - எங்கெங்கும்
உன்னையே பாடுவேன் உன்புகழை ஓதிடுவேன்
பின்னைவே றேது புகழ்.

194. புரவலரை உயர்த்தும் புலவர்கள்!

பல்லவராயர் மரபினர் திருப்பூர் மாவட்டம், காங்கயம் பட்டக் காரர்கள். ஒருமுறை காங்கயம் பட்டக்காரர் சிதம்பரப் பல்லவராயர் ஒரு புலவரிடம் 'கவிராயர்கள்' எல்லாம் எங்கள் முன்னோர்கள் கொடுத்த கொடையால் தான் உயிர் பிழைத்திருக்கிறார்கள்' என்றார்.

அதற்குப் புலவர் பின்வருமாறு பதில் உரைத்தார். "பல்லவராயரே! உங்கள் முன்னோர் கொடுத்த கொடைப் பொருள் இப்போது எங்கே இருக்கிறது? என்பதை உங்களால் காட்ட முடியுமா? எங்கள் முன்னோராகிய புலவர்கள் பாடிய பாடலாகிய தமிழால்தான் நீங்கள்

எல்லாம் இருக்கின்றீர்கள். அத்தமிழ் இல்லாவிடில் நீங்கள் தாழ்வடை வீர்கள். உங்கள் உயர்வு புலவர்கள் அளித்த பாடல்களாகிய பிச்சை யாகும். இதை நீங்கள் அறிய வேண்டும்'' என்பது புலவர் கூற்றாகும்.

எங்கள்பெரி யோர்கள்தரப் பிழைத்தார் கவிராயர்
என்றீரேயன்று
உங்கள் பெரியோர்கள் தந்த பொருள்காட்ட வல்லீரோ
உண்மையாக
எங்கள் பெரியோர்கள்தரு தமிழ்கூறி நிமிர்கின்றீர்
இல்லையேல் தாழ்வீர்
உங்கள் உயர்வு எங்கள் பிச்சைஎன் றறிவீர் பல்லவப்பேர்
உடையகோவே.

195. சூரிய காங்கேயன் சிறப்பு

கொங்குத் தலைய நாட்டுக் கன்னிவாடியிலிருந்து குடி பெயர்ந்து வந்து மோரூரில் குடியேறிய கொங்கு வேளாளர் கண்ண குலத்தில் உதித்தவர். சூரிய காங்கேயர். ஆறகளூர் வாணனைக் கைது செய்து சுந்தர பாண்டியன் முன் கொண்டு வந்து விட்ட பெருமைக் குரியவர் சூரிய காங்கேயர். மோரூரை ஆட்சி செய்த தலைவர், பாண்டியனால் சிறப்பிக்கப்பட்டு முடி சூடியவர், எல்லோராலும் புகழப்பட்டவர் சூரிய காங்கேயர்.

மிண்டாறை வாணனைமுன் வெட்டாமல் பாண்டியன்நேர்
கொண்டுவந்து நிற்கவிட்ட கொற்றவனும் நீயலையோ
தெண்டிரைசேர் மோரூரில் தென்னன்மகு டாசலனே
மண்டலிகர் தேர்ந்துமெச்ச வாழ்சூரிய காங்கயனே.

196. மோது புகழ் மோரூர்

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் புகழ்மிகு 32 ஊர்கட்கும் தலைமை யான ஊர் மோரூர். மோரூர் வாழ் குடிமக்கள் சிறப்புமிக்கவர்கள்.

அவர்களில் வீரம் மிக்க ஒருவர் சூரிய காங்கேயன். சுந்தர பாண்டியனுக்கு அடங்காமல் இருந்த ஆறகழூர் வாணனை உயிருடன் பிடித்து வந்து பாண்டியன் பாதங்களை வணங்கச் செய்தவர். மோரூர் சூரிய காங்கேயர். மோரூர் காங்கேயர் தக்கை இராமாயணம் பாடுவித்தவர்கள். புலவர்கட்குக் கொடை தப்பாமல் கொடுப்பவர்கள் மோரூர் மக்கள். இதனைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

பூதத் துணைகொண்ட போர்வாணன் மாறன்இரு
பாதத் துணைகாணப் பண்ணினோன் - ஓதுமிசை
ராமா யணங்கேட்டோர் நாவலர்வைப் புப்பொருளாம்
கோமான்வாழ் மோரூர் குடி.

197. புதல்வனை வெட்டிய புகழ்

தாராபுரம் வட்டம் கொற்றனூர்த் தலைவர் பட்டக்காரர் வேணாடுடையார். ஒருமுறை கொற்றனூர்த் தலைவரின் விருப்ப தெய்வமாகிய அப்பிரமேயர் ஆலயத்தில் சிறப்பாகத் தேர்த் திருவிழா நடைபெற்றது. இறைவன் வீற்றிருக்கும் தேர் புறப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி இழுத்தும் தேர் அசையவில்லை. தேர் ஓடி நிறைவு பெற்றால்தான் உணவு உண்ணும் பக்தர்கள் வருந்தினர். என்ன செய்வதென்று எவருக்கும் ஒன்றும் தெரியவில்லை.

அப்போது ஒருவர் மேல் தெய்வ அருள் வந்து 'ஏன் எல்லோரும் தயங்குகிறீர்கள். தேர் நின்றது ஓர் பூதத்தின் செயல். யார் ஒருவர் தன் தலைமகன் ஆண் பிள்ளையைப் பலி கொடுத்தால்தான் தேர் ஓடும்' என்று கூறினார்.

வேணாடுடையார் பலர் நன்மையடைய நான் என் மகனைப் பலி கொடுப்பேன் என்று அவ்வாறே செய்தார். இதை நேரில் கண்ட புலவர் பாடிய பாடல் இது.

நாதன் இரதம் நடவாது செய்கொடிய
பூதம் அகலப் புதல்வனைவி - நோதமுற
வெட்டிப் புகழ்படைத்தான் கொற்றனூர் வேணுடையான்
எட்டுத் திசைமகிழ வே.

198. தரு எனத் தரும் வேணாடுடையார்

ஒரு புலவர் தான் ஏன் கொற்றனூர்த் தலைவர் பட்டக்காரர் வேணாடுடையாரிடம் செல்கிறேன் என்பதற்குப் பின்வரும் காரணத்தைக் கூறுகிறார். அப்பிரமேயர் அருள்புரியும் வேணாடு டையார் தரும சிந்தை உடையவர். தன்னிடம் வருபவர்க்கு கற்பக விருட்சம் போல் வேண்டியனவற்றை வேண்டியவாறு தருவார் என்று பலர் கூறக் கேள்விப்பட்டேன். அதனால் நான் அவரிடம் செல்லுகிறேன். எனக்கும் அவர் அருள் செய்வார்'' என்று அவரிடம் செல்லும் காரணம் கூறுகிறார்.

சேணாடர் போற்றும் சிவனப் பிரமேயர்
தாணாடு கொற்றையூர்த் தருமசிந்தை - வேணுடையான்
தன்னை யடுத்தார்க்குத் தருவான் தருவெனவே
என்னமொழிந் தாரடைந்தேன் இங்கு.

199. வேணாடுடையார் முடி சூடல்

சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் குமார ரத்தின வேணாடு டையார் மறவபாளையம் அப்பிரமேயர் - பெரியநாயகி அருள் பெற்றவர்.

வேணாடர் சார்ந்த பெரிய குலத்தினர் அனைவர்க்கும் பெரும் சிறப்பளிக்கக் கருதிய சோழ மன்னன் பெரியகுல மகளிர் பொன்னூஞ்சல் ஆடவும், பெரியகுல மணமகன் பூந்தேர் ஏறவும் உரிமையளித்ததுடன் பொன் ஊஞ்சலும், தேரும் கொடையாகக் கொடுத்தான். கொங்கு மண்டல சதகம் ஊஞ்சல் பற்றிக் கூறுகிறது.

அமிர்தநிறை கலியுகம் சகார்த்தமது நாலா
யிரத்துத் தொளாயிரத்து
அய்ம்பத்தைந் துக்குமேல் செலாநின்ற பவவருடம்
ஆகுநன் கன்னிமாதம்

சமஸ்தானத் தோர்மெச்ச பதினொன்று தேதிதனில்
வருகதிர் வாரந்தனில்
தக்கபுகழ் ஏகாதசி அவிட்டநட் சத்திரமும்
தான்பெருகு பூர்வபட்சம்

நமதுபவ கரணமும் சுபநாம யோகமும்
நன்மைபெறும் சுபதினத்தில்
நட்பான அப்பிரமர் பெரியநா யகிஅருள்
பெற்றமக ராசனுக்கு

குமுதமலர் அணிமுத்து ரத்தினவே ணாடர்அருள்
குமணனே பெரியகுலனே
கொற்றைநகர் வருகுமார ரத்தினவே ணாடர்க்குக்
கூடிமுடி சூட்டினர்களே.

200. காலிங்கராயன் வியன் புகழ்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு கனகபுரத்தில் நஞ்சய கவுண்டர் மகன் லிங்கய்யன். கொங்கு வேளாளர் சாத்தந்தை குலத்தினர். பாண்டியன் படையில் சேர்ந்து தன் மதி நுட்பத்தாலும், வீரத்தாலும் படிப்படியாக உயர்ந்து வீரபாண்டியன் தளபதியும், அமைச்சரும் ஆனார். வீரபாண்டியன் சார்பில் கொங்கு நாட்டில் நிர்வாகம் செய்தார்.

தான் பிறந்த பூந்துறை நாடு வளம்பெற்று வாழ, பவானியாறு காவிரியோடு சேரும் இடத்திற்கு மேற்கே பவானியாற்றில் தடுப்பணை ஒன்று கட்டி 56½ மைல் நீளம் வாய்க்கால் வெட்டி

சாமை விளையும் இடம் எல்லாம் சம்பா நெல் விளையச் செய்தார். இது செயற்கரிய செயல் ஆகும்.

காலிங்கராயன் இச்செயல் சீதையைச் சிறை மீட்கும் பொருட்டு இராமன் கடலில் சேது அணை கட்டியதற்கும், கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டியதற்கும் ஒப்பான செயல் என்று புலவர் புகழ்ந்து கூறியுள்ளார்.

திரைகொண்ட வாரியை மாலடைத் தான்செழுங் காவிரியை
உரைகொண்ட சோழன்மு னாளடைத் தான்உலகு ஏழறிய
வரைகொண்ட பூந்துறை நன்னாடு வாழஅவ் வானிதனைக்
கரைகொண் டடைத்தவன் வெள்ளோடைச் சாத்தந்தை
காலிங்கனே!

201. வனம் வயல் ஆகும்

காலிங்கராயன் காவிரியும், பவானியும் கூடும் துறை அருகில் பவானியாற்றில் தடுப்பணை கட்டி 56½ மைல் நீளம் வாய்க்கால் வெட்டி பாசனம் பெறச் செய்தார். நீர் மிகுதியால் காலிங்கராயன் வாய்க்கால் பாய்ந்த பின் கழிவுநீர் கூட வனத்தை வயல் ஆக்கும் என்கிறார் புலவர். (இன்று தண்ணீர் மாசுபட்டதால் வயல் வனம் ஆகிறது).

எற்று திரைப்பொன்னி கூடுறு வானி இடைமடங்க
வெற்றி மிகுந்த அதிவீர பாண்டிய வேந்துஅமைச்சன்
கற்ற அறிவினன் காலிங்க ராயன்செய் கால்கழிநீர்
உற்ற வனத்தை உறுவய லாக உயர்த்தியதே.

202. கம்பர் தமிழ்க்கு அடிமை

வெள்ளோடு சாத்தந்தை குலத்தில் கந்தய்ய கவுண்டர் பேரனாகவும், நல்லய்ய கவுண்டர் மகனாகவும் விளங்கியவர் முத்தய்ய

கவுண்டர். அவர் கல்லும் காவிரியும், சந்திரசூரியர் உள்ள மட்டும் நானும் எங்கள் வழி வருபவர்களும் கம்பருக்கு அடிமையாக இருப்போம் என்று அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தார்.

கல்லும் காவிரியும் சந்திராதித்தர் உள்ளமட்டும்
கம்ப நாடன்
சொல்லிய செந்தமிழ்க்கு அடிமைதுரை நாங்கள்என்ற
சோமா பூமேல்
வல்லமைசேர் வெள்ளோடைச் சாத்தந்தை கந்தயவேள்
மைந்தன் கீர்த்தி
நல்லயவேள் ஈன்றெடுத்த முத்தய்ய மகிபதியே
நளின மாலே!.

203. சரவண மன்றாடி முடி சூடினார்

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் கூடிய சபையில் ''நீ வார்த்தை தவறாத சாத்தந்தை குலத்தினன்'' என்று கூறி சரவணனுக்கு முடி சூட்டினர். இவர் வெள்ளோடு காலிங்கராயன் மரபினர். இவருடைய தந்தை திருமலை. ஆவணி பத்தாம் தேதி முடி சூட்டிய நாள்.

திசைபரவு கலியுக சகாத்தநா லாயிரம்
இருநூற் றேழுபத்தில்
சென்றகர வருடம் ஆவணி பத்தினில்
செம்பொன்மா முடிசூட்டியே
மசச்சோழன் இம்முடிப் பாண்டியன் சேரனும்
மன்னர்கள் முன்பாகவே
வார்த்தையது தவறாத சாத்தந்தை நீயென்று
வளர்உலகில் மன்றாடியார்
விசையுற்ற நாகநகர் வெள்ளோடு காங்கயம்
காரைதொழு பாலதொழு

உகாயனூர் மங்கையில் அல்லாள புரமதில்
வேளமனு நீபடைத்தாய்
அசையாத யோகனாம் காலிங்கன் திருமலை
அன்புபெத்தா மகீபன்
ஆமூரு திருமலை சரவண மன்றாடிக்கு
அழகுமுடி சூட்டினாரே.

204. சரவண மன்றாடியார் முடிசூடினார்

கொங்கினில் கலியுகம் சகாத்தநா லாயிரம்
இருநூற்று ஏழுபத்தில்
குலோத்துங்க சோழனும் சேரனும் பாண்டியன்
குலமது வகுக்கும்நாளில்
மங்கைமணி சாத்தந்தை உலகில்மன் றாடிக்கு
வரிசைப்பட் டம்தரித்து
மன்னுகர வருடம் ஆவணி பத்தினில்
வாய்ந்தசெவ் வாய்க்கிழமையில்
கங்கைகுலக் காலிங்க ராயவெள் ளோடு
காங்கயம்விசய மங்கைநகரம்
காரைதொழு பாலதொழு அல்லாள புரமதில்
கடகம்எனும் யானைகட்டி
முன்கையில் சந்தனம் உரைத்ததே வணன்உதவு
முத்துபெத்தா மகீபன்
முனைபெற்ற திருமலை சரவணமன் றாடிக்கு
மூவர்முடி சூட்டினர்களே

என்பதாகும். இவ்விரு பாடல்களிலும் சில காணியூர்கள் கூறப்பட்டுள்ளன.

மேற்கண்ட பாடல்களில் சாத்தந்தை குலத் தலைவர்கட்கு 'மன்றாடி' பட்டம் அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சேர

மன்னன் வேண்டிக் கொள்ள உறையூர்ச் சோழன் ஓதாள குலம் பெரிய பெருமாளை வேட்டுவரை அடக்குதற்பொருட்டுப் பொங்கலூர் நாட்டுக்கு அனுப்பினான். பொன்னர், சாத்தந்தை, செம்பன், குழாயர் குலத்தினரும் படையுடன் துணைக்கு வந்தனர். சாத்தந்தை குலத்தினர் வெற்றி பெற்று உகாயனூர்க் காணி பெற்றதுடன் 'மன்றாடியார்' பட்டம் பெற்றனர். பின்னர் வழிவந்த பலரும் அப்பட்டத்தைத் தங்கள் பெயருடன் இணைத்துக் கொண்டனர்.

205. இராம கதை பாடுவித்த காங்கேயர்

கம்பர் இயற்றிய இராமாயணம்போல் தக்கை இசையில் பாடத்தக்க இசை இராமாயணம் கொங்கு நாட்டில்தான் தோன்றியது. 'தக்கை இராமாயணம்' என்ற அப்பெரும் காவியத்தை இயற்றியவர் பக்தர் பாடி எம்பெருமான் கவிராயர். ஆதரித்துப் பாடுவித்தவர் மோரூர்க் கண்ணன் குல அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் என்னும் வள்ளல்.

கம்பரை ஆதரித்து இராமாயணம் பாடச் செய்த, சடையப்ப வள்ளலுக்கும் அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயருக்கும் உள்ள ஒற்றுமையை இப்பாடல் விளக்குகிறது.

ஒற்றுமை

சடையப்ப வள்ளல்	**காங்கேயர்**
காராளர்	வேளாளர்
சரராமன்	ஆகவராமன்
கண்ணன் (பெயர்)	கண்ணன் குலம்
வெண்ணெய் நல்லூர்	மோரூர்

அவனும் சடையன் காராளன்
அவன்தன் ஊரும் வெண்ணெய்நல்லூர்
இவனும் நல்லதம்பிக் காங்கேயன்
இவன்தன் ஊரும் மோரூராம்

அவனும் கண்ணன் சரராமன்
ஆகவ ராமன் இவனும் கண்ணன்
இவனும் அவனைப்போல் உலகுதனில்
இராம கதைதனைப் பாடுவித்தான்.

206. 'பாம்பணன்' எனப் பெயரிட்ட தாயார்

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம் கொளாநல்லி காணியாளர் கொங்கு வேளாளர் கண்ணன் குலத்தினர். கவுண்டம்பாளையம் முத்துசாமிக் கவுண்டர் குடும்பத்தினர். இவர்கள் வழிபடும் கொளாநல்லி சிவாலய இறைவன் பெயர் பாம்பலங்காரர். இவர்கள் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு மோரூரோடு தொடர்புடையவர்கள். மோரூரிலும் சிவாலய இறைவன் பெயர் பாம்பலங்காரர்தான்.

அதனால் இவர்கள் குடும்பத்தில் 'ஆண் குழந்தைகட்குப் பாம்பண்ணன்' என்று பெயர் வைப்பது வழக்கம். முத்துசாமிக் கவுண்டர் மனைவி முத்தம்மாள் தன் மகனுக்குப் பாம்பண்ணன் என்று பெயர் வைத்தார். இந்தச் செய்தியை பாம்பண்ண கவுண்டரைப் பாடிப் பரிசு பெற வந்த பவானி பாலபாரதி அவரிடம் கூறுவதாக இப்பாடல் உள்ளது.

உமாதேவி தன் இளைய பிள்ளைக்கு 'வடிவேலன்' என்று பெயரிட்டது போல் முத்தம்மாள் மகனுக்குப் பாம்பண்ணன் என்று பெயரிட்டாராம்.

உற்றதொரு புலவர்க்கோர் உதவிசெய்தான் மகன்எனஅவ்
உமையாள் மெச்சி
வெற்றிவடி வேலனென்று நாமமிட்டாள் இத்தகைமை
விளங்கப் பூவில்
கற்றவர்கள் மெச்சவளர் முத்தம்மாள் இனியமனவும்
கருணை கூர்ந்து
பெற்றதாய் கையிலெடுத்துப் பாம்பணனென் றேஉனக்குப்
பேரிட்டாளே.

207. அடியார்க்கு நல்லார் - சிலப்பதிகார உரை

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க்கும் உரியதாக சேர இளவரசர் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினார். அந்தத் தனிப்பெரும் காவியத்திற்கு கற்கும் எல்லோரும் அறியும்படி விரிவாகப் பேருரை செய்தவர் அடியார்க்கு நல்லார். அவர் கைமாறு கருதாமல் பெய்யும் மேகத்திற்கும், நினைத்ததையெல்லாம் தரும் கற்பகத் தருவிற்கும் ஒப்பானவர். அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலம் நிரம்பை என்ற ஊரின் தலைவரும் ஆவார்.

அடியார்க்கு நல்லார் ''மோரூர் பொப்பண்ண காங்கேயன் உபசரித்து உணவிட்டு ஆதரித்த அரிய செயலால்தான் சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியத்திற்கு உரை இயற்ற முடிந்தது'' என்கிறார். பஞ்ச காலத்தில் வள்ளலின் ஆதரவை நினைவூட்டுகிறார்.

ஓருந் தமிழொரு மூன்றும் உலகின் புறவகுத்துச்
சேரன் தெரித்த சிலப்பதி காரத் தனித்தமிழ்க்கு
ஆருந் தெரிய விரித்துரைத் தானடி யார்க்குநல்லான்
காரும் தருவும் அனையான் நிரம்பையர் காவலனே!

208. அடியார்க்கு நல்லார் - சிலப்பதிகார உரை

காற்றைப் பிடித்துக் கடத்தில் அடைத்துக் கடியபெரும்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமெக் காலமெனும்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர் கோன்அளித்த
சோற்றுப் பெருக்கல்ல வோதமிழ் மூன்றுரை செய்வித்ததே.

209. புலவருக்கு சோதனை

ஈரோடு மாவட்டம் பூந்துறைக் காணியாளர்களான காடைகுலப் பெருமக்கள் தங்கள் ஊருக்குத் தல புராணம் பாட நல்ல புலவர்களைத் தேடினர். அதன்பொருட்டு வாரணவாசிக் கவுண்டர் உட்படப் பலர்

திருச்செங்கோட்டு மண்டகப் பாளையம் சென்றனர். அங்கு வாழ்ந்த காளியண்ணக் கவிராயரிடம் பூந்துறைப் புராணம் பாடும் வாய்ப்பை நல்க எண்ணினர். பூந்துறை மக்களும் கல்வியறிவு, புலமை மிக்கவர்கள்தான். வாரணவாசிக் கவுண்டர் காளியண்ணக் கவிராயரின் புலமையைச் சோதிக்க விரும்பி, 'புலவரே! காளி என்று தொடங்கி கூழி என்று முடியும் வண்ணம் ஒரு வெண்பா பாடுக' என்றார். அப்போது காளியண்ணக் கவிராயர் உடனே கூறிய பாடல் இது.

காளி முரன்று கறங்கிவளர் பூந்துறைசை
வாளபின் வாரண வாசிமன்னன் - கேள்வியினால்
பொன்னையூ ரானேன் பொறாமயலுக் கென்செய்வேன்
என்னுள்ளம் வவ்வியகூ ழீ.

210. தாயார் மெச்சிய தனயன்

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், கவுண்டம்பாளையம் முத்தம்மாள் பெண்களில் சிறந்தவர், முத்துசாமிக் கவுண்டரின் மனைவி. ஈகையில் சிறந்தவர், திருமகள் இணையானவர் என்று பலவாறு முத்தம்மாளைப் புகழ்ந்த பவானி பாலபாரதி அவரது மனம் மெச்சும் மகன் பாம்பண்ணன் என்றார். பின் இப்பாம்பண்ணன் மீது பாலபாரதி பாம்பண்ணகவுண்டன் குறவஞ்சி இலக்கியமும் பாடினார். பாலபாரதி பாடிய பாடல்.

மாதி லக்குமி உத்தமி பத்தினி
வனச மாமலர் ஆனை நேத்திரக்
காதி லக்கமெ ழுத்துமு ணர்ந்துநல்
கருத்தில் அன்புத யாளமு மேவைத்தே
ஏதி லக்கமென் றேசொலி வாணருக்கு
எடுத்து மாநிதி வேண்டியது ஈந்திடு
மாதி லக்கணம் ஓங்கிய முத்தம்மாள்
மனது மெச்சுநன் மைந்தபாம் பண்ணனே.

211. பாவாணர் புகல வந்தேன்

மேல்கரைப் பூந்துறை நாட்டின் மூன்றாவது தலைநகர் நசியனூர். நசையநகர் எனச் சிறப்பிக்கப்பட்ட ஊர். நசியனூர்க் காணியாளர் களில் ஒருவராகிய கொங்கு வேளாளரில் பூச்சந்தைகுல குமரசாமிக் கவுண்டர் மகன் அத்தப்ப கவுண்டரிடம் பரிசில் பெற வந்த ஒரு புலவர் பாடிய பாடல்

'புலவர்கள் உம்மைப் பற்றிக் கூறியதால் நான் உம்மிடம் வந்தேன். ஆகவே கொடை கொடுப்பாயாக. உம்மை நம்பி வந்துள்ளேன் என்னை ஆதரிப்பாயாக'

என்று புலவர் கூறியுள்ளார்.

செந்தமிழ்ப் பாவாணர் தான்புகல வந்தேன்நீ
அதிக தியாகநீடும்
அய்ந்தரு வாம்என்று உனைநம்பி வந்தேன்
எந்தனை ஆதரிப்பாய்
நந்துலவு நசையநகர் பூச்சந்தை குலத்துதித்த
நாகரீகன்
மந்திரத் திண்புயன் குமரசாமி மதலை அத்தப்பா
அதிக வரிசையோனே.

212. புலிப்புதர் பாய்ந்த புரவலன்

வடகரை நாட்டுப் பாரியூரில் வடகரைக் கவுண்டர் என்ற நரம்பர் சமூகத்தில் கணவாள குலம் சார்ந்த செட்டி பிள்ளையப்பன் என்பவர் ஒருவர் இருந்தார். ஏழைகட்கும், இரவலர்க்கும், புலவர்கட்கும் கொடுத்துக் கொடுத்து செல்வந்தரான அவர் ஏழையாகி விட்டார்.

இனி யாரேனும் வந்தால் இல்லை என்று சொல்லப் பயப்பட்டு புலிப்புதரில் வீழ்ந்து உயிர் துறக்கப் பாய்ந்தார். அங்கு கொள்ளை யிட்ட பொருளைப் பங்கு போட்டுக் கொண்டிருந்த கள்வர்கள்

பொருளைப் போட்டு விட்டு ஓடினர். செட்டி பிள்ளையப்பன் அதை எடுத்து மீண்டும் ஈகை செய்தார்.

இட்ட மான கவிசொலும் புலவருக்கு
இல்லை யென்று சொலற்குஅஞ்சி காட்டில்வாழ்
துட்ட வன்புலித் தூரில் புகுந்தநல்
தூய வன்கண வாள குலத்தினன்
செட்டி பிள்ளையப் பன்தினம் தொண்டுசெய்
தேவி மாமலை மாதொரு பங்குள
கட்டு செஞ்சடை அமர விடங்கனார்
கதித்து வாழ்பாரி யூர்எங்கள் ஊரே.

213. பிடித்து வந்த கலியை வெல்

பவானிப் பெரும்புலவர் பாலபாரதி மோரூர்க் கண்ணகுல கொளாநல்லி கவுண்டம்பாளையம் முத்துச்சாமிக் கவுண்டர் மகன் பாம்பண கவுண்டரைச் சந்தித்த போது பாடிய பாடல்.

'முன்பு புதியதாக கலி (வறுமை) வந்தபோது பாடல் பாடி ஒருவாறு வறுமையை விரட்டினோம். ஆனால் இப்போது விடாமல் மலை, ஊர், ஆறு, நாடு இவைகளைக் கடந்து நான் வரும் போது என்னைத் தொடர்ந்து கலி (வறுமை) வருகிறது. அதை நீ (பரிசளிப்பதன் மூலம்) வென்றால் உன்புகழ் என்றும் நிலைக்கும் என்றார்.

முன்கலிவந் தடுத்தபுதி தினிற்கவிகள் பாடிவரு
முயற்சிவாணர்
தன்கலியை அகற்றியாம் மனமகிழ்பா கவிஞனொன்று
சாற்றக்கேண்மோ
பின்கலிவி டாமல்மலை யூர்ஆறு நாடுதொறும்
பிடித்துவந்த
என்கலியை நீவென்றால் உன்கீர்த்தி நாடோறும்
இயம்புவீரே.

214 - 219. விசாகப் பெருமாள் இயற்றிய தி.அ. முத்துசாமிக் கோனார் இரங்கற் பாடல்கள்

திருச்செங்கோட்டில் அர்த்தநாரிக்கோனார் - காத்தாயி அம்மாள் தம்பதியினர்க்கு 1858 ஆம் வருடம் பிறந்தவர் முத்துசாமி. பொன்னையா உபாத்தியாயரிடம் தமிழும், பிஜ்ஜையாவிடம் தெலுங்கும் படித்தார். வடமொழியும் கற்றார்.

சந்தைகளில் அளக்கும் படிகட்கு முத்திரையிடும் பணி ஏற்று படிமேஸ்திரி என்றழைக்கப்பட்டார். 22 ஆம் வயதிலேயே சென்னை சென்று மட்டுவார் குழலாம்பாள் அச்சுக் கூடத்தில் 'சந்திர சேகர மாலை' 'கருணாகர மாலை' முதலிய நூல்களைப் பதிப்பித்தார். திருச்செங்கோட்டில் சைவ சித்தாந்த சமாஜம் தொடங்கினார்.

சொந்த அச்சகம் நிறுவினார். 'விவேக திவாகரன்' என்னும் இதழ் நடத்தினார். கொங்கு மண்டலத்தில் முதல் சுவடிப் பதிப்பாளர் இவரே. திருச்செங்கோடு தொடர்பாக 19 நூல்கள் வெளியிட்டார். பல நூல்களை இயற்றினார். கல்வெட்டு, செப்பேடு ஆய்வு செய்தார். சிவமலைக் குறவஞ்சி, சர்க்கரை மன்றாடியார் காதல், பூந்துறைப் புராணம். பாம்பலங்காரர் வருக்கக் கோவை முதலிய பல சிற்றிலக்கியங்கள் பதிப்பித்தார். கொங்கு மண்டல சதகம் சிறந்த பதிப்பாகும் (1923). 1934-ல் கண்பார்வை இழந்தார். 02.11.1944 அன்று காலமானார்.

214. சீர்மைமிகும் அருளாளன் திருவடியே சிந்திக்கும்
செயன்மை பூண்டு
பேர்மையுறும் முத்துசாமிப் புலவோய் அறிஞர்குழாம்
பிதற்றும் வண்ணம்
தேர்மைமிகும் விஞ்சையனாய் வானோர்நாட் டுப்புலவர்
சிறப்புக் காண
நேர்மைமிகும் விருந்தினனாய்ச் சென்றவரோ டுரையாட
நினைத்திட் டாயோ.

215. கொங்குத்திரு நாட்டகத்தின் கோதிலாச் சிவஞானக்
கொழுந்தே வாய்மை
பொங்கியெழும் உளம்களிக்கப் புகழாரும் அறிவரசே
புதுமை மாட்சி
தங்கியஇஞ் ஞான்றினில்நீ தமிழரசாய் வாழ்ந்து
தணந்தாய் அன்றோ
எங்கினியும் அருட்புலமை ஒழிந்ததுவோ அறியோமே
ஏந்தால் ஏந்தால்.

216. செந்தமிழ்த்தாய் முகம்வாடத் திருப்பெருகும் சிவஞானச்
செல்வம் ஏங்க
வெந்துயரால் கொங்கணங்கும் வெதும்பியுளம் கசிந்தலற
விண்ணோர் நாடே
சொந்தமெனப் பாராட்டிச் சுகதுக்கம் கடந்துதமிழ்த்
துறைவா சென்றாய்
எந்தமுறை யாமினிநாம் உமைப்பிரிந்து தமிழ்முழக்கிங்கு
இசைப்போம் ஐயோ.

217. பொன்பெருமை கூறிடலாம் புகழ்ப்பெருமை கூறிடலாம்
புனிதத் தெய்வ
வன்பெருமை கூறிடலாம் மனம்பொதிந்த தண்டமித்தாய்
வளமை யின்பத்
தன்பெருமை கூறிடலாம் தனிமுத்துச் சாமிப்பேர்
தகைமை யோனே
உன்பெருமை கூறிடப்பல் லாயிரநா வேண்டுமென
உணர்ந்திட் டேனே.

218. ஐவேலிப் புகழ்அசதி சரிதமுறை அறியாமல்
அறிஞர் மாழ்க
மெய்வேலர் அருட்பேற்றால் அவன்சரிதம் விளக்கமுற
விரித்த எம்மான்

பொய்வாழ்வை யொழித்தபிரான் முத்துசாமிப் பெயர்கொள்
புனிதன் வானோர்
கைவாழ்விற் புகுந்தஅன்றே புலமையும்இந் நாட்டைவிட்டு
கடந்த தய்யோ.

219. தாரணஆண் டைப்பசியில் தண்மதிய மோடிசைந்த
ஆரத் துதியை அணிநாளே - பாரில்
தவப்பேறு பெற்றான் தமியன்முத்து சாமி
சிவப்பேறு பெற்ற தினம்.

கல்வெட்டுப் பாடல்கள்

கொங்கு நாட்டில் பிடாரியூர், வெள்ளோடு, கூகலூர், கம்பைய நல்லூர், திருச்செங்கோடு, பவாணி, பழமங்கலம், பாப்பிணி, தாரமங்கலம், சுண்டக்காய் முத்தூர் ஆகிய ஊர்களில் பாடல் கல்வெட்டுகள் உள்ளன.

220. கட்டி முதலி வார்த்தை

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் இளமீசுவரர் கோயில் கல்வெட்டுப் பாடல்.

தாரமங்கலம் கட்டி முதலி ஆணைச் சிறப்பை இப்பா கூறுகிறது. சூரியர் பன்னிருவர், ஈசுவரர் பதினொருவர், திக்குகள் பத்து, கங்கை ஒன்பது, மலைகள் எட்டு, கடல் ஏழு, கார்த்திகை மாதர் அறுவர், மன்மதன் பாணங்கள் ஐந்து, மறைகள் நான்கு, சுடர் மூன்று, சாதி இரண்டு, ஆனால் கட்டி முதலியின் வார்த்தை மட்டும் ஒன்றேயாகும் என்று கட்டி முதலியைச் சிறப்பிக்கிறது.

இப்பாடலில் எண்ணலங்காரம் அமைந்துள்ளது. இளமீசுவரர் கோயில் இளமன் கட்டியின் பள்ளிப்படைக் கோயிலாக இருக்கலாம்.

செங்கதிர் பன்னிரண்டு ஈசர் பதினொன்று திக்கும்பத்து
கங்கையும் ஒன்பது வெற்பெட்டு எழுகடல் கார்த்திகையாறு

ஐங்கணை நான்மறை முச்சுடர் சாதி யவைஇரண்டே
மங்கை வரோதயன் கட்டி முதலிதன் வார்த்தைஒன்றே.

221. இராசகேசரிப் பெருவழி

கோயம்புத்தூர் தெற்கு மாவட்டம் சுண்டைக்காய்முத்தூர் அருகில் உள்ள மலைச்சரிவில் காற்றாடும்பாறை என்று அழைக்கப் பெறும் பாறையில் இக்கல்வெட்டுப் பாடல் உள்ளது. இன்றும் 30 அடி அகலம் மலைப்பாதை உள்ளது. ஆதித்தசோழன் (871-907) கொங்கு நாட்டை வென்று சேர நாட்டு இணைப்புக்கு ஏற்படுத்திய பெருவழி.

ஸ்வஸ்திஸ்ரீ இராசகேசரிப் பெருவழி

திருநிழலு மன்னுயிரும் சிறந்த மைப்ப
ஒருநிழல்வெண் டிங்கள்போ லோங்கி - ஒருநிழல்போல்
வாழியர்கோச் சோழன் வளங்கா விரிநாடன்
கோழியர்கோக் கண்டன் குலவு.

222. பிடாரியூர்ப் பெயர்கள்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பிடாரியூர் திருமுக மலர்ந்த ஈசுவரன் கோயில் மண்டபம் முன்சுவர் அடிப்பகுதிக் கல்வெட்டு.

பிடாரியூருக்குக் கமலபுரம், திருவிருந்தபுரம், காளிநகர், சென்னிநகர் என்ற நான்கு பெயர்கள் கூறப்படுகின்றன. நான்கு ஊர்ப்பெயர்கட்கு ஏற்பச் சிவபெருமான் பெயரும் கமலாலயர், திருமுகமலர்ந்தார். காளிகமலீசர், சென்னிநாதர் எனக் குறிக்கப்பட் டுள்ளன. கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

ஏற்கும் கமலபுரம் திருவிருந் தாபுரம்
சேர்த்தநற் காளிநகர் சென்னிநகர் - காக்கும்
கமலாலயர் திருமுக மலர்ந்தார் காளி
கமலீசர் சென்னிநா தர்.

223. வெள்ளோடு மருதன்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயிலில் தென்புறச் சுவரில் பதித்துள்ள கல்லில் உள்ள கல்வெட்டு.

வெள்ளோடு கோப்பன் மகன் மருதன் புகழ் பாடுகிறது. அகத்துறைப் பாடல். காமவேள் வாராமல் தாப்பை இடலாம்; இரவில் சந்திரன் (மதி) வந்தால் எப்படிப் பெண்கள் பாதுகாப்பைப் பெற முடியும் என்று கவிஞர் வினவுகிறார். கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

காப்பை இடுங்களிக் காமவேள் வாராமல்
தாப்பை மிகத்தேடும் தையலீர் - கோப்பன்
தருமருதன் வெள்ளோடைத் தான்புர னூரில்
வருமிரவு நேரே மதி.

224. கூவலூர் அகவல்

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கூகலூர் மத்யபுரீசுவரர் கோயில் நுழைவாயில் முன்மண்டப இடப்புறச் சுவரில் வெட்டப்பட்டுள்ள ஆசிரியப்பா. நட்டூரோண்ட நாயனார் என்பது பழம்பெயர்.

கூகலூரில் வாழும் சாத்தந்தை குலப் பெரியவர்களான இளையணன் மகன் பழனியப்பனும், பழனியப்பன் மகன் பச்சையப்பனும் கூகலூர்ச் சிவபெருமானுக்கும், சிவப்பிராமணர்கட்கும் கொடுத்த கொடையை இக்கல்வெட்டுக் கூறுகிறது. கூகலூரின் பழம் பெயர் கூவலூர் என்பதாம். ஆண்டு 1919.

கடல்புடை சூழ்ந்த காசினி தன்னில்
கலியுக மய்யா யிரத்திரு பதினில்
காள யுக்தியாண் டைப்பசி மதியில்
காஞ்சிக் கூவல் நாட்டுள் கூவலூர்

மத்யபுரி ஈசனென மறுபெயர் கொண்ட
நட்டூ ராண்ட நாயனார் தமக்கு
கூவலூர் வேளாண் குடிச்சாத் தந்தை
இளையண வேள்தவத் தெய்திய புதல்வன்
பழனி யப்பனும் ஒருபழனி யப்பன்சேய்
பச்சையப் பனுமாய் இருவரும் மனமொத்து
எழுதிவைத் திட்ட தரும சாசனம்
கூவலூர் புதுவாய்க் கால்பாய் நஞ்சையில்
பரமன் மடையெனும் பண்புள்ள வயலில்
எங்களுக் குள்ள ஏக்கரா நாலு
செண்டறு பத்து மூன்றரை யுடனே
மேவானிக் கிராமம் ராஜவாய்க் கால்பாய்
தேர்புளி யல்எனத் திகழ்தரு நஞ்சை
ஏக்கரா ஒன்றும்இவ் விரண்டும் சேர்ந்து
ஏக்கர் ஐந்துடன் அறுபத்து மூன்றரைச்
செண்டும் கொண்டஇவ் விரண்டு பூமியும்
இருபத்து நாலடிச் சதுரக் குழிகள்
நானூத் திரண்டரைச் சதுரக் குழிகள்
வருடந் தோறும் வருந்தா னியத்தில்
அவ்வக் காலத்து அரசிறை செலுத்தி
மீதி யுள்ளதில் பாதி தானியம்
காலையா லயத்தில் வேதம் ஓதியும்
மாலையில் சிவன்உமைக்கு ஆயிரம் நாமமும்
கணபதி கந்தவேள் அஷ்டோத் திரமும்
சொல்லும் வைதிக அந்தணன் பெறவும்
பின்னும் பாதியில் பாதி தானியம்
அபிஷேக அர்ச்சனை செய்யும் அந்தணர்
அன்ன நிவேதனமாச் செய்து பெறவும்
மீதி யுள்ளதில் வில்வம் விளக்கு

பாயச நிவேதனம் பண்ணிவித் தற்குமாம்
இறைவன் கோயில் தர்ம கர்த்தன்
எங்கள் குலத்தில் கந்தப் பனிடம்
விடுத்த பூமி தேவ தானம்
எங்கள் சந்ததிக் கிப்பூ மிகளில்
யாதொரு தொடர்பும் இல்லை அவர்கள்
தருமம் தன்னைத் தான்கவ னித்து
என்றும் நீடூழி நடத்த
மன்று ளாடுவார் மலர்ப்பதம் போற்றி.

இவ்விவரம் தற்கால ராஜாங்கத்தில் பதிவு செய்திருக்கும்
பத்திரங்களில் பார்க்கலாம்
இங்ஙனம் பழனியப்பகவுண்டன் பச்சியப்பகவுண்டன்
மரகதாம்பிகை சகாயம்.

225. விடுகாதழகிய பெருமாள்

தருமபுரி மாவட்டம், கம்பையநல்லூர் தேசிநாதேசுவரர் கோயில் கல்வெட்டு.

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 22 ஆவது,

உரைமருவு குலோத்துங்க சோழதே வர்க்கு
உரைத்திட்ட யாண்டிருபதின் மேலிரண்டில் பெண்ணைக்
கரைமருவுஞ் சிறுகோட்டை குளன்நாகை நாயகர்க்களித்து
கற்றளிதன் பேரிட்ட காரனைய கையான்

திரைமருவும் தடங்கமலத் தகடை மன்னன்
செழும்பாலி பெண்ணை பொன்னித் திருநதிமூன் றுடைய
விரைமருவும் தார்மார்பன் ராஜராஜ அதிகன்
விலங்காமொழி விடுகா தழகியபெரு மாளேய்.

விளக்கம் : இப்பாடல்கள் விடுகாதழகிய பெருமாள் என்னும் தகடூர் அதியர் வழிவந்த குறுநில மன்னனைப் புகழ்ந்து பாடியவை.

காதுகளில் அணிகலன் ஒன்றும் இல்லாமலேயே (விடுகாதாக) மிகுந்த அழகிய காதுகளைப் பெற்றவன் என்ற பொருளில் 'விடுகாது அழகிய பெருமாள்' என்ற பெயர் அமைந்திருக்கலாம்.

'விடுகாதழகு' என்பதற்கு 'விடுகாது ஆனாலும் தோடிட்ட காது என்று தெரியும் காண்; என்று திவ்வியப் பிரபந்த உரையில் கூறப் பட்டுள்ளது.

மாறுபடாத மொழியை உடையவன் என்ற பொருளில் விலங்கா மொழி என்ற பட்டமும் இவன் பெற்றிருந்தான்.

226. அனந்தபூபன் நிறுத்திய கற்கம்பம்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு கைலாசநாதர் கோயில் தெற்குப் புறச் சுவரின் கீழ்த்தளத்தில் இப்பாடல் கல்வெட்டு உள்ளது.

விசயநகர மன்னன் சதாசிவதேவ மகாராசா (21.04.1561) காலத்தில் நரசிங்க ராமாஞ்சி கொங்கு நாட்டில் அதிகாரம் செய்த பொழுது தேவகிரித் தலைவன் அனந்தபூபன் கைலாசநாதர் கோயில் முன் கற்கம்பத்தை (தீபத்தம்பம்) நிறுத்தினான் என்று இக்கல்வெட்டுப் பாடல் கூறுகிறது.

இக்கல்வெட்டுப் பாடல் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை என்னும் இலக்கியத்திலும் இடம் பெற்றுள்ளது.

சீரார் சகாப்தத்தில் ஆயிரமும் நானூறு
　　செல்கஎழு பத்துமூன்றின்
திரமான துன்மதிச் சித்திரைத் திங்களைச்
　　சேர்ந்தஇரு பத்தைந்தினில்

பூராய பூர்வபட் சம்திகழும் தசமி
        பூசமாம் மேனாளிலே
புவியாள் சதாசிவ மகராயர் செகதேவ
        பூபால னுக்குதவவே

வீராக மப்பிரபுட நரசிங்க ராமாஞ்சி
        மிகுகொங்கு நாடாளுநாள்
விப்ரகுல சர்வயன் தேவகிரி யாதிபன்
        வீறாம் அனந்தபூபன்

ஏரான செங்கோட்டில் மேவுகை லாயர்முன்
        எழிலான கற்கம்பமே
இன்பொடு நிறுத்தினன் கீர்த்திப் பிரதாபமது
        இமசேத ளவுநிற்கவே.

227. சேசாத்திரி செயல்கள்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயில் கோபுர நிலையில் உள்ள கல்வெட்டு.

திருவண்ணாமலையைச் சேர்ந்த சேசாத்திரி என்பவர் மதுரை நாயக்க மன்னர் சொக்கலிங்க நாயக்கர் காலத்தில் கயிலாசநாதர் கோயில் கோபுரத்தையும், மலைமேல் காசிவிசுவநாதர் கோயிலையும் உண்டாக்கினார். ஆண்டு கி.பி.1663.

ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1585 இதன்மேற் செல்லாநின்ற சோபகிருது வருசம் ஆவணி மாதம் ஸ்ரீமது விசுவநாத சொக்கலிங்க நாயக்கரவர்கள் ராஜ்ஜிய பரிபாலனம் பண்ணுகையில்,

நணிய கயிலாய நாதருக்குப் பூசை
அணிகிளரும் கோபுரமுண் டாக்கிப் - பணிமலைமேல்
காசிவிசு வேசருக்குக் கற்கோயி லும்பணித்தான்
நேசருணைச் சேசாத் திரி.

228. பவானிக் கோயில் திருமதில்

ஈரோடு மாவட்டம், பவானி சங்கமேசுவரர் கோயில் அம்மன் சன்னதி கல்யாண மண்டபத்தூண் கல்வெட்டு.

கொங்குநாட்டுத் தேவாரப் பாடல்பெற்ற ஏழு தலங்களில் பாவனி ஒன்று. அங்கு காவிரியில் கலக்கும் ஆற்றுக்கு 'வானி' என்பது பழம்பெயர். பதிற்றுப்பத்தில் புகழப் பெற்ற பேராறு.

வானி காவிரியில் கூடும் இடம் வானிகூடல். பாலயதேவ மகாராசர் என்பவர் விசயநகரத்தலைவர். அவர் கொங்குப் பகுதியை ஆட்சி புரிந்தவர். அவர் காலத்தில் சென்னராசன் என்பான் மகன் திருவனந்தன் என்பவர் பவானிக் கோயிலுக்குத் திருமதில் அமைத்த விபரம் இக்கல் வெட்டுப் பாடலால் அறியப் பெறுகிறது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

வானிகூ டல்பதிக்கு வாலரா சன்மகிழ
ஆன திருமதிலுண் டாக்கினான் – நானிலமன்
சென்னரா சன்புதல்வன் சீமான் திருவனந்
தன்மரா சன்அருளால் தான்.

229. சொக்கனின் கற்பொறிப்புப் புகழ்

போர்க்களத்தில் போரிட்டு வீரமரணம் அடைந்தவர்கட்கும், கொடிய விலங்குகளைக் கொன்று மரணமடைந்தவர்கட்கும், தீப் பாய்ந்து இறந்த மகளிர்க்கும், பொது நலத்திற்காக இறந்த பிறர்க்கும், நீர்நிலை ஏற்படுத்தியவர்கட்கும், துறவியர்க்கும் நினைவாக நினைவுக் கல் நாட்டியுள்ளனர். 'கல்' என்றாலே முன்பு நடுகல்லைத்தான் குறிக்கும். 'கல் நின்றான் எந்தை' என்றார் திருவள்ளுவர்.

முன்பு நடுகற்களே தெய்வமாக வணங்கப்பட்டன.

'கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே'.

என்பது புறப்பாடல்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், பழமங்கலம் (பழம் பெயர் புகழ்மங்கலம்) 'வேடன்கல்' காட்டில் ஒரு நடுகல் உள்ளது. எதிர்த்த பகைவரை வென்று வீரமரணம் அடைந்த வேட்டுவரில் கரைய குலச் சொக்கன் என்பவருக்கு அவர் புகழ் நிலைக்க நடுகல் நட்டனர். இச்செய்தி ஒரு அழகிய வெண்பா மூலம் எழுதப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவில் 'பீடும் பெயரும்' பாடல் வடிவில் பொறிக் கப்பட்ட நடுகல் இது ஒன்றேயாகும்.

இப்பாடலின் கீழ் 'இக்கற்பொறி இரட்சிப்பான் பாதம் என் தலைமேலே' என்று எழுதப்பட்டுள்ளது.

வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்தமருள் வென்ற சயம்பெருக - சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேஉலகில் தான்.

230. குரங்கு கைப் பூமாலை

காரை என்பது நத்தக்காடையூர். திருப்பூர் மாவட்டம் காங்கயம் வட்டத்தில் உள்ள ஊர். அவ்வூர்த் தலைவர் காரைமன் எனப்பட்டார். அவர் பழைய கோட்டைப் பட்டக்காரர். 'உத்தம சோழன்' என்பதும் அவர்க்குரிய சிறப்புப் பெயர். அவரை ஒருபெண் காதலித்தாள். ஆனால் என்ன காரணத்தாலோ பட்டக்காரர் இதுவரை அப்பெண்ணின் காதலை ஏற்று அருள் செய்யவில்லை. எனவே அப்பெண்ணுக்கு காதல் நோய் மிகுகிறது. தோழிப் பெண்களைப் பார்த்துப் பேசலுற்றாள்.

''தோழிகளே! காதலிக்கும் என் தலைவன் உத்தமசோழன் நான் தழுவி என் விரக தாபம் தணிக்கத் தன் தோள்களைத் தரவில்லை. இனி இதோ இந்தக் குளிர்ந்த தென்றல் காற்று என் காதல் நோயை மிகுவித்து என்னைக் குரங்கின் கையில்பட்ட பூமாலை போல என்னை உருக்குலையச் செய்யுமே. நான் என்ன செய்வேன்'' என்றாள்.

இப்பாடல் திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், பார்ப்பதி பச்சோட்டு ஆவுடையார் கோயில் தெற்குச் சுவரில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

சரங்கொண் டிலங்கை சமைத்தபெற் றான்தரி
யாரிறைஞ்ச
உரங்கொண்ட காரைமன் உத்தம சோழன்
உபயபுயம்
இரங்கும் படிஅரு ளான்மட வீர்இனி
என்னுயிரைக்
குரங்கின் கையிற்பட்ட பூமாலை ஆக்கும்
குளிர்தென்றலே.

செப்பேட்டுப் பாடல்கள்

கொங்கு நாட்டுச் செப்பேடுகள் பலவற்றில் பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன.

அல்லாள இளையான் செப்பேடு

பழனிச் செப்பேடுகள்

பஞ்ச கம்மாளர் செப்பேடு

பாண்டிய வேளாளர் செப்பேடு

கண்ணகுலப் பட்டயம்

கணக்கன் கூட்டத்தார் பட்டயம்

பல்லடம் செப்பேடு

பனங்காடர் பட்டயம்

அனுப்பப் பட்டிச் செப்பேடு.

ஆகியவற்றில் உள்ள பாடல்கள் இங்கு தொகுத்துக் கூறப்பட்டு உள்ளன.

231. அல்லாள இளையான் செப்பேடு

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

(சில செப்பேடுகளில் "மாமழை" என்பதற்குப் பதிலாக "மாமறை" என்ற தொடர் காணப்படுகிறது). இப்பாடல் பெரிய புராண ஏட்டுச் சுவடிகளில் காணப்படுகிறது. பல கொங்குச் செப்பேடுகளில் காணப்படுகிறது.

232 - 240. பழனிச் செப்பேடுகள்

232. சீர்பூத்த செழுங்கமல மயிலும் வாழி
தேவர்தொழும் பாதார விந்தம் வாழி
தார்பூத்த தினைக்கடம்ப மாலை வாழி
சக்கரகிரி நடனமிடும் மயிலும் வாழி
கார்பூத்த சிவகிரிக்கோ புரமும் வாழி
கனகமிகு குண்டலமும் காதும் வாழி
பார்பூத்த தண்டலைகள் அரனார் சேர்ந்த
பழனிமலைக் குமரேசர் பாதம் வாழி.

233. செங்கைமேல் பனிரண்டு கையும் வாழி
திருவாவி னன்குடியார் சிறந்து வாழி
கங்கையுமை ஈன்றெடுத்த பாலா வாழி
கயிலாச நாதரருள் கந்தா வாழி
மங்கைகுற வள்ளிமண வாளா வாழி
மலைமிகுந்த குஞ்சரிப்பெண் மணாளா வாழி
பங்கயனைப் போற்றுகின்ற சோலை மேவும்
பழனிமலைக் குமரேசர் பாதம் வாழி.

234. தங்கமுயர் மகுடங்கள் ஆறும் வாழி
தளதளஎனத் திலதமிடும் நுதலும் வாழி
பொங்கமுடன் வெண்ணீற்றுப் பிறையாய் வாழி
புத்தமிர்த விழிகருணை புணர்ந்தாய் வாழி
துங்கமுறக் கண்டசரம் பதக்கம் வாழி
சுந்தர மிகுந்தகோ புரங்கள் வாழி
பங்கயனைப் போற்றுகின்ற சுடரே வாழி
பழனிமலைக் குமரேசர் பாதம் வாழி.

235. அடைந்தவர் துணைவா வாழி அடையலர்க் கரியாய் வாழி
மடந்தைதன் மைந்தா வாழி மாதவன் மருகா வாழி
திடம்புனை வேலா வாழி தேவரா ருயிரே வாழி
படந்தபோ ரசுரர் கூற்றாம் பரமனே வாழி வாழி.

236. கூறுபடை யாளும் வேதக் குணப்பெரும் குன்றும் ஞானப்
பேறுடைப் பழனி யென்னப் பெயரது மருவி எங்கள்
ஆறுமா முகவன் வைகும் நகரமும் அன்று தொட்டு
வீறதலப் பழனி யென்றே விளங்கியது உலகம் மூன்றும்.

237. நன்னெறி முகமும் வாழி நாதமும் முடியும் வாழி
பன்னிரு கரமும் வாழி பாதபங் கயமும் வாழி
கன்னிமார் எழுவர் வாழி கதியொடு பழனி வாழி
என்னரும் வினையை நீக்கும் இளையவன் வாழி! வாழி!!

238. சீர்பெறவே பிரமனைக் கோதுமுகம் ஒன்றே
தெய்வ குஞ்சரியைச் சேர்ந்தமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுகம் ஒன்றே
குன்றுருவ வேலதனை ஏவுமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனவடிவு யாரும்அறி யாரோ
ஆதிஅம ராவதி அமர்ந்தபெரு மாளே.

239. பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மணியே போற்றி
முன்னிய கருணை யாரும் முருகபரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்கா கருணைவா ருதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி.

240. கருணைபொழி திருமுகங்கள் ஆறும் வாழி
கனகமலர் பன்னிரண்டு கையும் வாழி
இருசரணம் என்தலைமேல் நாளும் ஓங்கும்
இந்துரவிக் கப்பாலும் இனிது வாழி
அருள்பெருகி அமரர்சிறை மீட்டே ஆண்ட
ஆறிரண்டு திருநயனத்து அழகும் வாழி
மருவழியும் பைங்கடப்பந் தாரும் வாழி
மயில்பரிசே வற்கொடியும் வாழி! வாழி!!

241 - 244. பஞ்ச கம்மாளர் செப்பேடு

241. ஓதனை யாகலும் ஓங்கு புகழ்பெருங்
காதல் பொருளனைத்தும் கைக்கொண்டு - சீதப்
பனிக்கோட்டு மால்வரை பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

242. அம்பவளத் துய்யநிறத் தைங்கரத்து மெய்ஞானக்
கம்பமத யானை கட்டுவிக்கக் - கொம்பாற்பொற்
போருமே வினையறுமே போக்குமே மேஞானம்
தீருமே நினைத்ததெல்லாம் தான்.

243. கழுவா மணிக்கலசங் காஞ்சிசூழ் நாட்டில்
புழுவாய்ப் பிறந்தாலும் போதா - வழுவாமல்

சந்திரராய்ச் சூரியராய் தானவராய் வானவராய்
இந்திரராய் வீற்றிருப்ப தில்.

244. ஆதித்தன் எங்கே அரன்மூவர் தான்எங்கே
வேதச்சொல் எங்கே வினைஎங்கே - நீதிக்குள்
மண்ணாளர் எங்கே மனைவரம்பு தான்எங்கே
கண்ணாளர் கைவிலகி னால்.

245 - 249. பாண்டிய வேளாளர் செப்பேடு

245. வீதி வேழமா உலாவும் ஆவினங்குடி வேதமே
மாதி வேழமா மூலமென் றுரைத்தவர் போற்றும்
ஆதிவேழம் மாதொரு பிடியாக வந்துதித்த
சோதி வேழமா முகவனைத் துதித்திடல் செய்வாம்.

246. முந்தணலா ஆதி வடிவாகி முதலந்த மின்றி மூலஞான
மந்தணனாய் உயிர்கள்தொறும் நின்ற வியாபகன் சிவமாமலைமீது
கொந்தணவும் குடுமியும் கோவண உடையும் நூல்மார்பும்
கோலம்கொண்டோன்
அந்தணனாய் உருஉருவந் தவதரித்து நின்றவனடிகள்
முடிமேல் வைப்பாம்.

247. சேயிரவி ஒளிகவற்றும் மாமணிப் பொன்முடியும்
செம்முகமும் கருணைபொழி திருநயனமும் செவ்வாயும்
தூயநறும் புழுகொழுகும் செழுமணிப் பொற்குழையும்
துடை நிறைந்த துணைத்தோளும் சுடரிலை வேற்படையும்
ஆயுமறை நூல்மார்பும் களபநறும் சாந்தும்
அணிமணிப் பூணாரமும் பொன்னொலிய லுடையழகும்
பாயொளிர் கிண்கிணிபுனை செஞ்சீரடியும் படைத்த
பழனிமலைக் குமரனையாம் பணிதல் செய்வாம்.

248. ஆரணத் துறையே வாழி ஆகமப் பொருளே வாழி
காரணக் குருவே வாழி காட்சியின் நிலையே வாழி
பாரினில் சிறக்கும் தெய்வப் பழனியங் கிரியாய் வாழி
வாரணம் குன்றாக் கொடிகொள் மகிழ்னனே வாழி வாழி.

249. இட்டமாம் தேவ தாயம் எழில்பெற்ற பிரம தாயம்
பட்டயவர்த் தனைகள் எல்லாம் பாரினில் உள்ளோர் கூடி
நட்டகல் இட்ட சூலம் நடந்ததைக் கெடுத்த பேர்கள்
திட்டமாய் தீமை உற்று தீநரகம் ஏகு வாரே.

250. கண்ணகுலப் பட்டயம்

கன்னிவாடியிலிருந்து கண்ண குலத்தார் பல்வேறு ஊர் களுக்குப் பரவிக் குடியேறியதை இப்பட்டயம் கூறுகிறது.

இப்பட்டயத்தில் ஏழு படைக்கலக்காரிகள், ஏழு பெண்கள் தீப்பாய்ந்து உடன்கட்டையேறிய நிகழ்ச்சி கூறும் இடத்தில்,

பன்னுபார்த் திபவருசம் ஆடிமா சம்தேதி
பதினெட்டு வந்தநாளில்
பத்திய விசாகநாள் சுபநாம யோகமும்
பாலவம் அமிர்தயோகம்

தின்னியம தாய்சுக்கிர வாரத்தி லேதிவ்ய
சீரங்க ராயர்சரிதம்
செப்புகிற தற்குநிகர் ஒப்பிடச் சொல்லுவேன்
செய்கின்ற ஆதிரையதாம்

துன்னுலகில் விரிகின்ற காவேரி சறையுநதி
பிரயாகை துங்கபத்திரை
சொல்கிருஷ்ணா நர்மதா கங்கைநதி யமுனையும்
தூயகோ தாவரிநதி

இன்னதிகள் தன்னிலே மூழ்குவதை ஒக்குமே
இதமாக வேயுரைத்தேன்
இனியபுகழ் சேர்கொங்கு தலசைவளர் சுன்னிநகர்
இலங்குமண லூரன் மொழியே

என்ற பாடல் எழுதப்பட்டுள்ளது.

251. அனுமன்பள்ளி செங்குந்தர் பட்டயம்

செங்குந்தர் சமூகத்தினர் தாராபுரம் அகத்தீசர் கோயிலில் கூடி தங்களுக்குச் 'செங்குந்த மாணிக்கி' நியமித்ததை இப்பட்டயம் கூறுகிறது.

இப்பட்டயத்தில்,

கோல நீடிய நிறுவரை வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசையும் கனவிலும் வேண்டேன்
மாலை யர்பெறும் பதத்தையும் பொருள்என மதியேன்
சால வேண்டுவன் தன்மையை வேண்டுவன் தமியேன்

என்ற பாடல் எழுதப்பட்டுள்ளது.

252. கருமாபுரம் செப்பேடு

கருமாபுரத்தில் நாடார்கள் குலகுருவாக விளங்குபவர் ஆண்ட சிவசுப்பிரமணிய பண்டித குருசுவாமியார். அவர் வசம் உள்ள செப்பேட்டின் (நாடார் சமூகச் செப்பேடு) தொடக்கத்தில்,

தார ணிக்கொரு தாயுமை யாள்பரி
பூர ணச்சிவ நேயருள் புத்திரன்
ஆர ணப்பொரு ளான்திருக் காஞ்சியின்
வார ணத்தின் மலர்ப்பதம் போற்றுவாம்

என்ற பாடல் எழுதப்பட்டுள்ளது.

253. கணக்கன் கூட்டத்தார் பட்டயம்

தேவர் சமூகத்தினர் தென்பாண்டி நாட்டுப் பகுதியிலிருந்து கொங்குக் கொடுமணல் என்ற ஊரில் குடியேறினர். அவர்களை கணக்கன் கூட்டத்தார் என்றும், வெத்திலைக்காரர் என்றும் அழைப்பர். அவர்கள் பட்டயத்தில்,

செய்ய புகழ்நெறியும் தென்காஞ்சி லிங்கர்தமை
வையம் புகழஎன்று வாழ்வித்து - மெய்யான
வாதவ நல்லூர் வாழ்கின்ற வேளாளர்
போதநெறி சொல்வேன் புகழ்ந்து

என்ற பாடல் தொடக்கத்தில் உள்ளது.

254. பல்லடம் செப்பேடு

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஈசுவரன் கோயில் குருக்களிடம் உள்ள செப்பேடு, அருளானந்த குருசாமி மறைந்த நாள் கூறப்படுகிறது.

திகழ்வருடம் சீமுகமாம மூன்றாம் மாதம்
தேதியன்று ஐந்திலொன்று குறையாம் வெள்ளி
புகழ்ச்சியோ பிரதமையுத் திண்ட புஷ்யம்
பொருந்தியநல் ஆஷாட பகுளம் தன்னில்
சுகமேவு பல்லடத்தில் வரத ராச
தூயனுளம் கோயில்கொண்ட அருளா நந்தர்
மகிமைபெறு குருசாமி மாசி லாத
மதியமதில் சமாதியுற்றார் வையத் தோரே.

255. பனங்காடர் பட்டயம்

கல்வெட்டுகளின் தொடக்கத்தில் காணப்படும் சண்டேசுவரர் பற்றிய பாடல் இச்செப்பேட்டிலும் காணப்படுகிறது.

தண்டீஸ் பரன்ஓலை சாகரஞ்சூழ் வையத்தில்
கண்டீஸ் பரன்கருமம் ஆராய்க - பண்டே
அறம்செய்தான் செய்தான் அறம்காத்தார் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து

என்பது அப்பாடலாகும்.

256. வயிற்றுவலி நீக்க வா

ஓராட்டுக் குப்பை செட்டிபாளையம் மகாவித்துவான் குட்டியப்ப கவுண்டர் (15 வயதில் அம்மை நோயால் கண்பார்வை இழந்தவர்) ஒருமுறை மருதமலையில் தங்கியிருந்தார். இரவில் பசி, வயிற்று நோயால் வருந்திப் பாடிய பாடல்.

அர்ச்சகர் வடிவில் முருகப் பெருமான் வந்து உணவு தந்து நோய் நீக்கினார் என்பர்.

தேவருக்குச் சூரனால் சேரும் இடர்அகற்றி
மூவருக்கு மூலம்அருள் முன்னோனே - சீவர்
மயற்றுகளை மாற்றம் மருதமலை யப்பா
வயிற்றுவலி மாற்றியிட வா.

257. ஆனூர்த் திருப்பணியும், அழகன் சர்க்கரை உபசரிப்பும்

உயருபுகழ் ஆனூர்வாழ் உத்தமிமண் டபம்கட்ட
உவந்து வந்து
பயிரகுலப் பெரியவர்கள் பணம்மட்டும் தான்கொடுத்தார்
பணியா ளர்க்கு
வயிறுநிறை யச்சோறும் வாய்க்குவெற் றிலைபாக்கும்
வாங்கித் தந்து
தயிரொருமு வேளையிட்ட தர்மமிது அழகன்சர்க்
கரைய தாமே.

❁ ❁ ❁

பாட்டு முதற்குறிப்பு

(பக்க எண்கள்)

அசுவத்தின சுழியை 87
அஞ்சாலி மக்களும் 50
அடைந்தவர் துணைவா 161
அட்டமங்கலம் அருந்தி 22
அட்டான நாடு புகழ் 70
அந்திப் பிறைச்சடை 116
அமிர்தநிறை கலியுகம் 138
அம்பவளத் துய்யநிற 162
அம்புவியில் மிக்கான 30
அய்ங்கர விநாயகனே 25
அரவிந்தத் தடத்திலுறும் 24
அர்த்தபாகத் திருநாள் 51
அவனும் சடையன் 142
அழகன் சர்க்கரைச் சிறு 71
அறிவில் இளைஞரே 48
அனுதினமும் அபிடேக 65

ஆடரவகிரியின் அடி 52
ஆடழிய மாடழிய 45
ஆதிகருவூர் அணிவெஞ்சை 20
ஆதித்தன் எங்கே 163
ஆத்தாள் அருளையடை 14
ஆயன்மருமகன் விசா 56
ஆரணத் துரையே வாழி 163
ஆலிங்க நாகமலை 55
ஆறு விழியிலுறும் 14
ஆறெல்லாம் செந்நீர் 62
ஆற்றோரக் கோட்டை 91
ஆனூர் எனும் கோட்டை 104

இட்டமாம் தேவதாயம் 164
இட்டமான கவிசொலும் 147
இராசாதி ராசமது 126
இருப்பரிவாளும் வளை 45
இருமடந்தை நண்பன் 108

உயருபுகழ் ஆனூர் 167
உரைமருவு குலோ 154
உலகிலொரு மறை 25
உற்றதொரு புலவர் 143

எங்கள் பெரியோர்கள் 135
எத்தனைநாள் இரு 75
எண்திசையும் புகழ் 76
எம்பெருமான் நற்குண 16
எவரையென்று நாமறி 101
எவர்க்காகிலும் வருமோ 71
எள்ளுபொரி அவல் 25
எழுமாதை நகர்க்கதிபர் 127
எற்றுதிரைப் பொன்னி 139
என்னஎன்ன தீமை 18

ஏரும் இரண்டுளதாய் 36
ஏற்கும் கமலபுரம் 151

ஐயா சிவமலைவாழ்	93
ஐவேலிப் புகழ்அசதி	149
ஓதுரிவை யேகாசர்	30
ஓதனை யாகலும்	162
ஒருந்தமிழொரு மூன்று	144
கங்கைமதி புனைகின்ற	123
கடலுடுத்த புவன	92
கடல்புடை சூழ்ந்த	152
கட்டாப்புக் காட்டிய	46
கண்டால் புலவரை	100
கதுவிவரு பொன்னி	35
கந்தன் சர்க்கரையார்	78
கருணாகர மாலை	42
கருணைதிகழ் முப்பத்தி	111
கருணைபொழி திருமுக	162
கலியிரு நூற்றில்	62
கலியுக சகாப்தம்	63
கல்லும் இளகும் உனது	41
கல்லும் காவிரியும்	140
கழுவா மணிக்கலச	162
கற்றவருக்கு ஈயாதான்	97
கற்றைவார் சடையீசன்	87
கன்னமிடும் கள்ளருக்கு	45
கன்னல்செறி கோதை	51
கன்னி அழிந்தனள்	34
காடெல்லாம் சிறு	22
காதாட்டிக் கைநீட்டி	108
காப்பை இடுங்கள்	152
காமனருள் பாலகன்	109
காயும் கறியொடு	114
காய்மாறாத் தேமா	30
காரூர் பொழில்திகழ்	116
காரை ஆனூர் மேவு	75
காரையூர் சர்க்கரை	91
கார்கொண்ட மேனி	125
காளிமுரன்று கறங்கி	145
காற்றைப் பிடித்துக்	144
கூறுபடை யாளும்	161
கொங்கினில் இராம	102
கொங்கினில் கலியுக	141
கொங்குத்திரு நாட்டக	149
கொங்கு மலைநாடும்	18
கொங்கும் கலிங்கமும்	120
கொஞ்சுமொழிச் சொக்கன்	80
கொட்டுதல் மேளதாளம்	22
கொற்றவேல் சர்க்கரைக்கு	74
கொற்றவேல் சர்க்கரையார்	86
கோடார்பூந் தென்தலைசை	129
கோதைக் கிரியில் சிவ	57
கோலநீடிய நிறுவரை	165
சகம்கலி சகாப்தம்	132
சந்திரபுரி மாநகரில்	31
சட்டமொடு பாதசரம்	29
சரங்கொண்டு இலங்கை	159
சர்க்கரையும் காரும்	74

சார்ந்தமதி அழகன் 90
சிந்தை மகிழ்ந்திடும் 117
சிறக்கப் புகழ் கொண்ட 78

சீரார் சகாப்தத்தில் 155
சீருற்ற சிவமலை 133
சீர்கொண்டயிங்கி 117
சீர்கொண்ட வடிவுற்ற 110
சீர்கொண் டிலங்குமணி 27
சீர்பூத்த செழுங்கமல 160
சீர்பெறவே பிரமனை 161
சீர்மருவு கங்கை 124
சீர்மருவும் உயிர் 24
சீர்மேவு கலியாதி 65
சீர்மேவு பைந்துளப 122
சீரிமைமிகு அருளாளன் 148

செங்கதிர் பன்னிரண்டு 150
செங்காளி காளியண்ணா 134
செங்குன்றை எல்லா 61
செங்கை மேல் 160
செட்டியார் தன்கதை 118
செந்தமிழ்த்தாய் முகம் 149
செந்தமிழ்ப் பாவாணர் 146
செப்பரிய கொத்துமுடி 121
செப்பரிய சதகோடி 122
செப்பரிய தானகொடை 67
செப்பிய பிரார்த்தனை 94
செயித்த பிரம்பால் 69
செய்ய புகழ்நெறி 166
செல்லன் இளையான் 59
சென்னிகிரி கனககிரி 21
சென்னி மலைக்கும் 106
சென்னிமலை வேலவர் 16
சென்னெல் வயல் சூழ் 28

சேணாடர் போற்றும் 137
சேயிரவி ஒளிவற்றும் 163

சொக்கன் எனும் சர்க்கரை 77
சொல்லுகலி நாலா 89
சொல்லு கலியுக 72

சோமன் சர்க்கரை 68

தங்கமுயர் மகுடங்கள் 161
தண்டமிழ்க் கவிவாணர் 96
தண்டீஸ்பரன் ஓலை 167
தந்தைக்கு எருமை 46
தவவலிமை குலவிவளர் 111
தளையவிடா மரையொளி 49

தாரணஆண் டைப்பசி 150
தாரணிக்கொரு தாய் 165

திகழ்வருடம் சீமுக 166
திசைபரவு கலியுக 140
திங்கள்சேர் நுதல் அழகி 29
திருஉயரும் சர்க்கரை 79
திருநாக மாமலைவாழ் 43
திருநிழலுமன் 151
திருமருவு சேரனும் 131
திருமாது சர்வலிங் 28

திருவழுந் தூரில்வரு	132
திரைகொண்ட வாரி	139
தினம் அமுதுபடி யாறு	55
துவையல் வருவல்	33
துள்ளுமயில் ஏறி	26
தெய்வத் தமிழென்னும்	37
தென்பருத்திப்பள்ளி	54
தென்முளசைக் கண்ணர்	56
தென்னுலவு நாககிரி	54
தேங்குபுகழ் ஈங்கூர்	34
தேவருக்குச் சூரனால்	167
தோகைமயில் வாகன	26
தோள்நூறு பத்துடைய	76
தோற்றும் கலியுக	98
நஞ்சையன் சர்க்கரையார்	94
நணிய கயிலாயநாதர்	156
நயங்கொண்ட விஞ்சை	69
நலம்புரியும் சிவமலை	73
நல்லசேனாபதிச் சர்க்கரை	81
நல்லதம்பிச் சர்க்கரை	82
நவகோடி சித்தர்கிரி	113
நறவேந்து நங்கை	18
நற்காரை யூரில் வளர்	61
நன்னெறி முகமும்	161
நாகமலைக் கோயிலுக்கு	94
நாதன் ரதம் நடவாது	137
நாலுகால் நாலுவேதம்	17
நாவலர்கள் போற்றுதுரை	82
நீர்ப்பாசன நன்னிலம்	83
பச்சைமணி வடிவாய்	13
பஞ்சவர்கள் தூதன்என	27
பட்டஞ் சுமந்த முடி	105
பட்டப் பகல்போல்	38
பதினாறு மாகாணி	38
பதினெட்டு முனைகட்டி	64
பயிரன் சர்க்கரையவர்	74
பரிதிமதி சூழ்புவன	127
பன்னிரு கரத்தாய்	162
பன்னு பார்த்திப வரு	164
பாங்காய்ப் புகழ்கொண்ட	106
பாரும் கரியான் சர்க்கரை	105
பாழ்த்தவப் புற்றிரைச்சல்	42
பானிறமும் வெண்தூசும்	13
பிள்ளை சர்க்கரை மன்றாடி	89
பூதத் துணைகொண்ட	136
பூமகளும் நாமகளும்	100
பூமாது வாழும் புகழ்	48
பூவார் அதிகாலையி	115
பூவுக்கு அழகு செந்தாமரை	115
பெரிய சர்க்கரை உத்தம	95
பொன்பெருமை கூறி	149
பொன்மேரு அசைகினும்	83
மகிழ்ந்து காரைப்பதியில்	99
மங்கையொரு பாகர்	119
மஞ்சள் இஞ்சி கமுகு	23
மட்டுக் கடங்காத	103

மணங்கொண்ட காரை 93
மண்டலத்தில் கண்டுதொழ 29
மதிமூன்றுவரை 88
மதியினுப்பு றத்துவைக 84
மதுரபுரி கூடலில் 129
மதுரைகண்ட மாறன் 16
மருமைக்கன்னி மகேசுவரி 39
மருவளர் செந்திரு 43
மருவூரும் கோதை 53
மறையவனைச் செகம் 15
மனிதரில் கூன்குருடு 66

மாடலர்கோன் கொற்றை 43
மாதிலக்குமி உத்தமி 145
மாந்தரர்க்கும் 20
மாற்றலர்மண் கொள்ளும் 121

மிண்டாறை வாணனை 135

முடிவாங்கி வைத்து 39
முந்தணலா ஆதிவடி 163
முன் கலிவந் தடுத்த 147
முன்னம் கறவைப்பசு 86

மூவரசர் பசுபதிபார் 23
மூவருக்கும் அகத்திய 128

மேகம் உறையுதலால் 41
மேழி பிடிக்குங்கை 36

மொட்டைச் சோள 33

வடக்குப் பெரும்பாலை 19
வடக்கெல்லை பாலமலை 19
வண்டுற்ற சோலைதிகழ் 112
வரிகள் கடுமையாய் 40
வல்லபத்தில் பூமிசையில் 85
வளமைதிகழ் கலியுக 130
வாகாதென் கூறைகுல 128
வாக்கும் சொற்பொலிவும் 47
வாங்கலான் பாட்டன் 115
வாங்கிவர விசய நகர 98
வாணன் உரைத்திட 102
வாய்த்த புகழ் 158
வானிகூடல் பதிக்கு 157

வில்லார் பொதுச் சபை 44

வீதி வேழமா உலாவும் 163
வீமண மளாவுசிறு 50

வெள்ளோடை ஆம்பல் 30
வெற்றிபுனை கலியுக 57

வேதமுனி குன்றுறைந்தான் 36
வேணாடுடையான் வெள் 107
வேயாரும் தோளி உமை 58
வையம் நீடுக மாமழை 160

பதிப்பாசிரியர் குறிப்பு

'கல்வெட்டறிஞர்'

புலவர் **செ.இராசு** எம்.ஏ.,பிஎச்.டி.,

துணைவியார் **கௌரி**யுடன்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளமுத்துக்கவுண்டன் வலசில் 16.01.1938 அன்று பிறந்தவர். பெற்றோர் ந. சென்னியப்பகவுண்டர் - நல்லம்மாள். ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் பள்ளியிறுதிக் கல்வியை முடித்து, திருப்பனந்தாள் காசிமடம் செந்தமிழ்க் கல்லூரியில் 'வித்துவான்' பட்டம் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1959-63 செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியிலும், 1963-80 சி.எஸ்.ஐ. உயர்நிலைப்பள்ளியிலும், தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். 15 மாதம் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை ஆய்வாளராகப் பணியாற்றினார்.

பண்டைய தமிழ் எழுத்துக்களைப் படித்து கல்வெட்டு, செப்பேடு, ஓலைச் சுவடி ஆய்வு அனுபவத்தால் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டு - தொல்லியல் துறையில் முதல் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தார். பேராசிரியரா கவும், துறைத் தலைவராகவும் பணியாற்றி (1982-1998) ஓய்வு பெற்ற பின் மூன்றாண்டு பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்தார். பல்கலைக் கழகத்தின் முதல் நூலாகிய 'தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்' நூலை வெளியிட்டார் (1983). அந்நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றது.

'கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்', 'சேதுபதி செப்பேடுகள்', 'புதுக்கோட்டை-அறந்தாங்கித் தொண்டைமான் செப்பேடுகள்' ஆகியவைகளைப் பெரும் தொகுதிகளாக வெளியிட்டார். தமிழக இஸ்லாமியர், வேட்டுவர், செங்குந்தர் சமூக கல்வெட்டு, செப்பேடுகளை நூல்களாக வெளியிட்டார். நொய்யல் கரைக் கொடுமணல் தொல்லியல் வளத்தைக் கண்டறிந்ததுடன் காலிங்கராயன், சின்னமலை, கச்சத்தீவு ஆய்வு நூல்களையும் வெளியிட்டார். ஈரோடு கலைமகள் பள்ளியில் வரலாற்றுப் புகழ் பெற்ற ஒரு அருங்காட்சியகத்தை நிறுவினார். அமரர் எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழரே என ஆய்ந்து நூல் வெளியிட்டார்.

1974 யாழ்ப்பாணம், 1987 கோலாலம்பூர் மாநாடு உட்பட 5 உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் பங்கு பெற்றார். கோவை செம்மொழி மாநாட்டில் முக்கியப் பங்கேற்றார். ''கல்வெட்டறிஞர்'', ''தொல் ஆய்வுக் காணியாளர்'' உட்பட இருபது பட்டங்கள் பெற்றதுடன் ''தமிழகத் தொல்லியல் கழகம்'', ''இந்தியக் கல்வெட் டாய்வாளர் கழகம்'' அளித்த செப்பேடு விருது பெற்றார். தமிழக அரசு அறிவித்த முதல் ''உ.வே.சா.விருது'' (2012) இவருக்கு அளிக்கப்பட்டது. 1995ல் ''கொங்கு நாடும் சமணமும்'' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார்.

130 நூல்களையும், 300க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஈரோட்டில், ''கொங்கு ஆய்வு மையம்'' என்ற பெயரில் தொடர்ந்து ஆய்வு செய்து பல நூல்களை வெளியிட்டு வருகிறார்.